Registered at the G. P. O. as a Newspaper

வாரப்பதிப்பு விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO—12.

**கலைச் செல்வி**

சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், அறிவரங்கம், வளரும் எழுத்தாளர் பகுதி முதலிய விசேட பகுதிகளுடன் ஒவ்வொரு தமிழ் மாதம் முதலாம் திகதிகளிலும் மலரும் திங்களிதழ்

தனிப்பிரதி: 35 சதம் — ஆண்டு சந்தா ரூ. 4/-

க லை ச் செ ல் வி

கந்தரோடை : : சுன்னாகம்

புத்தகம் 12 திருவள்ளுவர் ஆண்டு 1990 தைத் திங்கள் 19-ம் நாள் 1—2—1959 ஞாயிற்றுக்கிழமை றஜப் பிறை 22 இதழ் 35

# கைக் கூலி கொடுத்து சுதந்திர தினம் கொண்டாடுவிக்கச் சூழ்ச்சி

## ஆலய முகாமைக்காரர்களுக்கு அரசாங்கத்தின் சுற்று நிருபம்

### ஐம்பது முதல் ஐந்நூறுவரை துரோகிகளுக்கு சுளை சுளையாகப் பணம் கிடைக்குமாம்

(சுதந்திரன் நிருபர்)

கைக் கூலி கொடுத்து தமிழ்ப் பகுதிகளில் சுதந்திர தினத்தைக் கொண்டாட வைப்பதற்கு அரசாங்கம் ஒரு சூழ்ச்சித் திட்டத்தை வகுத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதஸ்தாபன முகாமைக் காரர்களுக்கு, அரசாங்க மாகாண அதிபர்கள், டி. ஆர். ஓக்கள் மூலமாக அனுப்பியுள்ள ஒரு இரகசிய சுற்று நிருபத்தில் சுதந்திர தின பூஜை, பிரார்த்தனை அல்லது ஆராதனை நிகழ்த்தினால் ரொக்கமாகப் பணம் தரப்படும் என்று ஆசை காட்டப்பட்டிருக்கிறதாம்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் பெப்ரவரி 4— சுதந்திர தினத்தை வழக்கம்போல் துக்க தினமாக அனுஷ்டிப்பது என்று உறுதி கொண்டுள்ளார்கள். இந்த உறுதிப் பாட்டினை முறியடிப்பதற்கு அரசாங்கம் கைக் கூலி கொடுத்து காரியம் பார்க்க திட்டம் வகுத்திருக்கிறது.

தமிழ்ப் பகுதிகளிலுள்ள முக்கியமாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள- இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ கோ[illegible]ல்கள், இஸ்லாமிய மசூதிகள் [illegible]யவற்றின் முகாமைக்காரர்களுக்கு ஆவ காங்குள்ள அரசாங்க மாகாண அதிபர்கள் டி. ஆர். ஒக்கள் மூலமாக ஒரு சுற்று நிருபத்தை அனுப்பியுள்ளனர்.

சுதந்திர தினத்தன்று மேற்படி வணக்க ஸ்தலங்களில் விசேஷ பூஜை, ஆராதனை அல்லது பிரார்த்தனை நிகழ்த்துவதானால் அரசாங்கம் ரொக்கப் பணம் மான்யமாகத் தரத் தயாராய் இருப்பதாகப் பிரஸ்தாப சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ் விதமாகக் கைக் கூலி தரப்படும் என்று சிங்களப் பகுதிகளிலுள்ள பௌத்த ஆலயங்களுக்கோ அன்றி இதர சமயஆலயங்களுக்கோ சுற்றறிக்கைகள் அனுப்பப் படவில்லை, ஆகவே, இது அரசாங்கத்தின் பொதுக் கொள்கை அல்லவென்பதும், தமிழ்ப் பகுதிகளில் உள்ள உறுதி குன்றிய ஆலய முகாமைக் காரர்களுக்கு இலஞ்சம் கொடுத்து ஆசை காட்டி சுதந்திர தினத்தைத் தமிழ்ப் பிரதேசங்களிலும் எப்படியும் கொண்டாட வைத்து விடுவதற்கு அரசாங்கம் தீட்டியுள்ள ஒரு சூழ்ச்சித் திட்டம்தான் என்பதும் பெறப்படுகிறது.

சுதந்திரதின ஆராதனை நடத்தச் சித்தமானால் ஆலயத்தின் தகுதிக்குத் தக்கபடி ரூ 50/- முதல் ரூ 500/- வரை தர அரசாங்கம் தயா

(9-ம் பக்கம் பார்க்க)

## மலைநாட்டு மாணவி

மேல் படிப்புக்கு யாழ் நகர் செல்கிருர்



செல்வி வ. பத்மா

மலைநாட்டு மாணவி செல்வி வ. பத்மா மேல் படிப்புக்காக யாழ்நகர் சென்றுள்ளார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னுள் தலைவரும் கோப்பாய் பிரதிநிதியுமான திரு. கு. வன்னியசிங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட உபகாரச் சம்பளத்தில் படிக்கச் செல்லும் முதல் மலைநாட்டு மாணவி இவரேயாவர்.

செல்வன் வை. இரங்கனும் பத்மாவோடு சென்றிருக்கிருர். பதுளை பாரதி கல்லூரியின் மூலம் சென்றிருக்கும் இவ்விருவரும் எச். எஸ். ஸி. வகுப்பில் படிப்பார்கள்.

மேற்படி கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. இராமசாமி மேற்பார்வையில் யாழ் நகர் சென்ற பத்மாவையும் இரங்கனையும் பல மாணவர்களும் மாணவிகளும் நண்பர்களும் தமிழ் அன்பர்களும் வாழ்த்துக் கூறி பதுளையிலிருந்து வழியனுப்பி வைத்தனர்.

# மூதூர் தொகுதியில் மும்முரமாகத் தமிழ் ஒழிப்பு

## போட்டங்காடும் கல்லரிப்பும் 'அக்போ புர' 'சோம புர' ஆகின்றன

### ஆனல் அலியோ அரைமந்திரிப் பதவிக்கு கொட்டாவி விடுகிருர்

(நமது நிருபர்)

மூதூர்த் தொகுதியில் தமிழ் ஒழிப்பு வேலை மும்முரமாக நடைபெற்று வருகிறது. தமிழ் ஊர்ப் பெயர்கள் எல்லாம் சிங்கள மயமாக்கப் படுகின்றன. 'சிங்கள மரைக்கார்' என்றழைக்கப்படும் தபால் தகவல் அமைச்சரே இக்காரியத்தை முன்னின்று நடத்தி வருகின்ருர் என்று தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலின் போது 'தமிழுரிமைக்காகத் தனித்து நின்று போராடுவேன்' என்று சூளுரைத்து வெற்றியீட்டிய மூதூர்ப் பிரதிநிதி ஜனுப் எம். ஈ. எச். முகம்மது அலி, சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றிய திரு. பண்டாரநாயகாவின் அரசாங்கக் கட்சியை அலங்கரிக்கும் ஒரு அங்கத்தவராக இன்று விளங்குகிருர். ஆனல் அவரது தொகுதியிலேயே நாளிலும் பொழுதிலும் தமிழுக்கு நாசகார வேலை நடந்து வருகிறது.

கந்தளாய் என்ற தமிழ்க் கிராமம் ஏற்கனவே "கந்தளாவ" ஆக்கப்பட்டது. இப்போது கந்தளாய்க்கு அடுத்துள்ள "போட்டங்காடு" என்ற கிராமம் "அக்போ புர" ஆக்கப் படுகிறது. தபால் கந்தோர் "சீல்"

(8-ம் பக்கம் பார்க்க)

## சட்டமும் சமூகமும்



திரு. எஸ். சபாபதிப்பிள்ளை

வீதியிலே வலது பக்கத்தால் வண்டியை ஓட்டிச் செல்லும் ஒருவரைப் பொலீஸ்காரர் வழி மறித்து "ஏன் இப்படிச் செய்தாய்?" என்று கேட்கிருர். அப்போது வண்டிக்காரர் "இப்படிப் போகக் கூடாதா? தெரியாமல் செய்து விட்டேன்" என்று மன்னிப்புக் கோருகிருர். அவர் செய்தது சரியா? இல்லை.

நீதி மன்றங்களிலும் இதே நிலைமைதான். ஒருவர் குற்றம் செய்து அதனல் நீதி மன்றத்தில் நிற்க நேர்ந்துவிட்டால் "தெரியாமல் செய்து விட்டேன்" என்று மன்னிப்புக் கோர இடமில்லை. இன்றைய உலகில் சட்டத்தை எவரும் தெரிந்திருக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

நமக்கு வழக்குப் பேச அல்ல; சாதாரண சமூக வாழ்க்கைக்கே எத்தனையோ சட்டங்களை அறிந்திருக்க

(8-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் சங்காரி

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

Richelet's Blood Purifier




இரத்தத்தைச் சுத்திகரித்து

★ மூலம்
★ வாதம்
★ படை

இவைகளைச் சங்காரம் செய்கிறது.

பெண்களின் மாதவிடாய்க் கோளாறுகளைச் சரிப்படுத்துவதில் நிகரற்றது! ஆகவேதான் ஆண், பெண் இருபாலருக்குமே சிபார்சு செய்கின்றனர் மருத்துவ வல்லுநர்கள்.

வி. பி. பி. யில் வேண்டுவோர் ரூ. 2-00 அட்வான்ஸ் அனுப்பினல் மீதித் தொகைக்கு வி. பி. பி. யில் அனுப்பப்படும்

யாழ்ப்பாணம் கிராண்ட் பஜாரில் றேயல் டிஸ்பென்ஸரி மற்றும் எல்லா ஊர்களிலுமுள்ள மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

16 வயதிற்குட்பட்ட உங்களின் குழந்தைகளுக்கு ரிச்லெட்ஸ் வெஜிடபல் டொனிக் வாங்கிக் கொடுங்கள். பலவித நோய்களை போக்கி, போஷாக்கை, அளிக்கும்

சோல் ஏஜண்ட்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

170, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

**இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பறியும் தொடர் நவீனம்:

# நீலவேணி

"நவம்"

## (18)

## குண்டு வெடித்தது

தனக்கேற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மின்வெட்டு நேரத்தில் தெளிவடைந்த நிழல் மனிதன், தன் சுழல் துப்பாக்கியை 'ரெடி' பண்ணிக்கொண்டு பங்களாவின் உட்புறத்துக்குக் காற்றைப்போல் விரைந்து சென்றான். ஏற்கனவே அவனுக்குத் தெரிந்திருந்த கள்ள வழி அவனுக்குப் பெரிதும் உதவிபுரிந்தது.

அஜந்தா நித்திரை செய்யும் அறைக்குள் லாவகமாக நுழைந்த அவன் மறைவான ஓரிடத்தில் போய் நின்றுகொண்டு, 'டுப்ளிகேட்' நிழல் மனிதனின் நடவடிக்கையைக் கவனிக்க ஆயத்தமாகிக்கொண்டான்.

சிறிது நேரத்தில், அந்த அறையின் 'பல்ப்' பக் என்று ஒளிபெற்றது. அறையில் குடிகொண்டிருந்த இருள் கரைந்து எங்கும் பிரகாசம் பரவியது. அஜந்தா கடைந்தெடுத்த சிலைபோன்று எந்த விதக் கவலையுமின்றி ஆழ்ந்த நித்திரை செய்துகொண்டிருந்தாள். தன் கணவனை டிஸ்பன்ஸரியில் சந்தித்து அவனுடன் பரிவுடன் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு வந்தாள். அவள் உள்ளத்தில் புதிய நம்பிக்கை பிறந்திருக்க வேண்டும். அவள் முகத்தில் காந்தி வீசிக்கொண்டிருந்த கோலம் அப்படி எண்ணத் தூண்டியது.

கதவைத் திறந்துகொண்டு அடிமேல் அடி வைத்தபடி அஜந்தாவின் கட்டிலை நெருங்கிக்கொண்டிருந்தான் புதிய நிழல் மனிதன். அவன் தோற்றத்தை மறைவிலிருந்த நிழல் மனிதனால் இப்பொழுது நன்கு கவனிக்க முடிந்தது. தான் அணிந்திருந்த மாற்று வேஷம் போன்று பயங்கரமாகவே புதியவனும் உடையணிந்திருந்தான்.

கட்டிலை நெருங்கிய புதியவன் முன்பின் யோசித்தவனாகத் தெரியவில்லை. எந்த விதக் கூச்சமோ பண்பாடோ இன்றி அஜந்தாவின் மலர் மேனியைத் தொட்டு 'உலுப்பி' எழுப்பினான். அவன் அப்படி அவளை உரிமையுடன் தொட்டு எழுப்பிய பாணி, நம் உண்மை நிழல் மனிதனை என்னவோ செய்தது. அந்த இக்கட்டான நிலையில் இயல்பாகவே மனிதனுக்குள்ள சந்தேகப் புத்திக்கும் அவன் ஒருகணம் அடிமையானான்.

'ஒருகணம் அப்படியும் இருக்கலாமா? சாந்தமே உருவான அஜந்தா அத்தகைய இழிநிலையைச் செய்யக்கூடியவளாக இருக்க முடியுமா? சே! என்ன கேவலமான—கீழ்த்தரமான—மட்டரக எண்ணம்!......இல்லாவிட்டால் வந்த புதியவன் ஏன் இவ்வளவு அந்நியோந்யமாக அஜந்தாவைத் தீண்ட வேண்டும்? நிழல் மனிதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் எண்ணுவது போல் அப்படி அஜந்தா நடப்பவளாக இருந்தால், இந்த நிமிஷமே நாம் இங்கிருந்து மறைந்துவிட வேண்டும்' என்று எண்ண அலைகளில் மிதந்துகொண்டிருந்த அவனை நிலைகலங்க வைத்தது அந்தக்கணம் அங்கு நடந்த பேய்க் காட்சி.

தன்னை யாரோ தொட்டு எழுப்புவதை உணர்ந்த அஜந்தா வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்தாள். தன் எதிரில் கன்னங்கரேல் என்று நின்ற பேயுருவத்தைக் கண்டதும் அவள் விழிகள் மிரள மிரள விழிக்கத் தொடங்கிவிட்டன.

"நீங்கள்...நீங்கள்...நிழல் மனிதனா?" என்று அவள் நாக் குளறியது.

"ஆம்" என்று கம்பீரமாகப் பதில் கூறினான் அருகே நின்ற புதியவன்.

நம் உண்மை நிழல் மனிதனுக்குப் பளீரென்றது! அப்படியே சுழல் துப்பாக்கியால் தீர்த்துக் கட்டிவிடுவோமா என்று எண்ணினான் அவன்.

அடுத்தகணம், அப்படி அவசரப்பட்டுச் செய்துவிட்டால், உண்மை நிழல் மனிதனுக்கும், போலி நிழல் மனிதனுக்கும் வித்தியாசம் தெரியாது அஜந்தா திகைத்துவிடக்கூடும் என்று தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு, மேலே என்ன நடக்கிறதென்பதைக் கவனிக்கலானான் அவன்.

"இந்தவேளை இப்படித் 'திடுதிப்' என்று நீங்கள் ஏன் இங்கு வந்தீர்கள்?' என்று கேட்டாள் அஜந்தா.

"உஷ்! மெள்ளப் பேசுங்கள் அம்மணி! எல்லாம் காரியமாகத்தான் வந்தேன். காரியமில்லாமல் இந்த நிழல் மனிதன் எதையுமே செய்[illegible] மாட்டான்.

"நிஜமாகவா? நான் இப்போ என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்"

ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் இன்று டிஸ்பன்ஸரிக்குச் சென்றது உங்கள் கணவர் தணிகாசலத்தின் தடித்த மனசை மாற்றிவிட்டது. மியூரியலின் தொடர்பை அறுத்துவிடத் துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கிறார் அவர். நீங்கள் இப்போ ஒன்றும் பேசாமல் என் பின்னால் வர வேண்டும்"

நிழல் மனிதன் தன் கணவரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் சொல்லியது அவள் உள்ளத்தில் தித்திக்கும் தேனை வார்த்தது. நிழல் மனிதனில் அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததால் உண்மையில் தன் கணவர் மனம் மாறிவிட்டார் என்றே அவள் கருதினாள்.

"உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி. என் விஷயத்தில் நீங்கள் எடுக்கும் அக்கறையை நான் என் உயிருள்ளவரைக்கும் மறக்கமாட்டேன். சரி; இப்போ நாம் எங்கே போக வேண்டும்?" என்று கேட்டாள் அஜந்தா.

"அதற்குள் நிபந்தனையை மறந்துவிட்டீர்களே! நான்தான் சொன்னேனே ஒன்றும் பேசாமல் நீங்கள் என் பின்னால் வர வேண்டும் என்று" என்று தன் நிபந்தனையை ஞாபகப்படுத்தினான் அந்தப் புதியவன்.

பேதை அஜந்தா அதை நம்பிக்கொண்டு புதியவனுடன் போக ஆயத்தமானாள். மறைவிலிருந்த நிழல் மனிதனின் மூளையில் விறுவிறு என்று சூடேறியது. மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு கணத்துள் அவன் தீர்மானித்துக்கொண்டான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்த நிழல் மனிதன் கண்வெட்டிக் கண் திறக்கும் நேரத்தில் அந்த இடத்திலிருந்து மாயமானான்!

பங்களாவின் பூங்காவுக்குள் வந்த நிழல் மனிதனுக்கு புதியவன் கொண்டு நிறுத்தியிருந்த கார் ஞாபகம் வந்தது. நேரே கார் அருகில் பாய்ந்து சென்றான். காரைத் திறக்க அவன் செய்த முய[illegible]சி தோல்வியில் முடிந்தது. காரைப் போட்டுவிட்டுச் சென்ற அந்தப் புதிய மனிதன், அதைப் பூட்டிவிட்டுச் சென்றிருந்தான். உடனே அவனுக்கு தணிகாசலத்தின் கார் ஞா[illegible] வந்தது.

அன்றொருநாள் ஸீபேஸ் ஹோட்டலில் தணிகாசலத்தின் காரின் பின்னால் லாகவமாக ஏறிப் பின்னால் டயரோடு டயராக ஒட்டிக்கொண்டிருந்த காட்சி ஞாபகம் வந்தது.

அதே முறையை இந்தக் காரிலும் கையாள வேண்டியதுதான்! அஜந்தாவை அழைத்துக்கொண்டு வரும் புதியவன் நிச்சயம் இந்தக் காரில்தான் அவளைக் கடத்திக்கொண்டு செல்லப்போகிறான். முன்னர் விட்ட தவறை இந்தத் தடவை நிச்சயம் நாம் விடக்கூடாது. கொஞ்சம் துடுக்காக அன்றே காரியமாற்றியிருந்தால் டோரினின் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம். நம் அசமந்தத்தால் அன்று ஒரு அதிமுக்கியமான உயிரை இழக்கும்படியாகிவிட்டது. இந்தத் தடவை அப்படியிருக்கக் கூடாது. அஜந்தாவை நல்ல எண்ணத்துடன் வந்திருப்பவன் கடத்திக்கொண்டு போகவில்லை. அவளைத் தீர்த்துக்கட்டுவதற்காகவே அவன் வந்திருக்க வேண்டும். அஜந்தாவைத் தொலைக்க எடுத்துக்கொண்ட முயற்சியின் தொடர்தான் இன்று இந்தப் புதியவனின் திடீர் விஜயம்! அஜந்தா இறந்தால்...? அதற்குமேல் நிழல் மனிதனால் சிந்திக்க முடியவில்லை. காரின் பின்பக்கம் ஏறி ஒண்டிக்கொள்வதற்காக, பின்பக்கமாக வந்தான்.

என்ன துரதிர்ஷ்டம்! தணிகாசலத்தின் காரைப் போன்று இந்தக் கார் பழைய பாடாவதி 'இஸட்' மாடல் காராக இருக்கவில்லை. சிறீ பொரித்த புத்தம் புதுக் காராக இருந்தது. அதனால் பின் புறத்தில் ஒண்டிக் கொள்ள அதில் வழி இருக்கவில்லை. 'என்ன செய்யலாம்' என்று எண்ணிக்கொண்டிருக்கும் போது, சற்றும் எதிர்பாராத விதமாக பங்களாவுக்குள் ஒரு பயங்கரமான வெடிச் சத்தம் கேட்டது?...பங்களா அதிர்ந்தது!...

## (19)

## அழகேசன் வந்தான்!

நிழல் மனிதன் நடுநிசியில் தந்துவிட்டுப் போன காகிதக் கற்றையுடன் இரண்டறக் கலந்துவிட்ட நீலவேணியின் கோலத்தைச் சென்ற அத்தியாயத்தில் நாம் பார்த்தோம்.

இருளை நீக்கிக்கொண்டு தன் இளம் பொற்கரங்களை நீட்டிய சூரியனின் குளிர் ஒளிகூட அவள் கவனத்தைக் குலைக்கவில்லை. அப்படி ஒன்றிக் கிடந்தாள்.

தடதட என்று யாரோ பலமாகக் கதவில் தட்டினார்கள். நீலவேணியின் கவனம் சற்று இந்த உலகத்துக்குத் திரும்பியது.

"யாரது?" என்று கேட்டுக்கொண்டு வந்து கதவைத் திறந்தாள். அந்த அதிகாலை வேளையில் அழகேசனைக் கண்டதும் அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது. தவிரவும் அவன் நின்ற பரபரப்பான கோலம் அவளை என்னவோ செய்தது.

உடனே நீலவேணிக்கு அன்று இரவு நடந்த சம்பவம் ஏனோ நினைவுத்திரைக்கு வந்து அவளைப் பிழிந்தது. 'அழகேசன் நிச்சயம் இன்று வரமாட்டான் அது எனக்கு நிச்சயமாகத் தெரியும்!' என்று நிழல் மனிதன் கூறிய வாசகம் அவள் செவிகளில் 'கணீர்' என்று ஒலித்துக்கொண்டிருந்தது. அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. எல்லாமே குழப்பமாக இருந்தது. எண்ணிப் பார்க்க முடியாத பல புதிய சந்தேகங்கள் தோன்றி அவளை அரித்தெடுத்தன.

தன் எதிரில் நின்ற அழகேசனிடம், "அண்ணு! இராத்திரி பூராவும் எங்கேபோயிருந்தாய்?" என்று குழந்தை போல் கேட்டாள் நீலம்.

அழகேசன் பதிலே பேசவில்லை. நேரே 'விடு, விடு'என்று மாடி ஏறிப் போய்விட்டான்.

அவன் மௌனம் நீலாவை இன்னும் கலவரப்படுத்திவிட்டது. ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாகக் காணப்பட்ட அவள் நேரே அழகேசன் அறைக்குச் சென்றாள்.

"அண்ணு!"

"என்ன நீலம்?"

"உன் கண்கள் ஏன் கோவைப் பழம்போலச் சிவந்திருக்கின்றன? இராத்திரி தூங்கவே இல்லையா?"

"தூக்கமா?"

"என்னைப் பயப்படுத்த வேண்டாம் அண்ணு! இராத்திரி முழுக்க நீ எங்கே போயிருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்? ஏன் உன் கண்கள் சிவந்துபோயிருக்கின்றன? இந்த விபரமெல்லாம் எனக்கு இப்போ தெரிய வேண்டும்!"

"வான வீதியில் இரா முழுக்க நீந்தி விளையாடிக்கொண்டிருந்தேன். அங்கே எண்ணற்ற இளம் தாரகைகளுடன் இரண்டறக் கலந்துகொண்டிருந்தேன். பூரண சந்திரன் வந்தான். புன்முறுவல் பூத்தான். அந்தப் புன்முறுவல் பொன்முகம் உடனே ஒரு மலர்முகமாக மாறியது. கட்டவிழ்ந்து காணப்பட்ட அந்தப் புத்தம் புது மலரில் தேங்கிக்கிடந்த தேன் குழம்பை உறிஞ்சி ரஸிக்க எங்கிருந்தோ வண்டு ஒன்று 'நொய்' என்று பண் இசைத்துக்கொண்டு வந்தது. அந்தக் கருவண்டைத் தொடர்ந்து 'இன்னும் பல நூற்றுக்கணக்கான கருவண்டுகள் பறந்து வந்தன. தேனை உண்டன. தியங்கிக் கிடந்தன. மயங்கி மருண்டன..."

அழகேசனின் வர்ணனை நீலவேணியின் தலையைச் சுழற்றியது. 'பைத்தியம் பிடித்துவிட்டதோ?' என்று கூட எண்ணினாள்.

"அண்ணு!" என்று கத்திவிட்டாள்.

"இன்னும் கேள் நீலா!"

"போதும். கேட்டவரையில் திருப்தி. அண்ணு! நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். செய்வதையும் செய்துவிட்டு மழுப்பப் பார்க்கிறாய். நான் ஏதோ கேட்க, நீ ஏதோ 'வண்டு-பூ-வானவீதி' என்று கதை அளக்கிறாய்!'

(10-ம் பக்கம் பார்க்க)

போன்: 281. தந்தி: "ஜுவல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள் !
அழகிற் சிறந்த ஆபரணங்கள் !!
யாவற்றிற்கும்
ஈழத்திருநாட்டில் இணையற்ற ஸ்தாபனங்கள்

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ் & தங்க மாளிகை

யாழ்ப்பாண
உத்தரவாதமுள்ள எல். கே. எஸ். நகைகளையே அணிந்து ஆனந்தமடையுங்கள்.
கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்குத் தொழில் கவிதை

## தொல்லைகள் நம்காலில் தூசு

அறப்போர் அறியாத ஐந்தறிவு வீரர்
வெறுங்கைத் தமிழர்மேல் வீழ்ந்து—மறம் சாட்டி
வெல்ல முடிந்திடுமோ வீணே அவர்முயற்சி!
தொல்லைகள் நம்காலில் தூசு

—ம. ஜீவரத்தினம், முகத்துவாரம்

கன்னற் தமிழே! கனியே! கவிச்சுவையே!
இன்னல் எதுவரினும் ஏற்போம்நாம்—மன்னுதமிழ்க்
கொல்லையிலே பூத்த கொடியே! கொடியவரின்
தொல்லைகள் நம்காலில் தூசு

—சே. அருணன், திருகோணமலை

காடழித்து நாடாக்கி கல்லுடைத்து வீடமைத்து
பீடுறவே நாம்வாழ்ந்தோம் பேருலகில்!—பேடேகேள்
புல்லர்கள் சேர்ந்தொன்றாய் புத்தியின்றித் தான்செய்யும்
தொல்லைகள் நம்காலில் தூசு

—ஐ. இராசரத்தினம், சுன்னாகம்

எல்லையால் காலத்தால் இன்பத்தால் அன்பாலே
கல்வியால் கள்ளமிலாப் பண்பாலே—நல்லுலகில்
அல்லல் தொலைப்போம் அமரர்கள் வாழ்வுறுவோம்
தொல்லைகள் நம்காலில் தூசு

—ஆ. ச. கண்ணன், பருத்தித்துறை

காவல்நா யெல்லாங் கடிநாய் 'விசர்'நாயாய்
ஆவதேல் நாய்க்கடிமை ஆவதோ—சாவளிப்போம்;
பல்லிளித்துத் தாழ்ந்து பணிந்திடோம்; பண்டாவுன்
தொல்லைகள் நம்காலில் தூசு

—செல்வி இ. உமா. எழுவை தீவு

பண்டைப் பரம்பரைச்சொத் திந்நாடு, நம்நாடு
கொண்டல்லால் குந்தி இருக்கிலோம்—கண்டுகொள்க;
இல்லை இனித்தூக்கம் எம் இறுதி மூச்சுவரை
தொல்லைகள் நம்காலில் தூசு

—ந. டே. குணரெத்தினம், ஒவிலிக்கந்தை

வேங்கை கயலோடு வில்லும் பொறித்தகொடி
தாங்கிநிற்கு தெங்கள் தமிழ்நாடு—பூங்குயிலே!
சொல்லுவாய் ஈதை; தொழுதிடவோநாம்? அவரின்
தொல்லைகள் நம்காலில் தூசு

—சி. பொன்னுத்தம்பி, செங்கலடி

கட்டுப் பொசுக்கிடினும் வெட்டித் தறித்திடினும்
விட்டுக் கொடுப்போமோ வீரத்தில்—அட்டியில்லை
வெல்லத் தமிழ்வெல்ல வீசுகவாள்! போராடு!
தொல்லைகள் நம்காலில் தூசு

—செ. கந்தசாமி, யாழ்ப்பாணம்

தில்லை வெளியிற் கலந்தவர்தா னென்றாலும்
அல்ல லணுகா திருந்ததுவோ?—இல்லையே
பல்லிளித்து நாங்கள் பயந்தொதுங்கி நிற்பதில்லை;
தொல்லைகள் நம்காலில் தூசு

—க. சுப்பிரமணியம், காரைதீவு

வீர மரபினிலே வீறுகை வோ பிறந்தோம்
ஈரந்தா னில்லையோ எம்நெஞ்சில்—போரினிலே
நல்ல தமிழ் நாட்டை நாம்காண வாரீர்கள்
தொல்லைகள் நம்காலில் தூசு

—செல்வி புவனேஸ்வரி இராசையா, அக்கரைப்பற்று

கேட்டலும் எம்உரிமை மீட்டலும் ஒண்புகழை
சூட்டலும் எம்மவருக் கேற்காதோ?—வாட்டுமவர்
எல்லையிலாத் துன்பத்துள் இட்டென்ன? சுட்டென்ன?
தொல்லைகள் நம்காலில் தூசு

—பாலகுரு சின்னச்சாமி, மட்டுநகர்

சேர்ந்திருந்தோம் ஈழத்திற் சென்றபல ஆண்டுகளாய்
ஓர்ந்துணரா தெம்மொழிக் கூறுசெய்தார்—கூர்ந்தமதி
வல்லமைசேர் மாத்தமிழர் வன்மை தெரித்திடுவோம்
தொல்லைகள் நம்காலில் தூசு

—அ. முருகவேள், மடுல்கொல்ல

பிரதமரும் நீயோ, நமது பிறப்புரிமைப்
பிரதேசம் உன்னதோ, பேதாய்?—உரிமைகளை
எல்லாம் மறுபடியும் எப்படியும் நாம் அடைவோம்
தொல்லைகள் நம்காலில் தூசு

—ஆ. வாமதேவன், தெல்லிப்பழை

சிறையுள் புகுத்தியவர் செக்கிழு என் றாலும்
குறையா துளத்துற்ற கொள்கை—மறைமொழியே
எல்லையிலாத் துன்பத் திடர்ப்படநாம் பார்த்திரோம்;
தொல்லைகள் நம்காலில் தூசு

—சி. பொன்னுத்தம்பி, செங்கலடி

போகட்டும் ஆவி; எனில் பொற்றமிழை யட்டுமிங்கு
'சாகட்டும்' என்றுவிட்டுச் சாகோம்நாம்—சீர்கெட்ட
இல்வறைகள் கூத்தைத் தெரிந்துகொண்டோம்ஆம் அவரின்
தொல்லைகள் நம்காலில் தூசு

—மு. பொன்னம்பலம், இரத்தினபுரி

ஈழத்தி லேதமிழை என்றைக்கும் மங்காமல்
வாழவைக்கும் போரில் மடியநிற்கும்—தோழர்காள்!
இல்லச் சிறைமுதலாய் 'எம்.ஈ.பி,' தந்துநிற்கும்
தொல்லைகள் நம்காலில் தூசு!

—க. வே. கதிர்காமவேல், கர[illegible]

(தொகுப்பு: கவிஞர் "மஹாகவி")




சே. ஞானேஸ்வரன்,
சாவகச்சேரி.

கே: பெண்கள் ஏன் வயிறு தெரியும்படியாக இன்று ஆடையணிகிறார்கள்? குயுக்தியாரே, நீர் இதை வரவேற்கிறீரா?

ப: ஆம், வரவேற்கிறேன். கயவனின் கண்கள் கரவான நோக்குடன் கண்ட இடமெல்லாம் சுற்றி, மேடு பள்ளங்களை யெல்லாம் நாடுகின்றன? அப்போது இடையே தெரியும் கொடி வயிறு அவனுக்கு புத்தி புகட்டுகிறது. "அட, பாதகா, பத்துமாதம் நீ புகுந்து புரண்டு புறம் போந்த புனித உந்தியல்லவா இதோ இருக்கிறது. இந்த பூஜிதமான ஜென்ம ஆலயத்தை மறந்து நீ தாயான பெண்ணிடம் தகாத வெறிகொள்ளலாமா, மடையனே?" என்று அந்த மணி வயிறு அவனுக்கு இடித்துரைக்குமல்லவா? பக்த சிரேஷ்டர் பட்டினத்தார் காலத்துப் பெண்களும் இப்படி வயிற்றை வெளியே காட்டியிருந்தால் அன்னார் "பிறந்த இடத்தை நாடுதே பேதை மட நெஞ்சு, கறந்த இடத்தை நாடுதே கண்"

மன்ற படத்தில் சிவாஜி கணேசன் சாவித்திரிக்குத் துவாயால் அடிக்கிறார். நோகும்படி அடித்தாரா நோகாமல் அடித்தாரா?

ப: நோக அடிக்க விரும்பினால் சிவாஜிகணேசன் துவாயைத் தேட வேண்டியதில்லை. அவர் வாயால் அடித்தே சாவித்திரியைத் துடிதுடிக்க வைத்திருப்பார்.

கே: என் மனைவி உங்களுக்கு காதல் கடிதம் எழுதினால் என்ன செய்வீர்?

ப: அப்படியே பிரசுரித்து என் மனைவியிடம் எனக்குள்ள மதிப்பை உயர்த்திக் கொள்வேன்.

> மிஸ்டர் குயுக்தியார்
> C/o சுதந்திரன்.
> த. பெ. 1183
> கொழும்பு.—12

ஃ

தாசன், சில்லாலை.

கே: இணங்காத பெண்ணை மணந்து கொள்ள ஆசைப்டால் திருமதி குயுக்தியார் கேட்கும் ஓராயிரம் கேள்விகளுக்குப் பதில் கூறித் தப்பும் ஒருவன் வாசகர்களின் கேள்விகளுக்கு பதில் கூற வேறு ஒரு இடத்தில் கற்றுக் கொள்ள வேண்டுமா?

ஃ

திருமதி என். இராசம்மா,
கந்தகெதரை.

கே: ஏதோ தப்பி விட்டீர்கள். இனி நூறு வயது தான் என நினைக்கிறேன். அப்படித் தானே?

ப: வேண்டாம் அம்மா. அத்தனை வயதுக்கிருந்தால் எல்லோருக்கும் பாரமாய்ப் போகும். இந்தக் கட்டை நடமாடும் போதே கைலாசம் சேர்ந்துவிட ஆசைப் படுகிறது.

ஃ

செல்வி பஞ்சவர்ணம்
சொக்கநாதன், கொழும்பு

கே: இறந்தவர் மீண்டும் பிழைப்பதுண்டா?

ப: ஆம். வீரர்கள் இறந்தால் இறந்துவிடுகிறார்கள்; கோழைகள் அடிக்கடி பயத்தினால் இறந்து பாசத்தினால் பிழைக்கிறார்கள்.

ஃ

பு. பிள்ளையான், பட்டிருப்பு

கே: எதிர்மன்ன சிங்கம் என்றால் யார்?

ப: இதிங் தெறியாதா ஒனக்கு? அவன் தாருண்டா அவங் தாங் நம்ப எதிரி மன்ன சிங்கி!

ஃ

பெ. கருணாமூர்த்தி, கண்டி.

கே: கொம்யூனிஸ்டுகள் கூறுவதெல்லாம் பச்சைப் பொய் என்பது என் கருத்து, இது சரியா?

ப: இல்லை. பச்சையாக உள்ள எதையும் அவர்கள் செய்ய மாட்டார்கள். சிவத்தப் பொய் என்று சொன்னால் அவர்களே சரி யென்று ஒப்புக்கொள்வார்கள்.

ஃ

சி. பரம்சோதி, கற்கோவளம்.

கே: சமயத்திலிருந்துதான் விஞ்ஞானம் தோன்றிற்று என்கிறார்களே இது உண்மையா?

ப: உண்மைதான். சமயத்தின் புளுகுகளை திரை நீக்கி உண்மையைக் காட்டும் முயற்சியில் தான் விஞ்ஞானம் உதயமாயிற்று. அசுரன் சுருட்டிய உலகம் பாயைப் போன்றதல்ல என்று புராணத்தின் தலையில் சம்மட்டி கொண்டு அடித்து உலகத்தின் உருவம் உருண்டை என்பதைக் காட்டிய கலிலீயோ விஞ்ஞானியல்லவா?

கே: கையில் பணம் வைத்துக்கொள்ளாமல் நெடுங் காலம் இன்பம் அனுபவிக்க என்ன செய்ய வேண்டும்?

ப: உள்ள பணத்தை யெல்லாம் வங்கியில் போட்டு விட்டு கையில் செக் புத்தகத்தை மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்.

ஃ

எஸ். சிங்காரம், குருநாகல்.

கே: ஆலயத்தில் அடைபட்டிருக்கும் ஆண்டவனுக்கும் அரங்கத்தில் ஆடித் திரியும் அரசியல் வாதிக்கும் என்ன வித்தியாசம்?

ப: ஆண்டவனுக்குப் பேச முடியாது. அரசியல் வாதிக்குப் பேசாமல் இருக்க முடியாது. இதுதான் வித்தியாசம்.

## மந்திரி சபையில் மாற்றம்?

எம். டானியேல் றேச், மன்னார்

கே: குயுக்தியாரே, கடந்தவாரம் தங்கள் மந்திரி சபை அமைப்பைக் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தேன். திரு சுந்தரலிங்கத்[illegible]ருக்கு கொடுத்த இடந்தான் மிகவும் பொருத்தமாக இருந்தது. திரு வி. குமாரசாமிபோன்றாரை மந்திரி சபையில் சேர்க்காததால் அவர் பெரிய அட்டகாசம் செய்யப்போகிறாரே, என்ன செய்வது?

ப: செய்வது என்ன? "தமிழர் மந்திரி சபையில் 14 மந்[illegible]ளா? தொகை கூடிவிட்டதே" என்பது பொதுமக்கள் கருத்து. [illegible]கிகப்படியானாலும் [illegible] மந்திரிகளுக்கு மேல் தமிழர் மந்திரி [illegible] ஒருவர். இந்த நிலையில் எல்லோருக்கும் பதவி கொடுக்க முடியுமா?

என்றாலும் ஒரு சில மாற்றங்கள் குயுக்தியாரின் மந்திரி சபையில் எதிர்பார்க்கப்படுகின்றன. திரு கே. துரைரத்தினம் வர்த்தக வியாபார மந்திரியான திரு அல்பிரட் தம்பிஐயாவின் பாராளுமன்றக் காரியதரிசியாகப் போவார் என்றும், யாழ்ப்பாணம் திரு எஸ். சின்னத்துரை (ரிடயர்ட் போஸ்ட் மாஸ்டர்) வானொலி, தபால், தகவல், ஒலிபரப்பு உதவி மந்திரியாவாரென்றும் வதந்திகள் அடிபடுகின்றன. மன்னார் திரு ஏ. ஆர். ஜேம்ஸ் போக்குவரத்து தேசியசேவைகள் மந்திரியின் பாராளுமன்றக் காரியதரிசியாவார் என்று பேசிக்கொள்ளப்படுகிறது. திரு வி. குமாரசாமிக்கு "அடுப்படிப் போட்fபோலியோ" ஒன்று சிருஷ்டிக்கப்பட வேண்டும் என்பது அவருடைய ஆதரவாளர்களின் கோரிக்கை. இதைப் பிரதமர் நிராகரித்துவிட்டபோதிலும் அவர் இரிய கொல்லையாகிவிடமாட்டார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

என்று கலங்கிக் கதறி அதை அழகான வெண்பாவிலே யாப்பு அணிபூட்டி அழுதிருக்க வேண்டாம்.

கே: குயுக்தியாரே உமது தலைமயிர் படத்தில் பன்றி முள் போல விறைத்திருப்பதேன்?

ப: இதிலிருந்தே குயுக்தியார் ஒரு விறைத்த தலையன் என்பது புலனாகிறதல்லவா?

ஃ

த. ம. யே. அருள், குண்டசாலை.

கே: எனது தந்தை என்னைப் படம்பார்க்கக் கூடாது என்று தினமும் வற்புறுத்துகின்றார். இதன் காரணம் என்ன?

ப: ஒரு வேளை உம் தந்தை உன் தாயாரின் அழகைப் படத்தில் பார்த்து விவாகம் செய்து கொண்டு பின்னர் ஏமாந்தவராக இருக்கலாம். விசாரித்துப் பாரும்.

ஃ

[illegible]சுப்பிரமணியம்,
[illegible]

கே: அன்னையின் ஆணை

படும் ஆண்களின் பிரயத்தனம் எப்படிப்பட்டது?

ப: ஆடும் ஊசியில் நூலைக் கோக்க எத்தனிக்கும் அறியாமைக்கு ஒப்பானது.

ஃ

பி. நடராசா, இணுவில்.

கே: கல்லூரி மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாமா?

ப: "கல்லூரி என்பது கூடு. கூட்டில் குஞ்சு வளர வேண்டுமே தவிர பறக்கப் பழகக் கூடாது. இறக்கை பூரணமாக வளர்ந்தபின் வெளியில் பறக்கலாம்" என்கிறார் டாக்டர் மு. வரதராசனார். குயுக்தியாரின் கருத்தும் இதுவேதான்.

ஃ

செ. சுப்பிரமணியம்,
சாவகச்சேரி.

கே: குயுக்தியாரே, தங்களுக்குக் கிடைக்கும் வினாக்களுக்கு எங்கே விடை கற்றுக்கொண்டீர்கள்?

ப: இது என்ன பிரமாதம். வீடு வந்தால் பொழுது பட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்புக் காவலில் மூன்று மாதங்கள்

( 4 )

தெருவின் இருமருங்கும் இருபத்தைந்து யாருக்கு ஒரு ராணுவ வீரர்கள் நிறுத்தப்பட்டிருந்தார்கள். கொழும்பு நகரின் பிரதான தெருவில் — காலி வீதியில் இப்போது பொலீஸ் வண்டி போய்க் கொண்டிருந்தது. தெருக்களில் முன்பிருந்த களையில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக நடமாடிக் கொண்டிருந்த மக்களின் முகங்களில் மலர்ச்சியே இல்லை. பீதியும், கலக்கமும், கவலையும் ஒவ்வொருவரின் முகத்திலும் கோடிட்டுக் கிடந்தன.

### கோலாகலம் இல்லை

தெருவின் இரு மருங்கும் இடைக்கிடையே எரிந்து போன கடைகளும், வீடுகளும் தென்பட்டன. கன்னங்கரேலென்று அக்கட்டடங்களின் எரிந்து போன மீதிப் பகுதிகள் காட்சியளித்தன. யாருடைய வீடோ? கடையோ? அவற்றில் இருந்தவர்களின் கதி என்னவாயிற்றோ என்ற கவலை எம்மைச் சூழ்ந்தது. கொழும்பில் இருந்த கோலாகலமும் மகிழ்ச்சியும் எங்கோ மறைந்து விட்டன.

இரத்துமலானை மவுண்ட்லவினியா, தெகிவளை, வெள்ளவத்தை இப்படியான இடங்கள் மறைந்து கொண்டேயிருந்தன. எங்களை ஏற்றிக்கொண்டு சென்ற பொலீஸ் வண்டியும் போய்க் கொண்டே இருந்தது.

பம்பலப்பிட்டி கழிந்தாயிற்று. அதோ கொள்ளுப்பிட்டி, காலிமுகத்திடலையண்டிய வீதியில் வண்டி போய்க் கொண்டிருந்தது.

இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த சம்பவங்கள் என் மனத்திரையில் எழுந்து வட்டமிடத் தொடங்கின.

### சத்தியாக்கிரகம்

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தில் உள்ளும் வெளியிலும் எதிர்ப்பைக் காட்டுவதென்று தமிழரசுக் கட்சி அன்று தீர்மானித்தது.

வடக்கு—கிழக்கு மாகாணங்களிலிருந்து பல தொண்டர்கள் கொழும்பில் — பாராளுமன்றத்து முன்றிலில் சத்தியாக்கிரகம் செய்வதற்கு அழைக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கில் தமிழ்ப்பகுதிகளிலிருந்து வாலிபர்கள் — வயோதிபர்கள் நான் நீ என்று முன் வந்தார்கள். இவர்களில் பட்டதாரிகள், சட்ட நிபுணர்கள் டாக்டர்கள் — வைத்தியர்கள் — மாணவர்கள் — விவசாயிகள்—தொழிலாளிகள் நிரம்பியிருந்தனர். அவர்களில் ஒரு குறிப்பிட்ட தொகையினரை மட்டும் தெரிந்தெடுத்திருந்தோம். அவர்கள் கொழும்பு வந்திருந்தார்கள்.

### ரணகளம்

மட்டக்களப்பு பகுதியிலிருந்து பல தொண்டர்கள் அச்சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள என்னுடன் வந்தார்கள். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் மட்டக்களப்பு கோஷ்டியை எதிர் கொண்டு அழைத்துச் செல்ல வட்டுக்கோட்டை பிரதிநிதி திரு. அமிர்தலிங்கம் பல தொண்டர்களுடன் வந்திருந்தார்.

நாங்கள் புகையிரத நிலையத்திலிருந்து வெளியே வந்ததும் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. மழையையும் பொருட்படுத்தாமல் காலிமுக மைதானத்திலுள்ள தொண்டர்களுடன் சேர்ந்துவிட வெகு வேகமாக நடந்தோம். மைதானம் ஒரே அல்லோலகல்லோலமாக இருந்தது. எங்கிருந்தோ ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வைத்திருந்த காடையர்கள் தொண்டர்களைத் தாக்கிக் கொண்டிருந்தார்கள். காலிமுக மைதானம் ஒரு ரணகளம் மாதிரி காட்சியளித்தது. இதற்கிடையில் நாங்கள் எங்[illegible] தொண்டர்களை நெருங்கி விட்டோம்.

### எஸ். ஜே. வி.

தமிழ்ச்சாதி செய்த தவப்பயன் என்று நாம் கருதும் திரு. செல்வநாயகம் அவர்கள் வழக்கமான — தனக்கே உரித்தான மெல்லிய புன்முறுவலுடன் கைகூப்பி வணக்கம் செய்தார். அவருடைய மக்களைக் காடையர்கள் பந்தைப் போல் தாக்கியதை இருந்த இடத்திலேயே இருந்து பார்த்துக்

**மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை**

கொண்டிருந்தவர்—தன் மக்களைப் பற்றி அவர்கள் நிலை என்னவென்பது பற்றிஅவர் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. அவர் மழையினுல் தொப்பட்டமாக நனைந்திருந்தார்.

### வன்னியசிங்கம்

அடுத்து கோப்பாய் பிரதிநிதி திரு. வன்னியசிங்கம் அவர்கள் கிழிந்த வேட்டியும்—சட்டையும் இல்லாமல் காட்சியளித்தார். அவருடைய இடது கை மணிக்கட்டில் இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

அவரைத் தாக்கிய காடையர்களில் ஒருவன் கைக்கடிகாரத்தையும் வாயால் கடித்து "அபேஸ் பண்ணியிருந்தான்".

### நாகநாதன்

மறுபுறம் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன். ஒருசால்வையினுல் இடுப்பைச் சுற்றியிருந்தார். உடம்பில் வேறு உடையே இல்லை. கொழும்பில் சத்தியாக்கிரகம் செய்ய வந்திருந்த ஏனைய தொண்டர்களும் இப்படி[illegible] ஆள் [illegible] பேர் ஒரு வேஷமுமாகக் காட்சியளித்தனர்.

### அணி

மீண்டும் தொண்டர்கள் நிரைப்படுத்தப் பட்டனர். முன் வரிசையில் திருவாளர்கள் செல்வநாயகம் — வி. ஏ. கந்தையா — வி. வன்னியசிங்கம் — டாக்டர் நாகநாதன் — வழக்கறிஞர் வி. நவரெத்தினம். நடுப்பகுதியில் திரு. என். ஆர். இராஜவரோதயம், வி. ஏ. அழகக்கோன், வி. என். நவரெட்ணம், கடைசியில் நான், திரு. அமிர்தலிங்கம், திரு எஸ் நடராசா ஆகியோர் கொண்டதாக வியூகம் அமைத்து பாராளுமன்றத்தை நோக்கி நடந்தோம். பொத்துவில் பிரதிநிதி முஸ்தபா ஆஸ்பத்திரிக்கு ஏற்கனவே எடுத்துச் செல்லப்பட்டு விட்டார். வருண பகவான் தலைக்கு மேலே எங்கள்மீது படையெடுத்தான். இடது பக்கம் இந்து சமுத்திரக்கடல் சீறிப் பாய்ந்தது. எந்தச் செய்கைக்காகக் கடல் அப்படி குமுறிக் கொந்தளித்ததோ! அநியாயத்தைக் கண்டு ஆர்ப்பரித்து எழுந்ததோ? அல்லது நம்மீது கொண்ட அனுதாபத்தால் மனம் பொறுக்க முடியாது துடித்ததோ?

### கல்மாரி

வலது பக்கமும்—முன்னும் பின்னும் காடையர்கள் தொகை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. பொலீஸார் வாறிகளில் வந்து இறங்கியவண்ணமிருந்தனர். குதிரைப் படை பொலீஸார் ஜனக் கூட்டத்தை சிரமப்பட்டுச் சமாளித்துக் கொண்டிருந்தனர். மழை மாரிக்கிடையில் ஜனசமுத்திரத்தின் மத்தியிலிருந்து கல்மாரியும் எங்கள் மீது விழுந்த வண்ணமிருந்தது.

பாராளுமன்றத்தை நெருங்கிக் கொண்டிருந்தோம். அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் எங்களைத் தாக்குவதற்கு மறுபடியும் தங்களை தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

### ஆயுதம்

பொலீஸாரின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது- எங்கள் மத்தியில் உள்ளவர்களிடம் லட்சியம் மட்டும் இருந்தது. எதையும் தாங்கும் இதயம் இருந்தது. எம் தாய் மொழிக்காக எவ்வித தியாகத்தையும் செய்யத் தயார் என்னும் நெஞ்சுரம் இருந்தது.

எங்களைத் தாக்குவதற்கு அரசாங்கத்திலுல் ஏவிவிடப்பட்ட காடையர்களிடமோ, கத்தி குத்து வாள்—வெடிகுண்டி—தடி—கல்—பெற்ரேல்—தீப்பெட்டி இன்னும் பல பயங்கர ஆயுதங்கள் இருந்தன.

திடீரென்று பொலீஸார் எங்களைத் தடுத்து நிறுத்திஞர்கள். மேற் கொண்டு ஒரு அங்குலம் தானும் முன் செல்ல முடியாதென்று உத்தரவிட்டார்கள். தொண்டர் படைத் தலைவர் அப்படியே நிலத்தில் உட்காருங்களென்று உத்தரவிட்டார். ஒரே நொடியில் நூற்றுக்கணக்கான தொண்டர்களும் அப்படியே நிலத்தில் உட்கார்ந்து கொண்டனர்.

### மண்டை பிளந்தது

முன் வரிசையிலிருந்து, என்னேடு ஒன்ருக நின்ற தனபதி திரு அமிர்தலிங்கத்திற்கு

(8-ம் பக்கம் பார்க்க)

# சங்கப் பலகை

### தமிழகம்

ஆசிரியர்: செ. இராசதுரை எம். பி. வெளியீடு பூங்கோதை பிரசுரம், 14, வண்டிங் தெரு, மட்டக்களப்பு. விலை சதம் 20.

தமிழ் நாட்டிலே தி. மு.க. தலைவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பத்திரிகை உண்டு. கொள்கை பரப்ப, கட்சி வளர, ஆதரவு திரள அவை வெளிவருவது உதவுகிறது.

இங்கு அந்த நிலையை உருவாக்க விழைந்த முதல்வர் மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை ஆவர். தமிழகத்தை வெளிக்கொணரும் பணியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் துணிந்து இறங்கி விட்ட அவர் இப்போது கண்ணுங் கருத்துமாக அதைக் கவனித்துவருவதாகத் தெரிகிறது.

மூன்ருவது இதழ் கிடைக்கப் பெற்ருேம். இன்றைக்கு இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு எது வேண்டுமோ அது இதழில் இடம் பெற்றிருப்பது காண உள்ளம் பூரிக்கிறது.

வேண்டிய விஷயமாஞலும் அது கவர்ச்சிகரமாகத் தரப்பட வேண்டுமல்லவா? எழுத்தாளர் இராசதுரைக்கு அது ஒன்றும் கஷ்டமான காரியமல்ல என்பதை இந்த இதழில் தெளிவாகக் காட்டியுள்ளார் அவர்.

தமிழகம் வெளிவருவது குறித்து மீன் பாடும் தேனுடு நிச்சயமாகப் பெருமை கொள்ளலாம். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும் அதனை உரிமை கொண்டாடலாம்.

### தொழிலாளர் சிக்கன செக்ரேல்

தயாரிப்பு: எம். எஸ். மாரிமுத்து, இ. தொ. காங்கிரஸ் காரியாலம், 57 1, கண்டி வீதி, கம்பளை. விலை சதம் 50.

சாதாரண மனிதருக்குநாட் குறிப்புப் புத்தகம் (Diary) பயன்படுவது போல தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த செக்ரேல் பயன்படும். வேலை விபரத்தையும், வரவு செலவுகளையும் திட்ட வட்டமாகக் குறித்து வைத்துக் கொள்ள உதவும் வகையில் கட்டம் இட்டு செக்ரேல் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

தொழிலாளர்களின் கடமைகள் உரிமைகள் பற்றிய குறிப்புக்களும் இதில் தரப்பட்டுள்ளன.

---

### முரசம்

ஆசிரியர்: எப். ஜி. ஜெயசிங்கம் வெளியீடு: செங்கலடி, மட்டக்களப்பு. விலை சதம் 10.

துடிக்கும் இளமையின் படப்பிடிப்பாக மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் முரசம் தமிழ் பேசும் மக்கள் உள்ளங்களில் இன உணர்வையும், மொழி அபிமானத்தையும் விடுதலை வேட்கையையும் அள்ளிச் சொரிய முனைகிறது. தமிழரசு அணிவகுப்பில் அங்கம் வகிக்கும் இளைஞர் எப். ஜி. ஜெயசிங்கத்தை ஆசிரியராகக் கொண்ட முரசம் எழுப்பும் கொள்கைக் குரல் ஈழம் எங்கும் எதிரொலிக்க அதிக நாள் பிடிக்காது என்பதே நமது நம்பிக்கை. அதற்கு இதழ் கூடிய பக்கம்

(12-ம் பக்கம் பார்க்க)


இலவச ஆலோசனை! சிறந்த கல்விச் சபை மூலம் இலவச ஆலோசனை?

அரசாங்க பரீட்சைகள் 1959

ஆசிரிய கலாசாலைப் பிரவேச பரீட்சை

இப்போட்டிப் பரீட்சையில் சிறந்த முறையில் சித்தி பெற நூற்றுக்கணக்கான மாணவர்கட்குச் சித்தியைப் பெற்றுக்கொடுத்த எமது கல்விச் சபையிடம் ஆலோசனை கேளுங்கள். கடந்த வருடங்களில் சித்திபெற்ற எமது மாணவர்கள் இலங்கையின் சகல ஆசிரிய கலாசாலைகளிலும் இருந்து எமது சேவையைப் பாராட்டி எமக்கு அனுப்பிய அபிப்பிராயங்களை எம்மிடம் இலவசமாகப் பெற்றுப் படியுங்கள்.

பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சை

ஆடி, மார்கழிப் பரீட்சைகளில் நீங்கள் சித்திபெறுவது இலகுவாகி விட்டது. பரீட்சையின் சித்தியை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பாடங்கள் உங்களுக்கும் ஒரு தராதரத்தைப் பெற்றுத் தரும். இலங்கையின்எல்லாப் பாடசாலைகளிலும் பாவிக்கப்படும் மிகச் சிறந்த பாடங்களை நீங்களும் படித்து சித்தி பெறலாம். இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

தமிழ் மூலம் ஆங்கிலம்

இலங்கையில் உத்தியோக உயர்வு பெற ஆங்கிலம் என்றும் அவசியமே. ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளை இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, மலாயா போன்ற பிற நாடுகளிலும் பயிற்றி புகழ்பெற்ற அற்லஸ் ஹோல் உமக்கும் ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, வாசிக்க, எழுத, படிப்பிக்கும். இலவச புத்தக விபரங்கட்கு எழுதுக.

B.A. Hons B.A. (general) G.C.E. ord/Ad H.S.C.

முதலாம் உயர்தரப் பரீட்சைகட்கும் நீங்கள் படிக்க விரும்பும் பரீட்சை அல்லது பாஷை பற்றிய விபரங்கட்கும் எழுதுங்கள்

அற்லஸ் ஹோல்.

தபாற் பெட்டி 649, கொழும்பு. போன்: 9759


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணைப் பள்ளிக்கூடம் — பொருளாதாரம் 4

திட்டமிடுதல்:

# இலட்சியங்கள்—குறிக்கோள்கள்

(தொடர்ச்சி)

## PLANNING: PRINCIPLES AND OBJECTIVES (CONTINUED)

### பாத்திரங்கள்

1. உபாத்தியாயர் உலகநாதர்
2. அப்பாக்குட்டி
3. குமரேசு

**உபாத்தியாயர்:**

பொருளாதாரத் திட்டமிடுதல் சமூகத்தின்நயத்தை அதாவது பொருளாதாரத் துறையில் சுபீட்சத்தை உயர்த்துதல் என்ற கைங்கரியத்தை இலக்காகக் கொண்டிருக்கும் தனி மனிதனின் நியாயபூர்வமான சுதந்திரத்திற்கும் உரிமைகட்கும் பாதகமாயில்லாத வகையில் நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் இலட்சியமாகும்.

**குமரேசு:**

நீங்கள் பின்னர் கூறியதை இலட்சியமென்றும்

(1) பொருளுற்பத்தியை அதியுன்னதமான அளவிற்குப் பெருக்கல் (Maximizing production)

(2) நாட்டு வருவாய் மக்கள் அனைவருக்கும் சமபான்மையாகப் பங்கீடுபண்ணப் படுதல் (Equitable distribution of income)

(3) மக்களனைவரும் பொருளாதாரத்தில் ஏதோ ஒரேரார் தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபடுதற்கு இயைய தக்க அளவு உழைப்புச் சந்தர்ப்பம்சிருஷ்டித்தல் (High and stable level of employment)

(4) மக்களின் வருவாய் சுருங்கியும் விரிந்தும் நிலை தளம்பாது நிலைப்பட்டிருத்தல்; (Income stability)

(5) விஞ்ஞான ஆராய்ச்சி விருத்திக்கேற்றவாறு பொருளாக்க முறைகள் முன்னேறியும் பொருளுற்பத்தி பெருகியும் வரும் தன்மையான வளர்ச்சி (Economic growth).

ஆகிய ஐந்து அம்சங்களை உள்ளடக்கிய சுபீட்சம் விருத்தியாவதைக் குறிக்கோள்கள் என்றும் குறிப்பிட்டோம்.

**அப்பாக்குட்டி:**

இதிலை ஒரு விஷயம் நல்லாய்ப் புரியவில்லை. நாட்டு வருவாய் சமபான்மையாய் பங்கிடுதல் என்றால் என்ன? எல்லாருக்கும் ஒரேயளவு வரும்படியா. அரசாங்கம் பங்கிட்டுக் கொடுத்தலா?

**குமரேசு:**

நாட்டு வருவாய் சமபான்மையாய் ப-ங்-கீ-டு-ப-ண்-ண-ப்-ப-டு-த-ல் என்று கூறினதேயல்லாமல் பங்கிடுதல் என்று சொல்லப்படவில்லை. நாங்கள் அனுசரிக்கும் சமூக பொருளாதார அமைப்பு ஜனநாயக அடிப்படையைச் சார்ந்தது. தனி மனிதனின் சுதந்திரத்திற்கும் நியாயபூர்வமான உரிமைகட்கும் இடமளித்து சமூக நன்மைக்காக இயங்கும் பொருளாதார அமைப்பையே நாங்கள் குறிப்பிடுவது. அத்தகைய பொருளாதார அமைப்பில் தனி மனிதர் தம் தம் கணக்கில் பொருளாக்கத்தில் ஈடுபடலாம்! ஆகவே தம் தம் கணக்கில் தொழில் செய்பவர்கட்கு வருவாய் அத்தொழிலின் பாற்பட்ட ஊதியமேயாகும்! அந்த நிலைமையில் அரசாங்கம் பங்கிட்டுக் கொடுத்தல் என்றமுறை வராது. தம் தம் உழைப்புக்கு அதாவது உற்பத்திப் பெருக்கத்திற்கு ஒவ்வொருவரும் கொடுக்கும் சேவைக்குப் பதிலாக அவரவர்க்குக் கிடைக்கும் ஊதியம்தான் வருவாய்.

**அப்பாக்குட்டி:**

அப்ப சமபான்மையாய் என்றதென்ன?

**குமரேசு:**

சமபான்மையாய் என்ற பதத் தொடர் சமபங்காய் என்ற சொற்றொடரின் அர்த்தத்தைக்கொண்டதல்ல. சமபங்கு என்பது பங்குகள் அளவில் சமம் என்ற பொருள்படும். சமபான்மை என்பது சமமான அளவு கோலால் அளக்கப்பட்டது என்ற

சகாதேவன்

பொருளைத் தரும். அதாவது நீதியான பங்கீடு என்றகருத்தைக் கொடுக்கும். ஆங்கிலத்தில் சமபங்காய் என்பதை Equal என்ற சொல்லாலும் சமபான்மையாய் என்பதை Equitable என்ற சொல்லாலும் குறிப்பிடுவர்:

**உபாத்தியாயர்:**

நாங்கள் குறிப்பிட்ட "நாட்டு வருவாய் சமபான்மையாய் பங்கீடுபண்ணப் படுதல்" என்ற சித்தாந்தத்தில் பங்கீடு செய்யப்படுவதற்கு உபயோகிக்கும் சமமான அளவு கோல் யாது?

**குமரேசு:**

அந்த அளவுகோல் இந்தத் தொடர்பில் ஒரு நியதியையே குறிக்கும். நான் ஏற்கனவே கூறியமாதிரி நாட்டு வருவாயை ஒருவர் அல்லது அரசாங்கம் பங்கிட்டுக் கொடுப்பதல்ல. ஒருவர் தன் சேவையை விற்பனை செய்வதால் அல்லது தன் தொழிலால் ஆ[...]ப்பட்ட பொருளை விற்பனை செய்வதால் பெறும் ஊதியமே வருவாய் ஆகும். அவ்வாறு பல்வேறு பேர்கள் பெறும் ஊதியங்களின் தொகைகட்கிடையே காணப்படும்ஒற்றுமை வேறுபாட்டைப்பற்றியே சமபான்மையாய் பங்கீடுபண்ணப்படுதல் என்ற சித்தாந்தம் பரிசீலனைக்கு வரும். சமபான்மையாய் பங்கீடுபண்ணப்படுதல் என்ற சித்தாந்தத்திற்கு நாம் தூலரூபம் கொடுத்து ஒரு நெறியை ஒரு நியதியை உருவாக்க வேண்டும். நெறி அல்லது நியதி என்பது ஆங்கிலத்தில் Criterion எனப்படும். ஒவ்வொருவரும் சமூகத்தில் உருவாகும் பொருளாக்கத் தொகைக்கு எவ்வளவுக்கெவ்வளவு உதவியாக அமைந்ததோ அவ்வளவிற்கவ்வளவு அவர்கள் உற்பத்தியாகும் பொருளில் பங்கு பெற லாயக்கானவர்களாவர்.

**அப்பாக்குட்டி:**

ஒம் தம்பி வேலையொண்டும் செய்யாமல் கள்ளச் சதிரம் வளத்தவனுக்கு சாப்பிடுறதுக்கு என்ன உரிமை? நடந்த கால் சீதேவி இருந்த கால் மூதேவி.

**குமரேசு:**

சமூகப் பொருளாக்கம் பெருகுவதற்கு ஒவ்வொருவரும் எவ்வளவுக்கு எவ்வளவு காரணகர்த்தர் ஆக இருந்தனரோ அவ்வளவிற்கு அவ்வளவு கூடிய அல்லது குறைந்த ஊதியத்தைப் பெற்று அந்த வருவாயைக்கொண்டு சந்தையில் [...] பொருட்களையும் சேவைகளை[...] [...]த்தாளராவர். அதுதான் நாம் வகுக்கக்கூடிய நெறியாகும்.

**உபாத்தியாயர்:**

சரி குமரேசு. நாட்டு வருவாய் சமபான்மையாய் பங்கீடுபண்ணப்படுதல் என்ற சித்தாந்தத்திற்கு மிக நிதானமான ஒரு நியதியைத் தயாரித்திருக்கிறீர்கள். ஆனால் நடைமுறையில் இந்த நிதானமான நியதி அனுசரிக்கப்படுவதிலும் பார்க்க நிராகரிக்கப்படுவதே அதிகம் என்று எண்ணுகிறேன்.

**அப்பாக்குட்டி:**

ஓம். நாங்கள் கமக்காரர். காலமே பொழுது காலிக்கத் தொடங்கி இரவு மட்டும் குனிஞ்ச நாரி நிமிராமல் இரத்த வேர்வை நிலத்திலே சிந்த வேலை செய்தால்தான் ஊரிலே அரிசிக் கொட்டையுண்டு. ஆனால் இந்தக் கால் சட்டைச்காரர் இருக்கினமே, இந்த அப்புக்காத்துமார்: அவை ஏதோ ஒரு கறுத்தைச் சட்டையையும் போட்டுக் குலிக்கி "இரும்புறும்" எண்டு ஏதோ பேசிப் போட்டு ஒருநாளைக்கு 300 ரூபாய் 400 ரூபாய் உழைக்கினம். கமக்காரனுக்கு 3 ரூபாய் கிடையாது. எங்கடை காத்தியேசுவின்ரை பொடியன்ரை வழக்குக்கு 5000 ரூபாயும் "றெஸ்ற் கவுசிலே" 3 நாள் நிண்ட செலவுமல்லவே அந்த அப்புக்காத்துக்குக் கொடுத்தது. 3 நாளுக்கு "றெஸ்ற் கவுஸ்" செலவு 180 ரூபாய். அவர் தன்ரை கூட்டாளியளையும் பந்தம் பிடிக்கிறவையும் கூப்பிட்டு "றெஸ்ற் கவுசிலே" விருந்து குடுத்து பிருசல் கொண்டாடிப் போட்டுப் போனார். காத்தியேசுதான் "வில்" கொடுத்தது 180 ரூபாய். அப்புக்காத்துமார் உழைக்கிறது "கினி" கணக்கிலே. எங்களுக்கு ரூபாயிலே கணக்குப் போடவே வரும்படியில்லே. இல்லை, நான் கேக்கிறேன் எண்டுகோவிக்க வேண்டாம். இந்த அப்புக்காத்துமார் மற்றக் கால்சட்டைக்காரர் உந்தப் பெரிய உழைப்பு உழைக்கிறவை, அந்த சமூகத்திலே உற்பத்தியாகும் பொருளாக்கம் எண்டு சொன்னியே தம்பி, அந்தப் பொருளாக்கத்துக்கு எவ்வளவுக்கு உதவியாயிருக்கினம், காரணமாயிருக்கினம் எண்டதைச் சொல்லு தம்பி பார்ப்பம்.

**உபாத்தியாயர்:**

மனித ஜன்மத்திலே முற்றறிவு உடையவர் ஒருவருமில்லை. குறைவில்லாமல் நிறைவுள்ளவருமில்லை. ஆகவே மனிதரைத் தொகுப்பாகக்கொண்ட சமூகத்திலே அவர்களால் தயாரிக்கப்படும் சமூக அமைப்பு அரசியலமைப்பு மற்றும் எத்திட்டங்களும் நீதியிலேயோ தர்மத்திலேயோ அன்று வேறு எந்தத்துறையிலேயோ பெறுபேற்றளயில் குறைவேதுமின்றிச் சத விகித நிறைவாக இருக்க முடியாது. ஆங்கிலத்திலே Man cannot be perfect; human institutions cannot be perfect என்று சொல்வார்கள். ஆயினும் நாம் எல்லோரும் அந்த நிறைவை, நியதியைத் தர்மத்தை யெய்துதற்குப் பிரயத்தனம் செய்ய வேண்டும். எவ்வளவிற்கெவ்வளவு சித்தியடைகின்றோமோ அவ்வளவிற்கவ்வளவு நன்மை பயக்கும்.

**குமரேசு:**

ஆம், நடைமுறையில் சமூ

(9-ம் பக்கம் பார்க்க)

---

## மக்கள் குரல்

### மாறுத வடு

அகதிகள் பற்றிய சோகக் கதைகளையும், ஆக்கிரமிப்பாளர் அடாதசெயல்களையும், "சுதந்திரப் பாலம்" "விதியில் ஒரு விடுதி" போன்ற புத்தகங்களில் படித்த போது அத்தகைய ஈவிரக்க மற்றவர்களா கொம்யூனிஸ்டுக்கள் என்று எண்ணினேன். கங்கேரியிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு மாத்திரம் இரண்டு இலட்சம் மக்கள் அகதிகளாக ஒடினூர்களாம்! கற்பனையோ என்று அதிர்ந்தேன்.

ஆனால் ஈழத்து இனப்பகை கலவரத்தின்போது பத்தாயிரத்திற்கதிகமான அகதிகளை றேயல் கல்லூரிகளிலும், பிற அகதி முகாம்களிலும் பார்த்தபோது முன்பெழுந்த சந்தேகங்கள் ருசு வாகின. அத்தோடு "அகதிகளை" நேரில் பார்க்கவும் முடிந்தது. அகதிகள் கதை ஈழத்துச் சரித்திரத்திலும் இடம்பெற்று விட்டது. ஈழத் தமிழர் வரலாற்றில் மங்காத மாசு. மாறுத வடு. மறக்க முடியாத சோகக் கதை!

—மட்டுவிலான்.

கொழும்பு

### பாரபட்சம் ஏன்?

அரசாங்க வைத்தியசாலை பொது மக்களுக்காகக் கட்டப்பட்டது. அங்கு ஏழை பணக்காரன் என்று வேறுபாடு கிடையாது. ஆனால் இந்த வேறுபாடு கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலையில் தாண்டவம் புரிகின்றது. அங்கு பணக்காரர் வந்தால் முதலிடம் கிடைக்கிறது. அவர்கள் 'கியூ'வில் வரவேண்டிய அவசியமே இல்லை. நடக்க முடியாத நிலைமையில் உள்ளவர் ஒருவர் முன் வந்து நின்றால் பின் 'கியூ'வில் வா என்று விரட்டி விடுகிறார்கள். பணம் தான் அங்கு முதலிடம் வகிக்கின்றது. ஏழைகள் மாட்டைப்போல் நடத்தப்படுகிறார்கள். இந்தப் பாரபட்சம் ஏன்? எப்போது இந்த அவல நிலை மாறி ஏழைகள் சுகமாய் வாழ முடியும்?

—நோயாளி

கிளிநொச்சி

### எதற்கு உளறல்?

யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைமையை நேரில் கண்டு அறியாத மந்திரி மரைக்கார் சிங்கள விவசாயிகள் மத்தியில் பேசுகையில் சென்ற யூ. என். பி. அரசாங்கம் 'யாழ்ப்பாணத் தெருக்களை மோட்ச லோகம்போல் ஆக்கியுள்ளது' என முழங்கியிருக்கிறார். எதற்கு இந்த உளறல்? சிங்களவர்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று அவர்கள் பாதுகாப்பில் பல காலம் வாழலாம் என்ற எண்ணமா? சிறுபான்மையினரைப்பற்றிப் பெரும்பான்மையினர் துவேஷமும் அருவருப்பும் கொள்ளச் செய்ய வேண்டும் என்ற நோக்கமா? அல்லது மந்திரிமார்களின் கருமங்களே இப்படித்தான் என்று கூறும்படி தஹநாயகாவின் [...] விருப்பமா?

—[...]

குருநாகல்

---


## ஆஸ்த்மா என்ற தொய்வு பற்றிய உண்மைகள்

61 [...] வயது 39 ஆகிறது. 5 குழந்தைகளுண்டு. ஆஸ்த்மா என்ற தொய்வு 15 வருட காலமாக என்னை சித்திரவதை செய்தது. நடுச் சாமம் தனியாக ஊசி போடுவதற்காக ஆஸ்பத்திரிக்குச் சென்ற நாட்களை இன்று நினைத்தாலும் பயமாக இருக்கிறது. "ஆஸ்த்மடிக்கா" 3 பாட்டில்கள் எனக்கு பூரண குணமளித்துள்ளது என்பதை ஆண்டவன்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.

ஒப்பம்

திரு. கே. அப்துல்காதர்,
55/2, காலி ரோட்,
கொழும்பு—4.

என் மனைவிக்கு 10 வருட காலமாக இருந்த ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி பூரண குணம். நன்றி.

திரு. வி. முத்துக்குமார்,
Erracht Estate,
Dehiowita.

"ஒரே பாட்டில் ஆஸ்த்மடிக்கா" ஸ்பெஷலில் பலவருஷமாக எனக்கு இருந்த ஆஸ்த்தா பூரண குணம். என் இதய நன்றி.

திரு. எல். செல்லையா,
Stokland Group,
Udugama.

எனக்கு 15 வருடமாக இருந்த ஆஸ்த்மா பூரண குணம். தொய்வு ஏற்பட்ட நாள் ஞாபகமேயில்லை. என் நன்றி ஆஸ்த்மடிக்காவுக்கு.

ஸ்ரீமதி இ. சரவணமுத்து
"ரமணிவாசம்," தெல்லிப்பழை.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்ச்சளி, மார்பில் "கர்" என்ற சத்தம், இரவில் ஏற்படும் இருமல் இவைகளுக்கு

'ஆஸ்த்மடிக்கா'
(ஒரு நவீன சஞ்சீவி)

ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-
ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-

சுகாதார வைத்தியசாலை.,
255 காலி ரோட்,
(பம்பலப்பிட்டிய கன்வென்ட் எதிரில்)
கொழும்பு-4.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நாடகம்:

# தியாகச் சின்னம்

சரஸ்வதி நாகராஜன்

## காட்சி -

சுனநாதபுர அரண்மனைக்கு வடக்கேயுள்ள நந்தவனம். சாயந்தர வேளை. பூத்துக் குலுங்கும் புஷ்பங்கள் நறுமணத்தைப் பரப்புகின்றன. பட்சிஜாலங்களின் இன்னிசை போதையை உண்டாக்குகிறது. நந்தவனத்துக்கு மத்தியிலுள்ள ஒரு பொய்கைக்கருகே ஒரு கற்படியில் விநோதினி உட்கார்ந்து கொண்டு மனோகரமான பாட்டு ஒன்றை வெகு உல்லாசத்தோடு பாடிக்கொண்டிருக்கிறாள். அவளுக்குத் தெரியாமல் பின்னால் வந்து கண்களைப் பொத்துகிறார். தளபதி வீரவர்மன். தளபதி என்று தெரிந்துகொண்டவிநோதினியின் உதட்டில் புன்னகை மலர்கிறது. தன் மலர் போன்ற கரங்களால் தளபதியின் கைகளை விலக்கி அக் கைகளுக்கு முத்தமிடுகிறாள். தளபதி வீரவர்மன் அவளுக்குப் பக்கத்தில் உட்காருகிறார்.

விநோதினி: பிரபு, இந்த நாட்டு அதிகாரம் மாத்திரம் என் கையிலிருந்தால் நான் செய்யும் முதல் காரியம் என்ன தெரியுமா?

வீரவர்மன்: பூ, இது தானா பிரமாதம், சொல்லுகிறேன் கேள். இதோ தெரியும் காடுகளையெல்லாம் அழித்து, அதில் பலவித வர்ணப் புஷ்பச் செடிகளை உண்டாக்கி, அவைகள் பூத்துக் குலுங்கி நறுமணம் பரப்ப, பூரணச் சந்திரன் வானவீதியில்பவனி வர, இளந்தென்றல் இதமாய் வீச, உன்னோடு கைகோத்து உலாவ நாள் தவறாமல் நான் வர வேண்டுமென்று எனக்கொரு தனிச் சட்டம் செய்வாய்; சரிதானே?

விநோதினி: தப்பு, தப்பு, தப்பு......

வீரவர்மன்: அப்படியா...... அப்படியானால்...ஆ, ஞாபகம் வருகிறது......அதோ பறந்து செல்லும் ஜோடிப் பறவைகளைப் போல சிறகடித்து சிங்காரமாய் ஊரெல்லாம் சுற்றிவர எங்களிருவருக்கும் வரம் தர வேண்டும் சிவனே என்று வேண்டிக்கொள்வாய். கேட்ட வரம் கிட்டவில்லை யென்றால் சிவபூசை செய்வதை நிறுத்தி விடுவேன் என்று பயமுறுத்துவாய்—சரிதானே...?

விநோதினி: இல்லவே இல்லை...

வீரவர்மன்: சரி, நீ தான் சொல்லேன்...

விநோதினி: சொல்லட்டுமா...எதிரியை நேருக்கு நேர் தாக்காமல் யுத்த தர்மத்தை மீறி பின்புறமாகத் தாக்கும் தங்களை தளபதி பதவியிலிருந்து உடனே நீக்கி விடுவேன்.

வீரவர்மன்: அப்பப்பா...... குற்றச்சாட்டு பலமாயிருக்கிறதே! எங்கே, எப்போது, யாரை அப்படித் தாக்கினேன் அம்மணி?

விநோதினி: ஏன், கொஞ்ச நேரத்துக்கு முன் என் கண்களைப் பின்புறமிருந்து தாக்கினீர்களே, அது?

வீரவர்மன்: ஓ, அதைச் சொல்லுகிறாயா, போக்கிரிப் பெண்ணே, அது மட்டுமா? இன்னும் கொஞ்ச நாளில் என்ன செய்கிறேன் பார்!

விநோதினி: ஐயையோ...... பயமாயிருக்கிறதே! என் தலையை கிலையை...

வீரவர்மன்: ஊஹூம்...... அதெல்லாமில்லை.ஒரு பெரிய சிறைச் சாலை கட்டி...

விநோதினி: அதிலே என்னை அடைத்து...

வீரவர்மன்: சுற்றிவர காவல் வைத்து...

விநோதினி: என்னைப் பட்டினி போட்டு......

வீரவர்மன்: திக்கு முக்காடச் செய்து......

விநோதினி: என்னைக் கொல்வீர்கள்......அப்படித் தானே?

வீரவர்மன்: சே, சே! ஆனந்தக் கூத்தாடச் செய்வேன்.

விநோதினி: கைதிக்கு ஏதுவாம் ஆனந்தம்?

வீரவர்மன்: இந்த கைதிக்கு விசேஷ சலுகை...என் இருதய சிறையில் அடைக்கப்படும் கைதியல்லவா?

இருவரும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். தளபதி வீரவர்மனின் மடியில் சாய்கிறாள் விநோதினி. உலகமே சுவர்க்கமாக தோன்றுகிறது இருவருக்கும். சிறிது நேர மௌனத்துக்குப் பின்......

வீரவர்மன்: விநோ...

விநோதினி: பிரபு...

வீரவர்மன்: உன் மதிமுகத்தைக் காணுமல் கொஞ்ச நாட்களை தூரதேசத்தில் கழிக்க வேண்டியிருக்குமோ என்பதை நினைக்கும் போது ...(பெருமூச்சு விடுகிறார்)

விநோதினி: பிரபு...உண்மையாகவா சொல்லுகிறீர்கள்?

வீரவர்மன்: ஆமாம் கண்ணே தென்னாட்டுப் பாண்டியர்கள் மீண்டும் யுத்தத்துக்கு ஏற்பாடுகள் செய்கிறார்களாம். இன்றைக்கு அரசசபையில் ஒற்றர் படைத்தலைவன் சொன்னான். எந்த நிலைமையையும் சமாளிக்க



தயாராயிருக்கும்படி அரசர் கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார். அப்படியே யுத்தமொன்று வந்துவிட்டால்...

விநோதினி: இந்த ஏழையைப் பற்றி எங்கே ஞாபகம் இருக்கப்போகிறது?...உம்.

வீரவர்மன்: பைத்தியக்காரப் பெண்ணே! காதலின் பத்துக்காக கடமையை மறக்க முடியுமா? அதனால் ஏற்படும் அனர்த்தங்களுக்கு யார் பொறுப்பு?

விநோதினி: ஐயோ, வேண்டாமே! காதலுக்காக கடமையைத் துறந்து விடாதீர்கள். வேண்டுமானால் கடமைக்காக திவ்யமாக காதலையே துறந்துவிடுங்கள்.

வீரவர்மன்: போர் முரசு முழங்குவதைக் கேட்டதாய், பால் மணம் மாறாத தன் ஐந்து வயது பாலகனிடம் ஈட்டியைக் கொடுத்து, 'போய் எதிரிகளைத் தாக்கி வாகை சூடி வா' என்று தைரியமூட்டி அனுப்பிய வீரத் தமிழ்ப் பெண்களின் பரம்பரையிலே வந்த நீயுமா இப்படி பேசுகிறாய் விநோ?

விநோதினி: (சிரித்துக் கொண்டே) அடேயப்பா! தாங்கள் ஒரு போர் வீரர், யுத்தம் செய்ய மாத்திரம் தான் தெரியும் என்றல்லவா நினைத்திருந்தேன். உபதேசம் செய்யவும் தெரியும் போலிருக்கிறதே! யுத்த களத்திலே எதிரிகளுக்கு உபதேசம் செய்தே வெற்றி கண்டாலும் கூட ஆச்சரியமில்லை.

வீரவர்மன்: உயிர்வதையின் மூலம் வெற்றி காண்பதை விட உபதேசத்தின் மூலம் வெற்றி காண்பது எவ்வளவோ மேல்தானே விநோ. ஆனால் அந்த மனப்பான்மை மக்களுக்கு இருந்தால் ஏன் உலகத்தில் யுத்தங்கள் ஏற்படுகின்றன?...சரி விநோ, நேரமாகி விட்டது. நான் வருகிறேன். என்னை மன்னித்துக் கொள்.

விநோதினி: ஆமாம், நாளைக்கு வருவீர்களா, இல்லை...

வீரவர்மன்: கண்டிப்பாக, அவசியம் ஏதாவது ஏற்படாத வரையில்......வருகிறேன்.

(அவள் கையில் முத்தம் கொடுத்துவிட்டுச் செல்கிறார்)

## காட்சி—4

(சுழுத்துறையிலுள்ள விக்ரம பாண்டிய மன்னனின் அந்தரங்க ஆலோசனை மண்டபம். விக்ரம பாண்டியன், [illegible] மந்திரி பிரதானிகள் முதலியோர் வீற்றிருக்கிறார்கள். எல்லோருடைய முகத்திலும் யோசனையும் கவலையும் குடிகொண்டிருக்கிறது. முதலில் விக்ரம பாண்டியன் பேசுகிறார்.)

விக்ரமன்: குலசேகரரே, நேற்றே வர வேண்டிய குசலவன் ஏன் இன்னும் வரவில்லை? ஒருவேளை நமது ஒற்றன் என்று சோழர்கள் தெரிந்துகொண்டு சிறை பிடித்திருப்பார்களோ?

மந்திரி குலசேகரன்: இருக்க முடியாது அரசே! நமது குசலவன் அவ்வளவு ஏமாந்தவனல்ல. மாறுவேடம் போடுவதில் அவனுக்கு நிகர் அவனேதான். குள்ளநரி குசலவன் என்று அவனது நண்பர்கள் பெயர் வைத்திருப்பது காரணமில்லாமலா? எப்படியாவது வந்துவிடுவான்.

விக்ரமன்: சேனாதிபதி, மூன்று முறை நம்மை புறமுதுகு காட்டி ஓடச் செய்த இந்த சோழர்களை இந்த முறை ஓட ஓட விரட்டி அவர்களை மண்ணைக் கவ்வ வைக்கவில்லையென்றால்...

சேனாதிபதி: அரசே, அதைப் பற்றித் தாங்கள் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள். புதிதாகப் படைக்கு சேர்க்கப்பட்டவர்களுக்கு எல்லா விதப் போர்ப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது. சோழ நாட்டவரை புறமுதுகு காட்டி ஓட வைக்கும் வரை ஓயமாட்டோம் என்று நமது வீரர்கள் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தமுறை நமது படைகள் சனநாதபுரக் கோட்டைக்குள் நுழைந்து கொடியை ஏற்றும்வரையில் திரும்பா. சோழ தளபதி வீரவர்மனை போரில் வென்று குதிரைக் காலில் கட்டி இழுத்துக்கொண்டு வந்து நமது பாதாளக் குகையில் அடைக்கும் நாள் எப்பொழுது வரும் என்று எனது இந்த கைகளிரண்டும் ஏங்குகின்றன, அரசே!

(இந்த சமயத்தில் ஒற்றன் குசலவன் வந்து அரசரை வணங்குகிறான்)

சேனாதிபதி: வந்துவிட்டாயா, குசலவா! உன்னைத் தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அரசர்கூட நீ ஏன் இன்னும் வரவில்லையென்று கவலைப்பட்டார்.

விக்ரமன்: ஆமாம் குசலவா, போன காரியம் என்ன, எல்லாம் விபரமாய்ச் சொல்.

குசலவன்: பிரபோ, சோழர்களைப் போரில் வெல்லுவதென்பது இன்னும் இரண்டு தலைமுறைக்கு ஆகாத காரியம். அந்த எண்ணத்தை தற்போதைக்கு விட்டுவிடுவது நல்லது!

சேனாதிபதி: குசலவா, என்ன வார்த்தை சொல்லுகிறாய்?.இந்த சுந்தர பாண்டியன் சேனாதிபதியாயிருக்கும் போது முடியவில்லையென்றால் பின் எப்போது முடியும்?

குசலவன்: சேனாதிபதியவர்களே, எதிரியின் பலத்தை குறைவிட்டு மதிப்பது யுத்த தர்மத்துக்குப் புறம்பானது என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. சோழநாட்டின் மூலை முடுக்கு நாடு நகரங்கள் எல்லாம் சுற்றியலைந்தேன். பலவித மாறுவேடங்களில் பலவித தகவல்களைச் சேகரித்தேன். அங்குள்ள மக்களுடன் அளவளாவினேன். நான் கண்ட உண்மை சோழர்களை வெற்றிகொள்வது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதுதான்.

விக்ரமன்: குசலவா, அவர்களுடைய படை பலம் நம்முடையதைவிட அவ்வளவு அதிகமா?

குசலவன்: பிரபோ, படை பலம்கூட அவ்வளவு பெரிதல்ல. சோழ நாட்டுத் தளபதி வீரவர்மரைப் பற்றி தான் சொல்லுகிறேன். வீரவர்மர், புலியூர்ப் போரில் கோசலரை வெற்றி கொண்ட அப்பிரமேயரின் மருமகன். அப்பிரமேயரை விடமிகப் பலசாலி. எதிரிகளைத் தாக்கும் முறையில் அற்புதங்கள் செய்பவர். அவருக்கு இணை அவரே தான். சோழ மக்களுக்கு அவர்மேல் அபார பக்தி; இந்த நிலையில் நாம் படையெடுப்பது.........

சேனாதிபதி: ஹ ஹ் ஹ ஹ் ஹா......அரசே, குசலவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதுபோலிருக்கிறது.......ஒருவேளை சஞ்சய மன்னரின் அரண்மனையில் பலமான விருந்து நடந்ததோ என்னவோ......?

குசலவன்: சேனாதிபதியாரே, உமது வார்த்தையில் மமதையும் அகங்காரமும் தொனிக்கிறது. அரச சேவையாளனை அவமரியாதை செய்கிறீர்கள். நாட்டுக்கும் மன்னருக்கும் கனவிலும் துரோகம் நினைக்காதவன் இந்த குசலவன். இன்னொரு முறை அந்த வார்த்தை சொல்லாதீர்கள்.

சேனாதிபதி: நமது அரசருக்கு முன்னால் இன்னொரு அரசரையும் அவரது தளபதியையும் புகழ்வதுதான் முறையோ?

குலசேகரன்:சேனாதிபதி,குசலவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. தளபதி வீரவர்மரைப்பற்றி நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அவரது யுத்த தந்திரங்களே புதுமாதிரியானவை என்றும் காஞ்சி மகேந்திர மன்னவருடைய தந்திரங்களைவிடக்கூட கெட்டித்தனமானவை என்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆகையால் எதையும் நன்றாக யோசித்துதான் காரியத்தில் இறங்க வேண்டும்.

விக்ரமன்: குசலவா, வீரவர்மனுடைய சொந்த வாழ்க்கையைப்பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?

குசலவன்: பிரபோ. அவர் ஒரு பெரிய சிவபக்தர். மிகவும் நாணயஸ்தர்......... அதோடு......

விக்ரமன்: அதோடு என்ன, சொல்லு.

குசலவன்: ஒரு பெண்ணுடன் காதல் கொண்டிருக்கிறார்.

விக்ரமன்: பெண்ணுடன் காதலா...அப்படியானால்... அந்தப் பெண் யாரென்று தெரியுமா?

குசலவன்: ஆம் பிரபோ; சிவன் கோவில் கட்டட வேலை செய்து வரும் மாயவர் என்ற சிற்பியின் மகள் விநோதினி என்னும் பெண் தான் அவள். விநோதினி ஒரு அழகுத் தெய்வம்.

குலசேகரன்: எனக்கு ஒன்று தோன்றுகிறது. எப்படியாவது வீரவர்மனை தனிப்பட்ட முறையில் தொலைத்துவிட வேண்டும். அப்புறம்தான் படையெடுப்பைபற்றி யோசிக்க வேண்டும்.

விக்ரமன்: நானும் அதைத் தான் யோசித்தேன். ஆனால் எப்படிச் செய்வது?

குலசேகரன்: ஏன், விநோதினியை எப்படியாவது நம் கைக்குள் போட்டுக்கொண்டால்......?

குசலவன், நடக்காது மந்திரியாரே, அவள் ஒரு கற்புக் களஞ்சியம். கேவலம்பொன்னுக்கும் புகழுக்கும் அடிமையாகக்கூடியவளாகத் தெரியவில்லை.

சேனாதிபதி: ஏன், இன்னொன்று செய்தால் என்ன?

குலசேகரன்:சொல்லுங்கள்.

சேனாதிபதி: குசலவனின் தங்கை மாயாவை அனுப்புவது. எப்படியாவது விநோதினியுடன் சிநேகம் செய்துகொண்டு அங்கேயே தங்கச் செய்வது. வீரவர்மன் அங்கே வரும்போது சந்தர்ப்பம் பார்த்து நமது திட்டத்தை நடத்திவிடுவது.

(12-ம் பக்கம் பார்க்க)

ஒவ்வொரு வீட்டுப்பெண்ணும் விரும்பும் தையல் மெஷின்

"கெயிட் & நியூ"




பக்கங்களுக்கு இயங்கி, அளவற்ற விதமான சித்திரத் தையல், பொத்தான் தையல், வளைவுத் தையல் பூவேலைகள் செய்யும் அதிசய மெஷின்.

இது ஒரு ஜெர்மன தயாரிப்பு

| | |
|---|---|
| கை மொடல் | ரூபா 375-00. |
| கால் மொடல் | ரூபா 450-00. |
| டெயிலர் மொடல் | ரூபா 475-00. |

சோல் ஏஜண்டுகள்

டொலர் காப்பரேஷன்,

71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.

போன்: 6910.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கைலாசம்--கண்டேன் (3)



சுவாமி சச்சிதானந்தா

காத் கோடம் மிகப் பெரிய ஊரில்லை. ஆனால், பிரசித்தி பெற்ற இடம். கைலை யாத்திரிகர்களையும் மற்றும் பலரையும் சுமந்து வரும் இந்தியப் புகை யிரதம் இளைப்பாறும் இரும்புப் பாதையின் இறுதியிடம் காத் கோடமே. எமது புகை வண்டிப் பிரயாணம் இங்கு முடிவுற்று மோட்டார் வண்டிப் பிரயாணம் ஆரம்பமாகியது. அதுவும் சுமார் 150 மைல்கள் தான். பின்னர் முழுவதும் பாத யாத்திரையே.

நாம் சென்ற புகை வண்டி காத் கோடத்தை அடைந்ததும் பிரயாணிகள் மூட்டை முடிச்சுகளுடன் இறங்கினர். ஏராளமான மோட்டார் வண்டிகள் பிரயாணிகளை ஏற்றப் போட்டியிட்டுக் கொண்டு நின்றன. வண்டி தவறிப் பயணம் தடைப்படுமோ என்ற பயம் அங்கில்லை. சிறிது நேரத்திற்கு ஒவ்வொரு வண்டி புறப்பட்டுக்கொண்டேயிருக்கின்றது. கைலை யாத்திரிகர்கள் மிகக் குறைவு. வண்டியின் பெரும் பகுதியை நிரப்புவது சாமான்களே. புகையிரதம் சுமந்து வந்த அத்தனை பொருட்களையும் மலைப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்வதுதான் மோட்டார் வண்டிகளின் முக்கிய வேலை. அதனால் பிரயாணஞ் செய்வோர் குறைவாக இருப்பினும், மோட்டார் வண்டிகள் மலையை நோக்கிச் சென்று கொண்டேயிருக்கின்றன.

### வண்டியின் திணறல்

அரசாங்க பஸ் ஒன்று எம்மைக் காத்திருந்தது போலத் தயாராகி நின்றது. நாம் ஏற்றிய எல்லாப் பொருட்களையும் பஸ் ஏற்றுக்கொண்டது. எமது உடைமையை யெல்லாம் ஒப்படைத்து, நாமும் ஏறிக் கொண்டோம். பஸ் இரைந்து கொண்டே விரைந்து ஓடிற்று. உலகம் போற்றும் இமயமலையினூடு வண்டி உயர்ந்து சென்றது. வண்டிக்கு முன் கைலை நாதனைத் தரிசிக்கும் அவா நிறைந்த உள்ளம் மலையில் தாவிக் குதித்துச் சென்றது. சிறிது நேரத்தில், அமைதியாக ஓடிச் சென்ற வண்டி திணறிக் கொண்டு சென்றது. ஏன் இத்தனை சிரமம் என்று எண்ணியவாறு வெளிப்புறத்தை நோக்கினேன். சம தரையிலிருந்த பாதையைக் காணவில்லை. சம தரையை விட்டுப் பாதை உயர உயரப் போய்க் கொண்டிருந்ததே வாகனத்தின் திணறலுக்குக் காரணமென்பது புலனாயிற்று.

ஆம் வாழ்க்கையில் மனிதன் மேல் நோக்கிச் செல்ல வேண்டுமாயின், எத்தனை உறுதியும், வலிமையும் சிரமமும் வேண்டும் என்பதைப் பேரிரைச்சலுடன் பெருமலையில் ஏறிய வண்டி ஊர்ஜிதப்படுத்தியது.

### இன்பக் காட்சிகள்

ஓடுகின்ற வண்டிக்குள்ளிருந்தே ஓய்வு ஒழிவின்றிக் கண்டு களிக்கும் காட்சிகளோ பல. அடுக்கடுக்காக அமைந்த வயல்கள் மேல் கீழ் இரு புறமும் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. பச்சிளம் பயிர்களின் மேனியை இளந் தென்றல் வருடிச் செல்ல, அவை மெல்லென வளைந்து, நெளிந்து அசைவுறும் காட்சி இன்பகரமானது. பச்சிலைகள் பரந்த சோலைகள் எத்தனை! அவற்றிடையே மலர் குலுங்கும் மரங்கள் பலப் பல. மலர்களைத் தழுவி மணமளைந்து விளையாடும் மந்த மாருதம் யாத்திரிகர்களின் உடற் சோர்வையே மாற்ற வல்ல மாமருந்து. கூடிக் குலவும் புள்ளினங்கள், ரீங்காரம் இட்டுப் பறக்கும் வண்டுகள், இன்னும் எத்தனை எத்தனையோ காட்சிகள்!

### ஆச்சரியம்

இவற்றையெல்லாம் பல வர்ணமாக்கும் சூரியனின் ஒளிக் கதிர் செய்யும் ஜால வித்தைகள் பல. அதோ பாதையில் ஓர் கூர்மையான வளைவு! அதை பஸ் வண்டி எப்படிக் கடக்கப் பாகிறதோ? நினைப்பதற்கு முன் வளைவின் இடப் பக்கந் திரும்பி சில மைல் தூரம் வந்து விட்டோம். இது இந்திர ஜாலமோ? இது வரை நாம் பார்த்த அகன்ற சம வெளியும் அழகு நிறைந்த சோலைகளும் மாயமாய் மறைந்து விட்டன. அவற்றைத் திரும்பப் பார்க்க முடியாதவாறு மலை நாட்டில் புகுந்து விட்டோம். வாழ்க்கையில் பெறும் அனுபவத்தைப் புற உலகில் இமய மலைக் காட்சிகள் எடுத்துக் காட்டி விளக்குகின்றன. கண்ணால் காணப்போகும் இமயத்தைச் சிறிது நேரம் கருத்திற் காண்போம்.

### இமயத்தின் சிறப்பு

இமாசலம் என்ற பெயர் இமம் அசலம் என்ற இரு சொற்களாலமைந்தது. இமம் என்பது பனி. அசலம் என்பது மலை. எனவே இமாசலம் என்பது பனிமலை எனப்படும். ஈசனின் அருள் நிதியை, இயற்கை யன்னை மக்களுக்கு அள்ளிச் சொரிய அதனைப் பெற்று பேரானந்தம் பெறுதற்குரிய இடம் உலகில் ஒன்று உண்டென்றால் அது இமயமே என்பதில் ஐயமில்லை. இறைவன் அகிலத்தில் ஆக்கிய அசலங்கள் அனைத்திலும் மிக உயரமானது இமாசலம். கிரிராஜன் என்று அது அழைக்கப்படும். இம் மலை உயரத்திற் பெரிதாயினும் வயதில் மிக இளமையானது. இயற்கையின் இன்பக் காட்சிகள் எல்லாம் ஈசன் எழுந்தருளியுள்ள ஆலயங்களாக பக்தர்களைத் தம் வயப்படுத்தும் மகிமை வாய்ந்தன. உயர்ந்த எண்ணங்களை ஆக்கி ஆன்ம சக்தியை அளிக்கும் ஆற்றல் மிக்கவை.



மைலம் கிராமத்திலிருந்து "திரிசூலி" பனி மலையை தெளிவாகப் பார்க்கலாம்.

### உயரம்

இமாசலத் தொடர் ஏறக்குறைய 1500 மைல் நீளமும் 300 மைல் அலகமும் உடையது. பாரத நாட்டின் வடக் கெல்லையாக காந்தாரம் அல்லது காஷ்மீரம் முதல் அஸ்ஸாம் வரை நீண்டு, நிறைந்து, உயர்ந்து பொலிகின்றது. இப் பனி மலையை சிறிய இமயம், பெரிய இமயம், எல்லை கடந்த இமயம் (The Lesser Himalayas, The Greater Himalayas and the Trans—Himalayas) என மூப் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். வானளாவிய பனிமலைச் சிகரங்கள் பலப் பல இங்குண்டு. எவரெஸ்ட் (29410 அடி) கஞ்சன் ஜங்கா (28146 அடி) தவளகிரி (26795 அடி) நங்கா பர்வதம் (26660) அடி நந்தா தேவி (25645 அடி) காமத் (25447 அடி) குர்லாமந்தா (25355 அடி) துரோணகிரி (23184 அடி) திரிசூலி (23406, 22490, 22360 அடி) சுவர்கா ரோகிணி (23420 அடி) கைலாயம் (22028 அடி) ஆகியன சிறப்புற்றவை.

### நல்விருந்து

வெள்ளியங்கிரியில் கண்ணுக்கு இனிதாய்க் கருத்திற்கு நல்விருந்தாகும் காட்சிகளோ அளப்பில. பார்ப்பவர் பயப்படும் பயங்கரமான பாதாள பள்ளத்தாக்குகளோ மிகப் பல. பர்வத ராசனின் பரந்த மார்பிடையே அசைந்து விளங்கும் முத்தாரமோ, அல்லது வெள்ளிச் சருகையாலான உத்தரியமோ என வியப்பையாக்கி வளைந்தோடும் நதிகள் பல. தெளிந்த நீரின் சலசலப்பு, உடலையும் உள்ளத்தையும் குளிரச் செய்யும் தண்மை, பெரும் பெருங் கற்களைக் கட கட என்று உருட்டிச் சினந்து, விரைந்து செல்லும் வன்மை, ஓரத்திலே பூத்துப் பொலியும் சிறு செடிகளை அலைக் கரத்தாற் தழுவிச் செல்லும் தன்மை இவையனைத்தும் இன்பத்தை மிகுவிக்கின்ற, சிந்தனைக்குச் சிறந்த விருந்துகள். கங்கை, யமுனை, சிந்து, பிரமபுத்திரா ஆகிய நதிகள், உற்பத்தியாகுமிடத்தில் குழந்தை போல மலையுச்சியில் மெல்லெனத் தவழ்ந்து சற்றுத் தூரம் சென்றதும் வளைந்து தாவிப் பாய்ந்து, தாண்டிக் குதித்து, வேகத்திலும் தோற்றத்திலும் பெரிதாகிச் செல்கின்றன. இடையிடையே பரமாத்துமாவிற் கலந்து தனது தன்மையை இழந்து விடும் சீவாத்மா போலச் சிற்ருறுகளும் ஓடைகளும் அவற்றுடனே ஒன்றிக் கலந்து விடுகின்றன.

### பொன்னும் பொலிவும்

மலைத் தொடரில் வானளாவிய முகடுகள், இன்ப துன்பத் துவந்துவங்களால் இடர்படா ஞான வீரரைப் போல கெம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. பின்டாரி, மிலம், கங்கோத்தரி என்பன போன்ற மிகப் பெரிய உறை பனி மலைகள் (Glacirs) பல இமயத்தில் இருக்கின்றன. இயற்கை வனப்பில் இணையில்லாத இடங்களாக காஷ்மீரம், குலுப் பள்ளத்தாக்கு குமௌன்ட், நேபாளம், பூட்டான், சிக்கிம் போன்றவை பலவும் இமயகிரியில் இலங்குகின்றன. இவை தவிர இமயத்தின் சுரங்கச் சாலையுள் அதிகமான பொன், இரும்பு முதலாம் உலோகப் பொருள்கள் உண்டு. பலவகைப் பிணிகளையும் மாற்றி, தேகாரோக்கியத்தையும், தேஜஸையும் அளிக்கவல்ல பலவகையான மூலிகைகள் நிறைந்திருக்கின்றன. ஆரோக்கிய ஸ்தலங்கள் ஆங்காங்கே உண்டு.

### புனித இடங்கள்

அனைத்தினும்மேலாகப்பல்லாயிரக் கணக்கான சாதுக்களும், யோகிகளும், தவம் புரிந்த பல பகுதிகளை இன்றும் நாம் பிரத்தியட்சமாகக் காண முடிகின்றது. தவம் செய்த பெரியார்களின் உயர்ந்த சிந்தனை அலைகள் நிறைந்த தூய இடங்கள் அங்கு செல்வோரையும் உயர் நிலைக்கு ஈர்த்துச் செல்வதை உணர முடியும்; சீவபோதம் மறைந்து செல்ல சிவபோதம் நிறைந்து மிளிரும். மாதவத்தோர் பண்டு போல் இன்று முளர். இன்று போல் என்றும் பலர் ஆங்கிருந்து, இறைவன் அருளமுதத்தைப் பெற்று மகிழ்வர். மக்களே அன்றி, ஆங்குள்ள விலங்கினங்களும், பட்சிசாலங்களும், மற்றும் சராசரங்களும் இன்ப வாழ்க்கையே பெற்றுள்ளன. மணங் கமழும் மலர் வகைகள், மனங் கவரும் பல நிறங்களுடன் பொலிகின்றன. ஆங்கு செல்வோரை வெண்ணிற மலர், புன்னகை புரிந்து வரவேற்கும். பைங் கொடிகள் அன்பர்களின் அடி பணிந்து மலர் சொரிந்து, மகிழ்ந்து நிற்கும். தனித்து நிற்கவியலாத தனிக் கொடிகள் மரங்களில் தாவிப் படர்ந்து, பின்னிப் பிணைந்து, தழைத்துச் செழித்து நிற்கும் காட்சி, ஆண்டவனை அணைந்து, இணைந்து பற்றி நிற்போர்க்கு இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்பதைத் தெளிவுற விளக்கும்.

(15-ம் பக்கம் பார்க்க)

# தேன் மதியே!

அழகொழுகக் கலகலென நகைசொரிந்து,
அமுதகுடம் தாங்கியமின் னிடைநுடங்கப்,
பழகுதமிழ் நடையினிலே, புலவர்நெஞ்சைப்
பறித்துண்ணத் துடித்துவரும் பாவாய்!இன்பக்
குளிர்வானப் பொய்கையிலே பூத்தெழுந்த,
கோமளவெண் தாமரையே! கோதகன்ற
ஒளிநிலவுப் பெட்டகமே! கவிதையின்பம்
ஊற்றெடுக்கப் பாட்டிசைக்கும் உயிர்ப்பொன்வண்டே! 1

இருட்புழுதி தனைக்கழுவிப் புவிக்குழந்தைக்
கெழிலூட்ட வான்கடலில், இரவுத்தாயார்
திரட்டியவெண் புனற்குடமோ? பசியையோட்டத்
தேடியதீம் பாற்குடமோ? தெவிட்டாஇன்பம்
தரும்அமிழ்தத் தமிழ்க்குடமோ? எழில்குலுங்கத்
தளிர்த்தஒளி மலர்க்குடமோ? தாபம்போக்க
வரும்காதல் மதுக்குடமோ? அமரர்உண்ணும்
வானமுதத் தேன்குடமோ? மதிநீ,யாதோ? 2

எழில்கனிந்த புதியஇளங் கலைஞர் பல்லோர்
இனிதமர்ந்த விசும்புமணிப் பந்தலின் கீழ்,
தளிர்மணிப்பூஞ் சுடர்ப்பெண்கள் புடையிற்சூழ,
தகதகெனும் மேனியுடன், சிலம்புகொஞ்சும்,
நளினமல ரடியெடுத்துச் சுயம்வரத்தை
நாடிவரும் தேன்மதியே! நங்காய்,உன்பால்
இளமனது பறிகொடுத்தேன்; என்பால், தூய
இனியதமிழ் மணமாலைக் கரம்நீட்டாயோ? 3

பெருநிலவுத் திருமகளே! கடைக்கண்ணாலே
பேசும்உயிர்க், காவியமே! மாசடைந்த
கருமுகிற்குள் திடுமெனநீ, முகம்மறைத்த
காரணமென்? ஆடவனைக் கண்டுகொண்ட
அருவருப்போ? நாணத்தால் அடைந்தபொற்போ?
அடடா.........!அத் திருமுகம்அத் திரைவிலக்கித்
தரும்அருமைத் தரிசனத்தேன் பருகிவிட்டேன்;
தங்கஉடல் நங்காய்,உன் தயவும்கண்டேன்! 4

அனியாயத் திமிராட்சி அகற்றி,மக்கள்
அருளாட்சி அமைப்பதுபோல், பகற்போதெல்லாம்,
சினவெறியால் கனல்பொழிந்த கதிரை,மேற்குத்
திசைக்கடலில் ஆழ்த்திவிட்டு, குளிர்ந்த அன்புப்
பனிமலர்த்தேன் முகம்காட்டி, அமுதவெள்ளம்
பாய்ச்சி,உயிர் அத்தனையும் பரிபாலிக்கத்
தனியியற்கை எழிலனைத்தும் நனிதிரட்டித்
தந்தகலைச் சந்த்திரிகைநீ, தழைத்து வாழ்க! 5

— "பரமஹம்ஸதாசன்"


குடும்பத்திற்குகந்த
நவீன பொரேட்டட் பவுடர்




மிக்காடோ மெட்ரோ டல்கம் பவுடர்

மிருதுவாக வாசனையூட்டப் பெற்றது.

உங்களது வியாபாரியிடம் அல்லது எங்களிடம் கேட்டு வாங்குங்கள்.

மிக்காடோ அன் கம்பெனி,
டாம் வீதி, கொழும்பு.
போன்: 3242


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1959 பெப்ரவரி மாதம் 1-ந் திகதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


# தீர்க்கமான முடிவு

திருகோணமலையில் ஒரு உயர்தரக் கல்லூரியை வெகு விரைவில் அமைத்து அதைக் கருவூலமாகக் கொண்டு தமிழர் பல்கலைக் கழகத்தை நிறுவுவ தென்று கடந்த வாரம் கொழும்பு நாவலர் கழகத்தில் கூடிய தமிழ் பல்கலைக் கழக இயக்கப் பொது சபையினர் செய்துள்ள தீர்க்கமான முடிவு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களால் பெரிதும் வரவேற்கக் கூடிய தொன்ருகும்.

மகாரகம ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, பேராதனை விவசாயக் கல்லூரி, கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் போதன மொழி சிங்களம் மட்டும் என்ருக்கப்பட்டு விட்டது. இதனுல் அங்கெல்லாம் தமிழ் மாணவர்கள் பயிற்சி பெற முடியாதபடி ஒதுக்கப்பட்டு விட்டார்கள். இந்த பரிதாபகரமான நிலையில் தமிழ் மாணவருக்கு உதவி புரிய முன் வந்துள்ள இயக்கம் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கமேயாகும். இந்திய பரீட்சைகளுக்கும் லண்டன் பரீட்சைகளுக்கும் தமிழ் மாணவர்களைத் தயார் செய்ய தமிழ் பல்கலைக் கழகத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

கடந்த இரண்டரை ஆண்டுக் காலமாக தமிழ் பல்கலைக் கழக இயக்கம் நடைபெற்று வருகிறது. கொழும்பில் நாவலர் கழகம் என்று ஒரு பகுதிநேரக் கல்லூரியை அது நடத்தி வருகிறது. இப்போது ஒரு முழு நேர உயர்தரக் கல்லூரியைத் திருகோணமலையில் 1960-ம் ஆண்டுக்கு முன்பதாக ஆரம்பித்து விடுவது என்று முடிவு செய்திருக்கிறது. இந்த முடிவு சரியான சமயத்தில் சரியான பாதையை நோக்கிச் செய்யப்பட்ட மிகப் பொருத்தமான முடிவேயாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் நாட்டின் கல்வித் துறையிலும் கலை கலாச்சாரத் துறைகளிலும் மேற்கொள்ளப்படும் ஒரு வித்யா முயற்சியே. இதை நாம் இன பேதமான அரசியல் கண் கொண்டு பார்க்க வேண்டியது அவசியம் இல்லைத் தான். ஆயினும், இன்று அரசியல் வானில் மொழியின் அடிப்படையில் திரண்டு உருண்டு வரும் கருமேகங்களைக் காணுமிடத்து தமிழ் பேசும் மக்கள் தாங்கள் புதிதாகத் தொடங்கவிருக்கும் இயக்கங்களையும், ஸ்தாபனங்களையும், செய்யவிருக்கும் முதலீடுகளையும் தமிழ் மக்கள் பெருந்தொகையினராக வாழ்கின்ற பரம்பரைத் தமிழ்ப் பிரதேசங்களுக்கே கொண்டு சென்று விடுவது புத்தியான காரியம் என்று தோன்றுகிறது.

இந்த நிலைக்களனில் பார்க்கும் போது தமிழ் மாகாணங்களில் உள்ள ஏனைய நகரங்களை விட சமய, சரித்திர, இதிகாச, தேவாரப் புகழ் பெற்ற திருமலை தான் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு ஏற்ற இடமாக அமைகிறது.

ஈழத் தமிழகத்துக்கு, இயற்கைத் துறைமுகத்தினையுடைய திருமலை, சர்வதேச மதிப்பைத் தேடித் தரும் ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது. வறளாது பாயும் வளமிக்க ஜீவநதியான மாவலி கடலொடு கலக்கும் சங்கம வாயிலிலே அது அமைந்திருக்கிறது. உலகின் புகழ் பெற்ற நாகரிகங்களும், நகரங்களும், தொழில் நிலையங்களும், கலைக் கழகங்களும் ஜீவநதிகளின் வாயோரங்களில் தான் வளர்ந்து பெருகின என்பது வரலாறு தரும் பாடம். வர்த்தக வாணிபத் துறைகளிலும், துறைமுக விருத்திகளிலும் வருங்காலத்தில் திருமலைக்கு ஒரு எதிர்காலம் உண்டு என்பது மறுக்க முடியாததாகும்.

பல்கலைக் கழகத்தைச் சுற்றி எதிர்காலத்தில் பாரிய குடியேற்றங்கள் ஏற்படுவது இயற்கை. எனவே புதிதாகப் பல்கலைக் கழகம் நிர்மாணிக்கப்படும் இடத்தில் குடிபதிகளும், தொழில் துறைகளும் விருத்தியடைவதற்கு ஏற்றதாக குறைந்த செலவில் பெருந் தொகையான காணி நிலம் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த நில வசதியும் நீர் வளமும் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை விட திருமலையில் அதிகப்படியாக உள்ளன என்பதை யார் தான் மறுக்க முடியும்?

எனவேதான் திரிகோணமலையைத் தேர்ந்தெடுத்தமை அரசியல், சமூக, பொருளாதாரம் ஆகிய எக்கோணத்தைக் கொண்டு நோக்கினும் முக்கோணத்துக்கும் பொருந்தும் ஒரு அரிய தேர்வாகக் காணப்படுகிறது.

முடிவு நல்ல முடிவு. இந்த முடிவை முற்றுறச் செய்வதற்கு வேண்டியது பெருநிதியான முதல். இந்த முதலையளிக்கும் முதல் கடமை தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் முன் நிற்கிறது. அவர்கள் மனம் விரிந்து, கரம் நீண்டால் தான் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் தழைத்தோங்க முடியும். எதிர்காலத் தமிழினம் சிறந்தோங்க முடியும். நமது சந்ததிகளும் வழித்தோன்றல்களுமான குழந்தைகள் கல்வி பெற்று அதனுல் கண் பெற்றவர்களாக வாழ முடியும். எனவே தான் இந்த அரிய வித்யா தர்ம கைங்கரியத்துக்கு வள்ளல்களும் வர்த்தகர்களும் வாரி வழங்க வேண்டும். ஐசுவரியவான்களும் மற்றவர்களும் அள்ளிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

# வட இலங்கை துறைமுகங்கள் அபிவிருத்திக்கு அரசாங்கத் தடை

## வருமானம் இல்லை என்று காரணம் காட்ட எடுக்கப்படும் ஈனத்தனமான நடவடிக்கை

### யாழ்ப்பாணத் துறைமுகத்துக்கு சேரவேண்டிய தீர்வையை கொழும்புத் துறைமுகம் வசூலிக்கும் முறைகேடு

வட இலங்கைத் துறைமுகங்களால் வருமானம் இல்லை என்று காரணம் காட்டி அவற்றை என்றைக்குமே அபிவிருத்தி செய்யாமல் விடவும் அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் பிரதேசத்தின் செழிப்பை மட்டந்தட்டவும் அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கிறது.

இதற்காக இப்போது செய்யப்பட்டு வரும் ஈனத்தனமான காரியம் யாழ்ப்பாண மக்களின் கண்களை திறந்து விட்டிருக்கிறது.

கொழும்புத் துறைமுகத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி காரணமாகச் சில சாமான் கப்பல்கள் யாழ்ப்பாணத் துறைமுகத்துக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன அல்லவா? முறைப்படி அவற்றிலிருந்து இறக்கப்படும் பொருட்களுக்குரிய சுங்கத் தீர்வை யாழ்ப்பாணத் துறைமுகத்தாலேயே வசூலிக்கப்பட வேண்டும். ஆனுல் நடப்பதோ வேறு விஷயம். கொழும்புத் துறைமுகமே அந்தத் தீர்வையெல்லாவற்றையும் வசூலித்துக் கொள்கிறது.

இதனுல் யாழ்ப்பாணத் துறைமுகம் தனக்குச் சேர வேண்டிய வருவாயை இழப்பதோடு யாழ்ப்பாண வியாபாரிகளும் சங்கடத்துள் ஆழ்த்தப் படுகிருர்கள். கொழும்புக்கு அவர்கள் சென்று தீர்வை செலுத்த வேண்டி இருப்பதால் சாமான்களைப் பெற்றுக் கொள்வதில் மிகுந்த கால தாமதமும் சிரமமும் ஏற்படுகின்றன.

## தடுப்புக் காவலில் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு வந்தது. திரு அமிர்தலிங்கத்திற்குப் பதிலாக வழக்கறிஞர் திரு சு. நடராசா என்னுடு சேர்ந்து கொண்டார்! திரு அமிர்தலிங்கம் எழுந்து முன் வரிசைக்கு சென்று உட்காரவும் அவர்மீது ஒரு கல் வந்து விழவும் சரியாக இருந்தது. அவர் மண்டை பிளந்தது. குபீரென்று இரத்தம் கொப்பளித்தது.

### மார்பில் தைத்தது

முதல் சிகிச்சைப் பெட்டியுடன் டாக்டர் நாகநாதன் விரைந்து சென்ருர். கூடவே ஆசிரியர் அரசரெத்தினமும் சகோதரர் மசூர் மௌலானுவும் பாய்ந்தோடினுர்கள். கண் மூடித் திறப்பதற்குள் அமிர்தலிங்கத்தின் காயத்திற்கு கட்டுப்போடப்பட்டது. திடீரென்று எங்கிருந்தோ வந்த கல் ஒன்று மட்டக்களப்பு வலைக்கட்டிறவு கிராமச்சங்கத் தலைவர் திரு க. சின்னத்தம்பியின் மார்பில் விழுந்தது. அவர் சிறிதுகூட அசையாது, சிரித்துக்கொண்டு அப்படியே இருந்தார்.

### தனிநாயக அடிகள்

ஜனசமுத்திரத்தை விலக்கிக்கொண்டு, பெய்யும் மழையையும் பொருட்படுத்தாது ஒரு வெள்ளை வெளேரென்ற உருவம் எங்களை நோக்கி வந்துகொண்டிருந்தது. அவ்வுருவம் வேறு யாருமில்லை. காங்கைக்குரிய தனிநாயகம் அடிகளாரானவர். எங்களோடு வந்து உட்கார்ந்து உற்சாகமும்—ஆறுதலும் கூறிச் சென்ருர். அவரை நோக்கி கல்லும், மண்ணும் காடையர்களால் வீசப்பட்டன. அவர் அவற்றைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மத்த கஜத்தைப் போல் அவர் அக்கூட்டத்தை ஊடுருவிச் சென்று மறைந்தார். ஒரு வயதுபோன சிங்கள வழக்கறிஞர்—பெயர் பத்திரானு—எங்களோடு வந்து, உட்கார்ந்து தெம்பு கூறிச் சென்ருர்.

### சோர்வு

பழை ஓயவே இல்லை. தொண்டர்கள் அசையவே இல்லை. [illegible] கொள்ளாத தொண்டர்கள் பலர் [illegible] இருந்தார்கள்.

குறிப்பாக மட்டக்களப்பிலிருந்து வந்த தொண்டர்கள் புகையிரதத்திலிருந்து நேராக காலிமுக மைதானத்திற்கே சென்றவர்கள். ஒரு, தேனீர் கோப்பை கூட குடிக்காதவர்கள் அவர்களில் இருந்தனர். உடையெல்லாம் நனைந்து தொப்பட்டமாகப் போய்விட்டது. பல தொண்டர்கள் குளிரினுல் தாக்கப்பட்டு சுய உணர்வு இழந்து போனுர்கள். அவர்கள் உடனுக்குடன் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

### உத்தரவு

பொழுது திசை திரும்பிய நேரம். இரவின் வருகையைக் குறிக்கும் சாய் கதிர்கள் தெரியத் தொடங்கின. பொலீஸார் எங்களைக் கலைந்து போகுமாறுகேட்டார்கள். நாங்கள் அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பதற்காக வருத்தம் தெரிவித்தோம். "நீங்கள் எழுந்து செல்ல மறுத்தால், நாங்கள் உங்களை அப்புறப் படுத்த வேண்டி நேரிடும்" என்று பொலீஸ் சுப்பிரிண்டெண்டன்ட் மிகு வினயத்துடன் சொன்னுர். நாங்கள் அதற்கும் விட்டுக் கொடுக்கவில்லை.

### அப்புறப்படுத்தல்

பொலீஸார் எங்களை அப்புறப்படுத்தத்தொடங்கினுர்கள். பொலீஸ் வண்டிகளில் தலைவர்கள் ஏற்றப்பட்டார்கள். கூடவே தொண்டர்களும் பொலீஸ் லாறிகளில் ஏற்றப்பட்டனர். லாறிகள் ஒன்றன்பின் ஒன்ருகச் செல்லத் தொடங்கின. அவற்றை துரத்திக்கொண்டு காடையர் கற்களை விட்டெறிந்தனர். அவை லொறிகளில் விழுந்தபோது, பெரும் சப்தத்தை எழுப்பின. தொண்டர்கள் சிரித்தபடியே அயர்ந்திருந்தனர். எங்களை ஏற்றிய வண்டிகள் காலி வீதியில் போய்க்கொண்டிருந்தன. வண்டிகள் எங்கு போகின்றன என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இத்தனை நிகழ்ச்சிகளும் அன்று 1956 ஜூன் மாதம் 5-ந் திகதி நடந்தவை.

1958 ஜூன் மாதம் 5-ந் திகதி ஆகிய இன்றும் எங்களை ஏற்றிய வண்டி எங்கு போகிறதென்று தெரியாத நிலையிலே ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டிருந்தோம். பொலீஸ் வண்டி இரைந்த வண்ணம் காலிமுகக் கடற்கரையைத் தாண்டிப் போய்க் கொண்டேயிருந்தது.

(தொடரும்)

## சட்டமும் சமூகமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியிருக்கிறது. துரதிர்ஷ்ட வசமாக தமிழ் பேசும் சாதாரண மக்களுக்கு இந்தச் சட்ட அறிவு போதுமான அளவு இல்லை. வருங் காலத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தின் கெடுபிடி நிலைமையை இன்னும் மோசமாக்கலாம்.

அதனுல் முன் எச்சரிக்கையாகத் தமிழ் பேசும் சாதாரண மக்களுக்கும் தேவையான அடிப்படைச் சட்ட அறிவை, சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சட்ட அறிவை சுதந்திரன் மூலம் புகட்ட விரும்பினேம். நமது பணிக்கு ஆக்கம் அளிக்க மிகப் பொருத்தமான அன்பர் திரு எஸ். சபாபதிப் பிள்ளை மனமுவந்து முன்வந்திருக்கிருர்.

திரு எஸ். சபாபதிப்பிள்ளை M. A., LL.B. (Lond) F.R.A.S., Bar-at-Law இலங்கை சட்டக் கல்லூரியிலும் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியிலும் விரிவுரையாளராக கடமையாற்றுபவர். வருமானவரி பரிசிலனைக் குழுவின் சட்ட ஆலோசகராகவும் பணி செய்கிருர்.

தமிழ் பேசும் மக்களுள் தலை சிறந்த சட்ட விற்பன்னராகவும் பட்டங்கள் பல பெற்றவராகவும் விளங்குபவர்களில் திரு சபாபதிப் பிள்ளையும் முக்கியமான ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னுர் சட்டமும் சமூகமும் என்ற தலைப்பில் சுதந்திரனில் எழுதுவார். முதல் கட்டுரை அடுத்த வாரம் வெளிவரும்.

—ஆசிரியர் சுதந்திரன்

## மூதூர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்போபுர என்றுதான் குறிப்பிடுமாம். இலங்கைச் சரித்திரத்தில் அக்ரபோதி என்ற பெயரில் சிங்கள மன்னர்கள் இருந்திருக்கிருர்கள். "அக்போ" என்பது அக்ரபோதி என்ற பெயரின் சுருக்கமாகும்.

இது மட்டுமல்ல "கல்லரிப்பு" என்ற தமிழ்க் கிராமம் "கோமபுர" என்று சிங்களப் பெயரிடப் படுகிறது.

இவ்வளவும் நடந்து கொண்டிருக்கையில் மூதூர் பிரதிநிதி மட்டும் தமக்கு ஒரு அரை மந்திரிப் பதவி பழுக்குமா என்று கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

புத்தக மதிப்புரை: அவசரகால நிலைமை '58

# பாணந்துறை இந்துக் கோயில் குருக்கள் உயிரோடு கொளுத்தப்பட்ட பரிதாபம் சரியாகச் சொல்லப்படவில்லை

## ஆனால் நயினாதீவு நாக விகாரைச் சம்பவமோ நன்கு நீட்டி முழக்கப்பட்டிருக்கிறது

### 'தமிழன் உயிர் சிறிது; பௌத்த ஆலயம் பெரிது' இதுதான் நூலாசிரியரின் உள்ளக் கருத்தா?

"இலங்கையில் தமிழ் பேசும் மக்களும் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள். அவர்களும் வெளியில் உள்ளவர்களுமாகச் சேர்ந்து மொத்தம் 5 கோடி பேர் தமிழ் பேசுகிறார்கள். ஆக 60 லட்சம் மக்கள், அதுவும் இலங்கையில் மட்டும் சிங்களம் பேசுகிறார்கள்"— இப்படி தமிழர்கள் இங்கு வாழும் உண்மையையும் அவர்கள் பேசும் மொழியின் பெருமையையும் உலகுக்கு எடுத்துரைத்த நூலாசிரியர் திரு. தார்ஸி வித்தாச்சி சரித்திரக் குறிப்புகளை மழுப்பிக் கூறியதன்மூலம் தன்னை யார் என்று காட்டிக் கொடுத்து விட்டதால் காரியத்தைக் கெடுத்துக் கொண்டார். அவசரகால நிலைமை '58 என்ற ஆங்கில நூல் மதிப்புரையில் கடந்தவாரம் இதைக் கண்டோம்.

நூலை மூன்று கூறுகளாக ஆராய்ந்ததில் முதற் கூறில் நிலைமை அப்படியென்றால் இரண்டாவதாக உள்ளதிலாவது அபிவிருத்தி உண்டா என்று பார்க்கலாம்.

மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகள், அட்டூழியங்கள் பற்றி நூலில் குறிப்பிட்டிருப்பதையே இரண்டாவது கூறுகக் கொண்டு ஆராயலாம்.

இந்த விவரணச் சித்திரத்தை ஆசிரியர் தீட்டத் தொடங்குமுன் மூன்று கேள்விகளை எழுப்பிவிட்டு அவற்றிற்கு விடைகாண முயல்கிறார்.

1. எப்படி நடந்தது?
2. எங்கேதொடங்கியது?
3. எந்த விதத்தில் நடந்து முடிந்தது?

எதனால் ஏற்பட்டது?

"இரண்டு வருட எம். ஈ. பி. ஆட்சியில் மக்களுக்கு 'அப்பே ஆண்டுவ' மனப்பான்மை ஏற்பட்டு விட்டது. சட்டத்தைமதிக்கும் தன்மை அடியோடு அற்றுப் போய் விட்டது. பொலிஸ் பட்டாளம் எல்லாம் தம்மைத் தீண்ட முடியாத வெறும் பொம்மைகள். பலாத்காரத்தின் மூலம் எதையும் செய்து விடலாம்" — இப்படியான தப்பு எண்ணங்கள் மக்கள் மத்தியில் வளர ஆரம்பித்ததால் தான் மே—ஜூன் மாதத்து மனிதாபி மானமற்ற மிருகத்தனமான செய்கைகள் நிகழலாயின. பிரதமர் பண்டாரநாயகாவும் பிரச்னைகள் தாமே காலகதியில் தீர்ந்து போகும் என்ற ஒரு அசட்டு நம்பிக்கையுடைய பேர் வழி. இன்னும் சில பிரச்னைகளை உடனுக்குடன் தீர்ப்பதற்குப் பதிலாய் பின் போடும் கெட்ட பழக்கமும் அவரிடம் குடிகொண்டு விட்டது. பண்டாரநாயகாவின் இந்த நம்பிக்கையும் குணமும் சூழ்நிலைக்கு சாதகமாக அமைந்ததால் பட்டாசுக் கட்டுக்கு மேலே கொள்ளிக் கட்டை வைத்தாற்போல் ஆகிவிட்டது என்கிறார்.

இதை விளக்கப் பின்வரும் சம்பவங்களை ஆசிரியர் குறிப்பிடுகிறார்:

1. யூ. என். பி. கட்சியினரின் கண்டிப் பாதயாத்திரையின்போது வீரர் எஸ். டி. பண்டாரநாயகாவின் தலைமையில் இம்புல் கொடையில் நடந்த வீர, தீர, பராக்கிரமச் செயல்.

2. கனேமுல்லையில் ரயில் நிறுத்தப்பட்ட சம்பவம்.

3. மோட்டார் இலக்கத் தகடுகளில் 'கை வைத்த'வர்களைச் சும்மா விட்டது.

4. 200 பௌத்த பிக்குகள் பிரதமர் வாசஸ்தலத்துக்குப் 'படையெடுத்து'ச் சென்று பண்டா—செல்வநாயகம் உடன்படிக்கையை உடைத்தெறிவித்தது.

5. பதவியாவில் தமிழருக்கென ஒதுக்கிய குடியேற்றக் காணிகளில் சிங்களவர்கள் பௌத்த பிக்குவின் தலைமையில் அத்துமீறிச் சென்று அமர்ந்தது.

இவற்றிற்கெல்லாம் சூத்திர தாரிகள் சந்தர்ப்பவாதிகளான அரசியல் அங்காடிகள் என்பதை நூலாசிரியர் அடித்துக் கூறுகிறார். ஆட்சேபிப்பதற்கில்லை நாம்.

#### தொடக்கம்

தொடக்கம் எங்கே என்ற கேள்விக்கு ஆசிரியர் தரும் விடையும் மறுக்க முடியாததாகும். அட்டூழியங்கள் உண்மையில் ஆரம்பித்தது மே 22-ந் திகதி ஆயினும் அதற்கான கருமேகம் திரண்டு தோற்றமளித்தது ஏப்ரல் மாதத்தில் என்கிறார். ஆக ஏப்ரல் மாதத்திலிருந்து மே மாதம் 30-ந் திகதி வரையுள்ள காலந்தான் கலவரக் காலம் என்று கணக்கிடப்படவேண்டும் என்பதாகக் காட்டியிருக்கிறார்.

'அக்கிரமங்கள் ஆரம்பித்தது பதவியாவில்; முடிந்ததும் அங்கே தான்'—இது ஆசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இப்படி வேறுயாராவது நம்பவில்லையானால் அவர்களை நாம் நாம் அங்கொடைக்கு அனுப்புவதுதான் ஒரே வழி.

#### கொடுமை

அடுத்து, மனிதனுக்கு மனிதன் இழைத்த கொடுமைகள். அட்டூழியங்கள் எந்த வகையில் நிகழ்ந்து முடிந்தன என்பதை விளக்கும் கட்டம். இங்கு வித்தாச்சியின் சுய உருவம் வெளியாகிறது. பேனா செய்த சதியோ? அல்லது இன உணர்வு துளிர்த்ததால் உள்ளம் வழி தவறியதன் விளைவோ தெரியவில்லை, சரியான நேர்மையான, நடு நிலைக் குறிப்பு காணப்படவில்லை. நடந்தது எல்லாம் நூலில் இல்லாவிட்டாலும் உள்ளதாவது சரியாகச் சொல்லப்பட்டிருக்க வேண்டாமா?

பொலன்நறுவையில் ரயிலில் வந்த இரு தமிழருக்கு நேர்ந்த கதி, மட்டக்களப்பில் ரயில் கவிழ்க்கப்பட்டதால் நால்வர் மாண்ட செய்தி, மயிரையும்சிரைத்து மஞ்சள் அங்கியும் தரித்து பிக்கு வேஷத்தில் சிங்களக் காடையர்கள் செய்த சேஷ்டைகள், பொலன்நறுவையிலும் இங்குராக்கொடையிலும், பதவியாவிலும் சிங்களப் பட்டாளம் திரண்டுதமிழரையும் அவர்களைக் காவல் செய்த அதிகாரிகளையும் அழித்து ஒழிக்கக் கிளம்பிய விபரீதம், கொழும்பில் இரத்மலானையில், பாணந்துறையில், களுத்துறையில் தமிழர்கள் அனுபவித்த இன்னல்கள், அடைந்த சேதம்— இவற்றையெல்லாம் பகிரங்கமாகக் குறிப்பிட்ட நூலாசிரியர் வித்தாச்சியைக் குறைகூற என்ன இருக்கிறது என்று கேட்கலாம்.

பாணந்துறை இந்துக் கோயில் குருக்கள் கொளுத்தப் பட்டார். சொல்கிறார் வித்தாச்சி. ஆனால் அது உரிய முறையில் சொல்லப்படவில்லை. படிப்பவருக்கு அனுதாபம் பிறக்க இடம் வைக்கப்படவில்லை. கோயில் குருக்கள் உயிரோடு கொளுத்தப் பட்டார் என்று பச்சையாகச் சொல்ல அவரால் முடியவில்லை. ஏன்?

#### சிங்கம்

காரணம் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நாகவிகாரை பிக்கு தாக்கப்பட்டார் என்ற செய்தியையும் நயினாதீவு பௌத்த ஆலயத்தில் இருந்த புத்தர் விக்கிரகம் பாழ்படுத்தப்பட்டதோடு ஆலயமும் சேதப்படுத்தப்பட்டது என்ற தகவலையும் தெரிவிக்க வேண்டிய இக்கட்டான நிலை வித்தாச்சிக்கு ஏற்பட்டபோது பாணந்துறை நிகழ்ச்சியையும் யாழ்ப்பாண நிகழ்ச்சியையும் ஒரேநிலையில்வைத்து ஒப்பு நோக்க அவருடைய இன உணர்வுஇடங்கொடுக்கவில்லைப்போலும்.

நயினாதீவு நாகவிகாரை நிகழ்ச்சி சம்பந்தமாக வித்தாச்சி பத்தி பத்தியாக எழுதியிருக்கும் பகுதியிலிருந்து ஒரு சிறு துணுக்கு இதோ:

"நாகவிகாரையை நாடிச் சென்றவர்கள் அங்கு மிகநுட்பமாகவும் வேகமாகவும் காரியமாற்றினார்கள். அவர்களின் செயல் முன் கூட்டித் திட்டமிடப்பட்டது. சந்தேகமில்லை. விகாரைக்கு டைனமைட் வைத்தார்கள்...பர்மாவிலிருந்து கொண்டுவரப்

(12-ம் பக்கம் பார்க்க)

## கைக் கூலி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராய் இருப்பதாக ஒரு டி. ஆர். ஓ. தமிழ்ப் பகுதியில் உள்ள ஒரு இந்துக் கோவில் முகாமைக்காரரிடம் தெரிவித்தாராம்.

இப்படிப் பணம்கொடுத்து சுதந்திரதினத்தைக் கொண்டாடுவிக்கும் திட்டம் இதற்கு முன் எப்போதும் கையாளப்பட்டதில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளிலும் எம். ஈ. பி. யும் கடைப்பிடித்ததில்லை யென்று சொல்லப்படுகிறது.

மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் உள்ள பல இந்துக் கோயில்களின் முகாமைக்காரர்கள் இந்தக் கைக் கூலியை வாங்கவும் பூஜை நடத்தவும் அறவே மறுத்து விட்டார்கள் என்று தெரிய வருகிறது. ஆயினும் வேறு சில சந்தர்ப்பவாதிகள் பணம் அடிக்கலாம் என்ற நோக்கத்தோடு அதிகாரிகளுக்கு வால் பிடிக்கிறார்களாம்.

### மட்டக்களப்பு நகரசபை

மட்டக்களப்பு நகரசபையில் இந்த சனிக்கிழமை வரும் ஒரு பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்தப் பிரேரணையின் படி சுதந்திரதினம் மிகப் பரந்த அளவில் துக்கதினமாக அனுஷ்டிக்கப்படும். நகரசபையின் மீதும் அதற்குச் சொந்தமான இதர ஸ்தாபனக்கட்டடங்களிலும் பெரிய கறுப்புக் கொடிகள் பறக்க விடப்படும். பத்தாயிரக் கணக்கில் துக்க தினத் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடவும் முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

## இலட்சியங்கள் . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் நாட்டு வருவாய் ஊதியமாகப் பங்கீடுபண்ணப்படுதல் நான் சொன்ன நெறியினின்றும் வழுவிக்கொண்டேயிருக்கின்றது. ஆனால் இயன்றளவு அந்த நெறியின் பாற்பட்டு நிலைபெறச் செய்தல் சமூகத்தின் கடமையாகும். ஒவ்வொருவரும் பெறும் ஊதியம் அவரவர்கள் சமூகப் பொருளாக்கத்திற்குச் செய்யும் சேவையின் அளவாக இராது கூடியும் குறைந்துமிருப்பது சமூக அமைப்பு, அரசியலமைப்பின் காரணமாகவும் கேள்வுக்குக் குறைவாக சேவைகளும் பொருள்களும் உற்பத்தியாதலை அல்லது உற்பத்தியாக்க இயலாதிருத்தலையே எடுத்துக்காட்டும். பொருட்கள் சேவைகளின் விலைகள்தான் ஒவ்வொருவரின் ஊதியத்திற்கும் அடிப்படையாகும். பொருட்கள் சேவைகளின் விலைகள் அவ்வப் பொருட்களுக்கோ சேவைகட்கோ இருக்கும் கிராக்கியைப் பொறுத்ததே, Price depends on demand and supply என்பர் ஆங்கிலத்தில். கெட்டித்தனமான நியாய துரந்தரர் பலர் இருந்தால் அவர்கள் சேவை 300 அல்லது 400 ரூபாய் விலையாக உயரமாட்டாது. 3 அல்லது 4 ரூபாய்க்கு பெற முடியும். கேள்விக்குத் தக்க அளவு பொருட்களும் சேவைகளும் சந்தைக்கு வராமையின் காரணமாகவே அவற்றின் விலையும் அவற்றை உடையவர்களின் ஊதியமும் கூடுகின்றது. அன்றி அவர்கள் சேவைகள் அவர்களின் ஊதியத்தின் பருமனுக்குத்தக்கதாக நாட்டுப் பொருளுற்பத்தியைப் பெருக்கவில்லை. இவ்வாறு தனி மனிதரின் வருவாய் ஏற்றத்தாழ்ச்சியாக இருப்பதை நிவாரணம் செய்வதே அரசாங்கம் வரி விதித்து அறவிட்டு சமூகத்தில் பல இலவச சேவைகள் கொடுப்பதற்கு ஒரு காரணமாகும். இந்த விடயம் பொருளாதாரத்திட்டத்தை நடத்துவதில் உபயோகிக்கும் உபகரணங்களைப்பற்றி ஆராயும்பொழுது எடுத்துக் கொள்ளலாம்.

உபாத்தியாயர்:
சரி இன்றைக்கு இத்துடன் நிறுத்துவோம்.

குமரேசு:
நான் போய் வருகிறேன்.

அப்பாக்குட்டி:
நானும் வரப்போறேன்.


ஆசிரிய அன்பர்கட்கு

தமிழரசுக் கட்சி வருடாந்த மகாநாடு

மேற்படி மகாநாடு சம்பந்தமாகப் பருத்தித்துறைக்கு விஜயம் செய்யும் ஆசிரிய அன்பர்களை அறிமுகம் கொள்ளவும், உபசரணைகள் செய்யவும் விரும்புகிறோம்.

'கலாபவனம்' மேலைப் புலோலி பருத்தித்துறை.

வே. சிவக்கொழுந்து நூலாசிரியன்-யாழ்ப்பாணன்



இந்தியாவின் உயர்ந்த உற்பத்தி!

மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களோ

★ ஒருவரின் ஆயுள் காலம் முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி
★ எல்லோரும் வாங்கக் கூடியதாக, குறைந்த விலையில் கிடைக்கும்.
★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது
★ உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:

ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி,
கொழும்பு-11
போன்: 5060, 4243.

மட்டக்களப்பில் கிடைக்குமிடம்:

அஷாபியா ஸ்டோர்ஸ்,
16, பஜார் வீதி, மட்டக்களப்பு.

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோசன் கவுன்ஸிலால் நடத்தப்படுகிறது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனச்சாட்சியின் தண்டனை

சிறுகதை — எழுதியவர்: தேவன்—யாழ்ப்பாணம்

வேலாயுதத்தின் தலை முறை தேய்ந்து வருகிறது. அவனைப் போன்றவர்கள் இனிமேல் தோன்ற மாட்டார்கள். ஆமாம்! நேற்றுத்தான் அவன் காலமானன். — சிவபதமடைந்தான் என்பது கௌரவமாயிருக்குமோ? இதில் என்ன கௌரவம் வந்தது? செத்தான். ஏதாவது நோய், நொடி வந்து செத்திருந்தாலுைல் பரவாயில்லை. அல்லது தற்கால நாகரிகத்திற்கு ஏற்றவாறு 'சத்திர வைத்தியம் சித்தியடைந்தது, நோயாளி மாண்டான்' என்று மடிந்திருந்தால் கூட குற்றமில்லை. அப்படியானல் அவனைக் கொன்றது என்ன? மனச்சாட்சி!

குற்றம் செய்தவன் பச்சாத் தாபப்பட்டு தற்கொலை செய்து கொண்டான் என்ருல் அதை மனச்சாட்சி விதித்த மரண தண்டனை எனலாம். ஆனல் குற்றமே செய்யாதவன் நஞ்சைக் குடித்தால்......? அங்கேயும் மனச் சாட்சிதான். ஆனல் ஒரு சாவு நிம்மதியைத் தருகிறது. இன்னென்று பரிதாபத்தை உண்டுபண்ணுகிறது.

வேலாயுதம் நாற்பத்தி மூன்று ஆண்டுகளுக்கு முன் மணியகாரன் சித்திரவேலு வீட்டில் இருபது வயதுப் 'பொடியனுய்' சமைக்க வந்தான். பெரியவருடைய காலத்திலேயே அவருடைய மகன் சின்னத்தம்பி அப்புக்காத்துடன் கொழும்புக்கு வந்துவிட்டான்.

பரம்பரை பரம்பரையாக திமிர் ஏறிய-அதிகாரத்திமிர் பணத் திமிர் எல்லாந்தான்-குடும்பத்தில் பரமயோக்யனுக, நம்பிக்கைக்குப் பாத்திரமானவனுக, ஏவாமல் பணி புரியும் சேவகனுக இவ்வளவு காலமும் வாழ்ந்து கல்யாணம் பண்ணி, பிள்ளைகளைப் பெற்று, படிக்க வைத்து, அவர்களுக்கும் கலியாணம் செய்துவைத்து விட்டான்.

சித்திரவேலு சின்னத்தம்பி அப்புக்காத்து படிக்கும் போதே, தகப்பனர் வாழ்ந்த போதே கலியாணம் செய்து கொண்டார். ஆனல் அந்த சீமாட்டி, 'மன்னன்' படிப்பு முடித்துக்கொண்டு கொழும்பிலேயே தங்கி பெயர்ப் பலகை மாட்டி தொழில் செய்யத்தொடங்கி இரண்டு வருடமாகவில்லை, மறு உலகம் போய் விட்டாள்.

அப்பொழுதுதான் வேலாயுதத்துக்கு 'பிரமோஷன்' கிடைத்தது. அவனுக்கு ஊரை விட்டுப் போகப் பிரியமில்லை. ஆனல் மணியகாரனுக்கு முன்னல் வாய் திறந்தறியான். ஆகையால் பேச்சு மூச்சின்றி மூட்டை முடிச்சுகளைக் கட்டினன். அவனுக்கு கொழும்பு பிடிக்கவில்லை. முக்கியமாக 'குவினைன்' மாதிரி குழாயில் வருகிற தண்ணீர்! ஆனல் அவனுடைய விருப்பு வெறுப்புக்களை யார் கேட்டார்கள்.

ஆனல் அவனை அலைக்கழித்தது தன் சௌகரியம் மட்டுமல்ல, சின்னத்தம்பியின் போக்கும்தான். 'தங்கமான மனுஷனுக்கு இப்படியா வந்து பிறக்க வேணும்?' என்று அயல் வீட்டு வேலைக்காரனேடு அவன் அரட்டை அடிக்கவில்லை. மனத்துக்குள்ளேயே புழுங்கினன். அந்த 'மகாலட்சுமி' இந்த 'அட்டா துட்டித்தனத்தை' இருந்து பார்க்க முடியாமல் தான் கண்ணை மூடினளோ என்று ஏங்கினன்.

குடிப்பது, வெறிப்பது, கூத்திகள் ஒன்றுக்கும் குறைச்சலில்லை. பெரிய பங்களா, வீட்டைக் கட்டி ரோட்டிலே சில்லுப் பூட்டி விட்டது போலக் கார்-எல்லாமிருந்துமென்ன என்று தான் எண்ணினன். பாவம்! கற்பு, ஏக பத்தினி விரதம், பிறன் மனை நோக்காத பேராண்மை என்று பெரிதாக நினைக்காவிட்டாலும் ஏதோ எல்லாம் பிசகான காரியம், தவருன பாதை என்று தான் எண்ணினன்.

இத்தகைய சின்னத்தம்பிக்கு நட்பு, உறவு என்று பலர் சேர்ந்தனர். அதனல் தொழில் விருத்தியாயிற்று. அதிர்ஷ்ட தேவதையின் கடாட்சமும் இருந்தது. எல்லாம் ஒரு விஷச் சக்கரம். பெரிய மனிதனயிருக்க பணம் வேண்டும். பணம் சம்பாதிக்க பணக்கார கட்சிக்காரர் வேண்டும். பணக்காரக் கட்சிக்காரரை மயக்க பணக்கார அப்புக்காத்தாக நடிக்க வேண்டும். பணக்கார அப்புக்காத்தாக நடிக்க 'பார்ட்டிகள்' 'டின்னர்கள்' வைக்க வேண்டும், குடிக்க வேண்டும்.

இவ்வளவுக்கும் வேலாயுதத்திற்கு கரைச்சல் என்று ஒன்றுமில்லை. காலையில் காப்பி, தனக்கும் அப்புக்காத்துஐயாவுக்கும் பலகாரம், மத்தியானம் இருவருக்கும் சமையல், இரவில் தனக்கு மட்டும் ஏதாவது —இவ்வளவுதான். ஐயா இரவில் வீட்டில் சாப்பிடுகிற வழக்கமே கிடையாது. நண்பர்கள் என்று நாலுபேர் சேர்ந்துவிட்டால் எல்லோருக்கும் எடுப்புச் சாப்பாடுதான். வேலாயுதத்தின் சமையல் நாகரிகமாய் அவர்களுக்குத் தோன்ருது. அவன் சுத்தமான உடைகளுடன் பரிமாறவேண்டியதுதான். நல்ல பெரிய, வசதிகள் நிறைந்த அந்த வீட்டைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பும் அவனுடையது.

அப்படியானல் வேலாயுதம் ஏன் முணு முணுக்க வேண்டும்? காய்கறி வாங்கப் பணம் கொடுத்தால் மீதி எவ்வளவு, எங்கே என்று கேட்காத எசமான் மீது ஏன் அதிருப்தி? 'எல்லோருக்கும் நல்லவர். தனக்கு மட்டும் கெட்டவர்' என்பதுதான் அவனுடைய அபிப்பிராயம். சதம், சதமாக கணக்குப் பார்க்கிறவனுக்கு பணம் பாழாய் கரைவதைப் பார்க்க வயிறெரிந்து கொண்டிருந்தது. பார்க்கப்போனல் அது அவன் பணமுமல்ல. பத்திரம் பண்ணினல் அதில் பங்கு அவனுக்கு கிடைக்கப்போவதுமில்லை. அதுதானே, அவன் பழைய தலைமுறையைச் சேர்ந்தவன் என்று சொல்லியாயிற்றே!

இந்த நாளையப் "பொடியனுய்" இருந்தால் [...]னும் ஒரு 'டோஸ்' அடித்துவிட்டு 'சௌடாலாய்' இருந்திருப்பான். ஆனல் வேலாயுதம் அப்படிப்பட்டவனல்லன்.

இப்படி இருக்கையில் பெரியவர் சித்திரவேலு 'போன' செய்தி வந்தது. மகனும் வேலைக்காரனும் 'பறந்தடித்துக்கொண்டு' ஊருக்குப் போனர்கள். வேலாயுதம் அழுத அளவு சின்னத்தம்பி அழுதிருப்பாரோ என்ருல், அது சந்தேகந்தான். கொழும்புக்குத் திரும்புகையில் 'நீ வாறியோ, நிக்கப்போறியோ?' என்று கேட்டார் சின்னத்தம்பி. அப்பொழுது வேண்டுமானல் நின்றிருக்கலாம். அவனல் 'நிற்கப்போகிறேன்' என்று சொல்ல முடியவில்லை. பெரியவரும் போய் தனியனுகிவிட்ட சின்னத்தம்பியை 'ஊராெனருத்தன்' இல்லாமல் கொழும்பு திரும்பவிட அவன் மனம் ஒப்பவில்லை.

அதனல் தான் வந்தது நாசமனைத்தும். இன்றைக்கு அவன் செத்திருக்க வேண்டி நேர்ந்திருக்காது. யாழ்ப்பாணத்திலேயே தங்கியிருந்தானனல் இன்று தன் பேரப்பிள்ளையைக் கொஞ்சிக் கொண்டிருப்பான், ஹூம்!

கொழும்புக்கு வந்த சில வருஷங்களுக்குப் பிறகு சுசிலா என்ெருரு பெண் அப்புக்காத்து வீட்டுக்கு வந்து போகத்தொடங்கினள். நிமிஷத்துக்கொரு வாடகைக் காரில் வருவதும், வீடு முழுவதும் சுற்றித் திரிவதும் அவளுடைய உடையும் அலங்காரமும், 'சள, சள' வென்ற பேச்சும் வேலாயுதத்துக்குப் பிடிக்க வில்லை. அதனலென்ன? சின்னத்தம்பிக்குத் திருப்தியாயிருந்தது.

அதன் பலனுக அவள் அந்த வீட்டுக்கே குடிவந்தாள். தனக்கு எசமானியாக என்பதை உணர வெகு நேரம் பிடிக்கவில்லை வேலாயுதத்துக்கு. மீண்டும் பெரியவரை நினைத்துப் பார்த்தான். அவர் போய் விட்டார். கொடுத்துவைத்தவர். அவருடைய பிரதிநிதியாகத் தான் மட்டும் இந்த அக்கிரமங்களை யெல்லாம் காண வேண்டுமென்றிருந்ததே என்று வருந்தினன். அவர் போனதோடு சரி, தன் உறவைத் துண்டித்துக் கொள்ளாதது பிசகு என்று தோன்றிற்று.

இந்த லட்சணத்தில் அவனுக்கும் சுசிலாவுக்கும் எப்படி உறவிருந்திருக்க வேண்டும் என்று வர்ணிக்கத் தேவையில்லை. கீரியும், பாம்பும் என்ருல் சரி. ஆனல் இங்கே வைரிகள் இருவரும் ஒரேதரத்தவர் அல்லர். ஆகையால் நேர் மோதுதல் ஒன்றும் கிடையாது. ஆனல் உள்ளே ஒருவரை மற்றவர் விழுங்கிவிட வேண்டும் என்று கருவிக் கொள்கிற அளவுக்கு ஆத்திரம். சுசிலா வேண்டுமென்றே இவனை அலட்சியம் செய்தாள். 'தேவடியாளுக்கும் இவளுக்கும் என்ன வித்தியாசம்?' என்று வேலாயுதம் நினைத்ததன்.

உரிமையோடு குடும்பத்தில் ஒருவனுய் வாழ்ந்த பாசம் முறைதவறி உள்ளே நுழைந்தவளை வெறுத்தது. "நமக்கு எதுக்கு வம்பு" என்றிருக்க மனம் விடவில்லை. கல்யாணம், சம்பந்தம் என்று சுசிலாவே உள்ளே நுழைந்திருந்தால் வேலாயுதம் அவளைத் தலைமீது வைத்துக் கொண்டாடியிருப்பான். அவள் பாதங்களைப் பூவென்று கண்ணில் ஒற்றியிருப்பான். ஆனல்...

ஸ்நான அறையில் கழற்றி வைத்த வைரக்காதோலையைக் காணவில்லை. தான் வாங்கியதல்ல. சின்னத்தம்பி வாங்கிக் கொடுத்தது. ஆடிய ஆட்டம், குதித்த குதிப்பு! இம்மாதிரி நிகழ்ச்சிகள் சர்வ சாதாரணம், பணக்கார வீடுகளில். கடைசியாக வேலாயுதத்தின் மீது பழி விழுந்தது...சுமத்தப்பட்டது. சின்னத்தம்பியும் பலவீனமான ஒரு வேளையில் நிதானம் தவறிவிட்டார். அவரும் வேலாயுதத்தை வாய்க்கு வந்தபடி பேசிவிட்டார்.

அன்றிரவு படுக்கைக்குப் போன வேலாயுதத்திற்கு ஒரே யோசனை. பெரியவருடைய காலத்தில் 'பெரிய அம்மா' ஒருநாள் கிணற்றடியில் வைத்த மூக்குத்தியை அவன் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தபோது, அவனை எவ்வளவு பாராட்டினர்கள். இளமையிலே அந்த

(15-ம் பக்கம் பார்க்க)

# நீலவேணி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"சரியாகச் சொன்னுய் நீலா! உண்மையில் நீ இதுவரை கேட்ட வர்ணனை என் 'இந்துமதி' நெடுங் கதையில் வரும் ஒரு கட்டம். இது போன்ற கட்டங்கள் இன்னும் எத்தனையோ உண்டு"

"நீயும், உன் 'இந்துமதி!' யும். கதை அளந்தது போதும். இனி நடந்ததைச் சொல்"

"நடந்தது நடக்காதது என்றெல்லாம் கதாசிரியர்களுக்குப் பேதம் கிடைக்காது. அவர்கள் அகராதியில் எல்லாம் ஒன்றுதான். நடந்த சம்பவத்துக்குக் கற்பனை மெருகூட்டி நல்ல தொரு நவீனமாகப் படைத்துவிடுவான் ஒரு கதாசிரியன். அதுபோல் நடக்காத ஒன்றையே புதிதாகக் கற்பனைபண்ணி வாசகநேயர்களை 'ஆஹா, அற்புதம்!' என்று சொல்லி அவர்களைக் கிறுங்க வைத்து விடுவான். தெரியாமலா சொன்னர்கள், 'கதாசிரியர்கள் பிரம்மனுக்குச் சமானம் என்று"

"பிரம்மா என்ன; ருத்ரனுகவே இருந்துவிட்டுப் போங்கள்! எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. என் கேள்விக்குத் தகுந்த பதில் வந்தால்போதும்"

அழகேசனுக்குத் தன் தங்கையின் குழந்தை உள்ளத்தை எண்ணியபோது சிரிப்பு வந்தது. இளமுறுவல் அவன் கம்பீர வதனத்தில் வந்து விளையாடியது. சொன்னன்:

"அம்மா நீலம்! வீணுக உன் பட்டு மனசைச் சந்தேகங்களால் சுட்டுக் கொள்ளாதே! நான் எங்கும் சென்றுவிடவில்லை. எந்த விதத் தப்புத் தண்டாக்களுக்கும் போகவில்லை. 'இந்துமதி'யை அழகுபடுத்துவதில் ஈடுபட்டுவிட்டதால் இன்று வீட்டுக்கு வர முடியாமல்போய் விட்டது. உனக்கே தெரியுமே உன் அண்ணுவின் சுபாவம். மனத்தை அடக்கிப் பேனவைத் தூக்குவதென்ருல் அவனுக்குள்ள சோம்பல் சொல்லி முடியாது. பேனவைத் தூக்கிவிட்டால் யம முயற்சிதான்! கண் எதிரில் யானையே வந்து நின்ருலும் அவனுக்குத் தெரியாது. எழுதிக்கொண்டே இருப்பான். விரல்களும்-விழிகளும் 'நிமித்து'விடும் மட்டும் எழுதுவான். இடுப்பு தெறித்தாலும் லஷ்யமில்லை. நேற்று என் கற்பனைக்கு ஒரு 'ரம்யமான' சூழல் வந்து வாய்த்தது. கற்பனை கதகத என்று பாய்ந்துகொண்டேயிருந்தது. எழுத எழுத ஒரே ஆனந்தமாக இருந்தது. ஊழிக்காலம் முடியுமட்டும் எழுதிக்கொண்டேயிருக்கலாம்போல இருந்தது. 'ஆண்டவனே இன்று விடிந்துவிடக்கூடாது!' என்று வேண்டிக்கொண்டு எழுதினேன். கற்பனையின் ஓட்டமும்; பேனவின் ஓட்டமும் என் காரியத்தின் ஒரு பெரும் பகுதியைக் குறைத்துவிட்டன. எழுதி முடித்ததும், 'இவ்வளவு இன்று எழுதினேமா?' என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. ஒரே அசதியாக இருக்கின்றது. பிரசவம் முடிந்தது போல் இருக்கின்றது. மெய் மறந்து இன்று முழுவதும் தூங்கினல்தான் 'தளர்ச்சி' சரிவரும்" என்று 'மளமள' வென்று கூறிக்கொண்டு போனன் அழகு.

அழகேசன் கூறியவற்றைக் கேட்க நீலவேணிக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

"எழுதினல் இப்படிக் களைக்குமா?" என்று கேட்டு வைத்தாள் நீலா.

'எழுதினல் இப்படிக் களைக்குமா' என்று அவள் கேட்ட கேள்விக்கு அழகேசன் கொடுத்த பதில் 'உளநூல்' தத்துவார்த்த அடிப்படையில் அமைந்திருந்தது. நீலவேணியின் அறிவுப் பசிக்கு அது விருந்தாக அமைந்தது. தான் செய்ய வேண்டிய கருமத்தையே ஒரு கனம் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது அந்தப் பதில்.........

(தொடரும்)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜிரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலவரத்தில் ஹிங்குராக்கொடையில்

## கரவெட்டி தமிழாசிரியர் பலி

## திருமண வீட்டிலே பொலீஸார் நீட்டியது கந்தப்பு பற்றிய கடைசிச் செய்தி

### ஐந்து குழந்தைகளும் அன்னையும்

### அநாதரவாய் விடப்பட்டுள்ள பரிதாப நிலை

சூது வாது அறியாத அந்தப் பிஞ்சுக் குழந்தைகள், "அப்பா ஹிங்குராக்கொடைக்குப் படிப்பிக்கப் போய் விட்டார்" என்றுதான் மழலைபொழிந்து பெற்ற அன்னையையும் மற்றுமுள்ள 'மாமா'க்களையும் மகிழ்வித்தார்கள். அது அப்போது!

ஆனால் இப்போ......?

"அப்பாவை வெறியர்கள் வெட்டிப் போட்டார்கள்"—கலங்கிய கண்களோடு நலமிழந்த குரலில் கூறுகின்றன அந்தக் குழந்தைகள். பிஞ்சு உள்ளங்கள் பேதலித்து விட்டன. வஞ்சினம் அங்கே வளர்கிறது என்பதற்கான அறிகுறி இது. இன்னும் சில ஆண்டுகள் கழிந்த பின்னர், உள்ளடங்கி வளர்ந்துவரும் குமுறல் வெளிப்பட்டால் என்ன ஆகும்?

"அப்பாவை ஆடு மாடு போல அறுத்தெறிந்த அக்கிரமக்காரர் கூட்டம் இந்த மண்ணிலேதான் வாழ்கிறது கண்களா" என்று சேதியை, பெற்றவள் ஊட்டும் ஒவ்வொரு வாய் கஞ்சியோடும் சேர்த்துக் கொடுத்துப் பிள்ளைகள் தக்க பருவம் அடைந்ததும், "என் கடமை முடிந்தது; உங்கள் கடமையை இனி நீங்கள் செய்யலாம்" என்று ஆணை வேண்டாம், அனுமதி மட்டும் தந்து விட்டாளேயானால் என்ன நடக்கும்?

#### என்ன நடக்கும்?

எரிமலை வெடித்தது போல் ஆகாதா? பிரளயம் ஒன்று ஏற்படாதா? இரத்த வெள்ளத்திலே செத்த உடல்கள் மிதந்து செல்லும் பயங்கரக் காட்சி தென்படாமல் போகுமா? இலங்கையை விட்டால் போக்கிடமற்ற 60 லட்சம் மக்கள் கூட்டம் பேய்க்குரல் எழுப்பி, "போதும் போதும்" என்று கெஞ்சிக் கூத்தாடி உயிருக்காக மன்றுடிக் கொள்ளும் நிலைமை வராதா?

வரத்தான் செய்யும். அதற்கான வீரமும் வைராக்கியமும் தமிழனிடம் இல்லாமல் இல்லை. காலத்துக்கேற்ற விவேகமும் அவனிடம் இருக்கிறது. அளவுக்கு மிஞ்சிய பொறுமையும் கூட அவனிடம் குடிகொண்டு இருக்கிறது. அதனால் யாரும் அஞ்ச வேண்டியதில்லை.

பொறுமை எந்த வகையில் செயல்படுகிறது என்பதற்கும் ஆளவந்தார் பொறுமை சாலிகளுக்கு அளிக்கும் பரிசு என்ன என்பதற்கும் விளக்கம் அதிகம் வேண்டியதில்லை.

#### வந்தது சாவோலை

சரவணமுத்து கந்தப்பு! யாழ்ப்பாணம் கரவெட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவர்; ஐந்து குழந்தைகளின் அருமைத் தந்தை, வள்ளிப் பிள்ளையின் வாழ்க்கைத் துணைவர். பள்ளிச் சிறார்களுக்கு எழுத்தறிவிற்கும் உயரிய ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டவர். கடைசியாகக் ஹிங்குரக்கொடையில் அரசினர் தமிழ்ப் பாடசாலையில் பணி செய்து கொண்டிருந்த சமயம் மே—ஜூன் மாத இனக் கலவரம் வந்தது. அத்தோடு அவருக்குச் சாவோலையும் சேர்ந்தே வந்தது.



காலஞ் சென்ற ஆசிரியர் திரு. சரவணமுத்து கந்தப்பு

#### கந்தப்புவின் உயிர் கால் தூசு

தமிழ்......தமிழ் என்று தமிழுக்காகப் பேசினார். தமிழன்......தமிழன் என்று தன்மான முழக்கம் செய்தார். தமிழ்ப் பண்பாடு.....தமிழ்ப் பண்பாடு என்று அந்தப்பண்பாட்டிலேயே வாழ்ந்தார். அதனாலேயே இழந்தார் தமது இன்னுயிரை.

பலகாலமாக இந்தத் தமிழுணர்ச்சி மிக்க தமிழர் மீது, பழிவாங்கும் ஒரே நோக்கத்துக்காக்க 'கண்' வைத்து வந்த கயவர்கள் இனக் கலவரம் வந்ததும் சந்தர்ப்பத்தைத் தமக்கு சாதகமாக்கிக் கொண்டார்கள்.

ஹிங்குராக்கொடையில் இருந்த தமிழாசிரியர் சரவணமுத்து கந்தப்புவைக் காப்பாற்ற அங்கு யாரும் முன்வரவில்லை. மூடமான ஆட்டைத் தோளிலே சுமந்து அதன் துயர் துடைத்த கருணை வள்ளல் புத்தரைப் போற்றி, அவர் புண்ணிய நெறியைப் பின் பற்றித் தாம் நடப்பதாகப் பெருமையடிக்கும் புண்ணியவான்களுக்குக் கந்தப்புவின் உயிர் கால் தூசுக்குச் சமானமாகி விட்டது. அணுவணுவாகக் கந்தப்புவைச் சாகடித்த 'ஜென்மங்கள்' அந்தச் சேதியை வெளியில் தெரிய வராமல் இருட்டடிப்பும் செய்து விட்டார்கள்.

#### மணவீட்டில் பிணக்களை

அவரது ஊரிலே, அவராலேயே ஒழுங்கு செய்யப்பட்ட திருமணம் ஒன்று. நாள் வந்தது. நமது ஆசிரியர் கந்தப்பு அன்று திருமணத்துக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. வந்தது செய்தி மட்டுந்தான். கந்தப்பு கொல்லப்பட்ட செய்தி அது. கொல்லப்பட்டு சுமார் ஒரு மாதம் கழித்து பொலீஸாரிடமிருந்து கிடைத்த செய்தி அது. ஊர் அல்லோலகல்லோலப் பட்டது. மணவீடு பிண வீடாகியது. வள்ளிப்பிள்ளை விழுந்து புரண்டு ஆற்றொணுது அழுதார். குழந்தைகள் கதறி அழுதன.

#### அரசாங்கம் கைவிரிப்பு

பயன்......?

கந்தப்பு போனவர் போனவர்தான். வள்ளிப்பிள்ளை விதவை. குழந்தைகள் அநாதைகள். காப்பாற்றுவது யார்? கடவுள் காப்பாற்றட்டும் என்று சொல்லிக்கையை விரித்து விட்டது. அரசாங்கம். கந்தப்புவின் கொலையைத் தடுக்கும் பொறுப்பை ஏற்காத கடவுள் இன்று குடும்பக் குறையைத் தீர்ப்பார் என்று வள்ளிப் பிள்ளை திடமாக நம்பியிருந்தால் அரசாங்கத்தின் உதவியை நாடியிருக்க வேண்டியதில்லை. இந்த உண்மை ஆளவந்தான் உள்ளத்தில் உதயமாகவில்லை.

பத்து வருஷம் கடமை செய்யாத எவருக்கும் 'பென்ஷன்' கிடையாதாம், அதனுல் கந்தப்புவுக்கு—அவரின் அநாதைக் குடும்பத்துக்கு அது இல்லையாம்.

நன்கொடைப் பணம்—அதுவும் கிடையாதாம். இறந்த அனைவரின் குடும்பங்களுக்கும் கொடுக்க அரசாங்கத்துக்குக் கட்டுபடியாகாதாம்.

நஷ்டஈடு—அதுகூடக் கிடையாதாம்.

ஹிங்குராக்கொடையில் கந்தப்புவிடமிருந்து அபகரிக்கப்பட்ட பொருட்கள்......? எப்படிப் போயின, இப்போ எங்கே இருக்கின்றன என்ற விபரம் தெரியாதாம். அதனுல் அவற்றைத் திருப்பிப் பெறலாம் என்ற நம்பிக்கை வேண்டாம் என்று சொல்லாமல் சொல்லப்பட்டிருக்கிறது.

#### தோழர் என்ன செய்தார்?

இந்த நிலையில் சிரழியும் குடும்பத்தினரைக் கைதூக்கிவிட வேண்டிய பொறுப்பு அந்த ஊர்ப் பிரதிநிதிக்கு முக்கியமாக உண்டு. ஆனுல் தொழிலாளர் போராட்டமாகவோ அல்லது மூக்குப் பேணி—கண்ணுடி தம்ளர் பிரச்னையாகவோ இது இல்லாத காரணத்தாலோ என்னவோ தோழர் கந்தையா அந்தப் பக்கமே நீண்ட நாட்களாகத் திரும்பியும் பார்க்கவில்லை; தமிழரசுத் தலைவர் திரு வன்னியசிங்கமும் மற்றும் பிரமுகர்களும் வள்ளிப் பிள்ளையிடம் தக்கசமயத்தில் சென்று ஆறுதல் கூறித் தேற்றிய பின்னர்தான் தோழர் இது விஷயம்தெரிய வந்ததும் கடிதம்மூலம் அனுதாபம் தெரிவித்திருந்தார். தேற்றுவதைத் தவிர தமிழரசார் வேறென்னதான் செய்யமுடியும்? ஆட்சி அவர்கள் கையில் இருந்தாலல்லவா............

#### ஆசிரியர் சங்க முயற்சி

ஆசிரியர் சங்கம் தோழர் கந்தையாவைப்போல் அல்லாமல் நல்ல முறையில் அனுதாபம் தெரிவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. கந்தப்புவின் குடும்பத்துக்குப் பொதுமக்களிடமிருந்து

(12-ம் பக்கம் பார்க்க)

# பணம் பேசினால்...!

உங்கள் கலைவாணர் என். எஸ். கே. இன்று உங்கள் மத்தியில் இல்லை. அவர் இருந்தால் நான் பேசவேண்டிய அவசியம் ஏற்படாது. மனுஷன் அன்று என் பெயரால் படம் பிடித்துக் காட்டியவர் இன்று இருந்திருந்தால் என்ன என்னவெல்லாம் செய்திருப்பாரோ?

சிலவேளைகளில் உங்கள் கலைவாணரைக் கடித்துத் தின்றுவிடலாம்போல் எனக்குத் தோன்றும். என்னை அப்படிக் 'கிழி......கிழியென்று' கிழித்துவிடுவார். இருந்த போதிலும் ஆளுக்கு நல்ல மனசு; தங்கமான குணம். அந்தச் செட்டியார், இந்த ரெட்டியார் உந்த முதலியார் எல்லாரையுந்தான் பார்த்திருக்கிறேன். என். எஸ். கே.யைப்போல என்னை யாரும் அலட்சியப்படுத்தியதில்லை. என்னை மனதாரப் பொதுவுடமையாக்கி அதில் பூரிப்படைந்தவர் கலைவாணர் ஒருவர்தான் இந்த இருபதாம் நூற்றாண்டில்.

#### சாதிப் பிரிவு

அது சரி போகட்டும். இப்பொழுது நான் பேச வேண்டும் இல்லையா? பகுத்தறிவு படைத்த பெருமக்களாகிய உங்கள் முன்னிலையில் எனக்குப் பேச வெட்கமாயிருக்கிறது. உங்களுக்குள்ளே பதினெட்டுச் சாதி; ஒவ்வொரு சாதியிலும் பதினெட்டுப் பிரிவு; ஒவ்வொரு பிரிவிலும் பதினெட்டுக் கிளை. அப்படியே என்னையும் தரம்தரமாக வகுத்துப் போட்டிருக்கிறீர்கள். எடுத்ததற்கெல்லாம் சதா கவலைப்பட்டு மண்டையை உடைக்கும் உங்களைப்போல இதை நான் பெரிதாகக் கருதியது கிடையாது.

#### சக்கரம்

நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் எனது கடைக்கண் பார்வைக்குத்தான் என்று பெருமைப்படுவதோடு சரி, மண்டை வீக்கம் ஏற்படுவது இல்லை. ஏனென்றால் நீங்களே உங்களைப்பற்றித் தெரிந்து கொள்ளாத போதிலும், பாதாளம் மட்டும் பாயும் சக்தி எனக்கிருக்கிறது என்பதை நான்தெரிந்து வைத்திருக்கிறேன். இன்றைக்கு காதலா, கல்யாணமா, கற்பழிவு நாடகமா, கொலையா, கொள்ளையா எதுவாக இருந்தாலும் அங்கு நான் ஒருவிதத்தில் சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பேன். அவ்வளவேன் தேர்தல் காலங்களில் உங்களுடைய விலைமதிப்பற்ற வாக்குகளை சில்லறையாகவும் மொத்த

பரதன்

மாகவும் குறைந்த விலையில் தட்டிக்கொண்டு போகிறேன் என்றுல், அதிகமேன் சொல்ல? உங்கள் வாழ்க்கைத் தேருக்கே சக்கரம் நான்தான் என்பதைக் கொஞ்சம் அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விடுகிறேன். அதனுல்தான் போலும் மலையாளிகள் என்னைச் சக்கரம் என்று அழைக்கிருர்கள். உலகைக் காத்தல் தொழில் புரியும் திருமாலின் இருப்பதும் சக்கரம்தான். அகிலத்தை ஆட்டிப் படைக்கும் அரசர்களின் ஆணைக்கும் சக்கரம் என்றுதான் பெயர். இதனுல்தான் அவர்களைச் சக்கரவர்த்தி என்று அழைக்கிறீர்களோ?

#### தங்கம்

அதுசரி, உங்களுக்குப்பேச முடிந்தும், உங்களில் பலர் எதைச் சாதித்துக் கிழிச்சிறீர்கள்? இல்லையில்லையென்று பார்த்தால் இல்லாத பொல்லாத நாலு வார்த்தையைப் பேசி ஒருவர் சிண்டை ஒருவர் பிடித்துக்கொண்டு ஆடுகிறீர்கள் அவ்வளவுதானே!

உங்களுக்குத் தங்கத்தைத் தெரியுமா? 'பூ! இதுவா தெரியாது. தங்கம் என்றுல் தலைகீழாகவும் நிற்போம், தோப்புக்கரணமும் போடுவோம். தப்பிதமாகக்கூட நடந்து கொள்வோம்' என்று சொல்வீர்களாக்கும். அட, அதுவல்லய்யா; ஒரு பெண்ணுடைய பெயர்தான் தங்கம்.

#### ஆக ஒன்பது

தங்கத்துக்கு ஒன்பது பிள்ளைகள்; புருஷனில்லை. 'புருஷனில்லாமல் ஒன்பது பிள்ளைகளையும் எப்படிப் பெற்ருள் என்று யோசிக்கிறீர்களா? பேஷ்! தங்கம் தங்கமேதான் சாதாரணப் பெண் 'திரு உதிரக்கனி' சமாசாரம் அவளுக்கு பொருந்தாது. அந்தக் காலம் மலையேறிவிட்டது. ஒன்பது பிள்ளைகளும் பிறந்த பின்னர்தான் அவளுடைய கணவன் இறந்துபோனுன், மூத்த பையனுக்கு வயது ஒன்பது. இது கர்ப்பத் தடையுகம் என்பதை ஞாபகப் படுத்தினுல் ஒன்பதோடு நின்றதற்கு காரணம் புரியுமல்லவா?

தங்கத்துக்கு எந்தவித மான உருப்படியான வருமானமும் கிடையாது. அதை விட்டு அந்தப் பத்து உயிர்களைத் தவிர வேறு யாருக்கும் கவலையும் கிடையாது. கவலைப்படுவதாவது, உங்கள் பாடு பார்க்கவே உங்களால் முடிவதில்லை. இப்படியெல்லாம் நெற்றிக்கு நேரே சொல்லுகிறேனே என்று கோபித்துக்கொள்ளக் கூடாது. உங்களுடைய கண்கண்ட தெய்வமான எனக்கு இந்த உரிமைகூடவா இல்லை?

இன்றைக்கு ஒரு காலகண்டர் மட்டும் இருந்தால் ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு பிள்ளையாகப் பிடித்து விற்றிருப்பாள் தங்கம். அவ்வளவு நெருக்கடி நிலைமை அவளுக்கு

(15-ம் பக்கம் பார்க்க)

நோத் சிலோன் றேடிங் கம்பனி லிமிட்டட்
ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.
வட மாகாண Ford விநியோகஸ்தர்கள்
போன் : 587 தந்தி : யாழ்றேட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— சுதந்திரன் சுருக்க விளம்பரக் கோவை —

ஆசிரிய கலாசாலை பிரவேச வகுப்பு.
தொடக்கம் 2-2-59
இடம்: இணுவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலை.
தொடக்கம்: 2—2—59 திங்கள் பி. ப. 4 மணி.
பொறுப்பு: "தமிழ் மன்றம்", சங்குவேலி, மானிப்பாய்.
தொடக்கி வைப்பவர்: பிரபல கல்வி அதிகாரி ஒருவர்.
ஆசிரியர்கள்: அனுபவம் மிக்க பேராசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள்.
★ சாதாரண பயிற்சி, விசேட பயிற்சி இருவகை வகுப்புகள்.
★ குறைந்த கட்டணம்! வாரத்தில் 5 நாட்கள் வகுப்புகள்!! வரையறுக்கப் பட்ட மாணவர் தொகை! உடனே சேருங்கள்!!
விபரங்களுக்கு:
த. திருநாவுக்கரசன் ஆசிரியர் ("நாவேந்தன்")
செயலாளர்
"தமிழ் மன்றம்"
சங்குவேலி மானிப்பாய்
S.A. 15

உயர் ரக தலைமுடிகளுக்கும், அழகு சாதனங்களுக்கும் றேந்தை, நூல் வகையறுக்களுக்கும்
யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற இடம்
பான்ஸி கவுஸ்
68, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
S. A. 16

சகல சாயப்புச் சாமான்களுக்கும் யாழ்ப்பாணம் திறம் சுருட்டுக்கும் திறம் நல்லெண்ணெய்க்கும்
ஏற்ற இடம்
கே. ஏ. வீரசிங்கம்
19, ஆதமலிக் கட்டடம்
ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு—11
S. A. 17

நல்ல பொருட்கள் பலநாள் பாவிக்கலாம்.
ஆகையால்

திறமான றபர் ஸ்டாம்புகள், புளக்குகள் குறிக்கப்பட்ட நேரத்தில் குறைந்த சார்ஜில் செய்து கொடுக்கப்படும்
ஒருமுறை ஆர்டர் செய்து பாருங்கள்.
ரஞ்சித்ஸ்
156, தட்டா தெரு, கொழும்பு.
S. A. 18

'நாடோடி'
இளந்தமிழ் மாத இதழ்.
கதை, கட்டுரை, கவிதைகள், சிறுவர் புத்தி விருத்திப் போட்டி, அச்சுக் கூப்பன்கள், கதைப் போட்டி இன்னும் பல.
தனிப் பிரதி ச. 10. வருட சந்தா ரூ. 1-50.
நாடோடி
அக்கரல்ல
ஒப்பநாயக்கா S. A. 19

சகல பாடப் புத்தகங்களுக்கும்
பள்ளிக்கூட உபகரணங்களுக்கும்
இலக்கியப் படையல்களுக்கும்
ஏற்ற இடம்
ஆனந்தா புத்தகசாலை
226, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்.
S. A. 20

சினிமா விமர்சனம்:

# 'நீலாவுக்கு நெறஞ்ச மனசு'

சுற்றி வளைத்துப் பயனில்லை. ஒரே வரியில் சொல்வதானால் நாகராஜனின் நறுக்......நறுக்கென்ற நகைச்சுவை வசனங்களுக்காக நீலாவுக்கு நெறஞ்ச மனசு படத்தைப் பார்த்துத் தான் ஆகவேண்டும்.

காதைக் குடையும் கடபுடா வசனங்களைத் தொடர்ந்து ஐந்து நிமிஷங்களுக்குக்கேட்டால் அப்புறம் தலைவலி தவிர்க்க முடியாததாகி விடும். நகைச்சுவையோடு கூடிய சரளமான வசனங்களை எவ்வளவு நேரம் கேட்டாலும் அலுக்காது. ஒரு கால் கேட்டதை மீண்டும் எப்பொழுதாவது நினைவு கூர்ந்தால் அப்பொழுதும் உள்ளம் மகிழும். கடந்த செவ்வாய்க்கிழமை நீலாவுக்கு நெறஞ்ச மனசு படத்தில் கேட்ட உரையாடல் இன்றும் உயிர் பெற்று இன்ப உணர்வு ஊட்டுகிறது.

### சுவாரஸ்யம்

தொடக்கத்திலிருந்து இடைவேளை வரை கதை நகரவேயில்லை. ஆயினும் இது ஒரு குறைபாடாகத் தெரியவுமில்லை. காரணம் உரையாடலில் இருந்த சுவாரஸ்யம் தான். குறிப்பாக ஏதாவது இரண்டொரு கட்டத்தைச் சுட்டிக் காட்டலாமென்றால் அது முடியாது. ஏனெனில் எல்லாக் கட்டங்களுமே ஏற்றமுடையனவை. எதைக் குறிப்பிடுவது? எதை விடுவது?

### கதை

இடைவேளைக்குப் பின்னர் தான் கதை வளர்கிறது. அதுவும் அசுர வேகத்தில். அதைக் கூடக் குறை என்று சொல்ல உரையாடல் விட்டபாடில்லை. கதையின் கருத்தும் ஒன்றும் பிரமாதமில்லை. கலைக் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு தாயில்லாப் பருவப் பெண்கள் தந்தையைக் குத் தலைவன்மாரைத் தேட்டிக் கொள்ளும் சாதாரணக் கதை. அதில் கலியாண சமயத்தில் தந்தை கள்வனென்று குற்றம் சாட்டப்படுவதும், வில்லன் வந்து ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று காட்டுமிராண்டித் தனம் செய்வதும் கடைசியில் உண்மை வெல்வதும் எல்லோருக்கும் கல்யாணம் நடப்பதுமாகக் கதை முடிக்கப் பட்டிருக்கிறது. நீலாவின் நெறஞ்ச மனசு தன் (நீலா) குடும்பக் கௌரவத்துக்காக கண் இரண்டையும் இழந்த ஒரு இளைஞனைக் கணவனாகப் பெற விழைகிறது. அதற்கு தடை இல்லை.

### பாத்திரங்கள்

கிரிக்கட் வீரர் தங்கவேலு, சங்கீதப் பைத்தியம் டி. ஆர். ராமச்சந்திரன், கேடி டி. கே. ராமச்சந்திரன், குருடர் ஸ்ரீராம் முறையே, உண்டு உறங்க விரும்பிய முத்துலட்சுமி, வாத்தியாரம்மா எம். என். ராஜம், பாட்டு, நாட்டிய ஆசிரியை ராகினி, நெறஞ்ச மனசுக்காரி பண்டரிபாய் (நீலா) ஆகியோரின் கணவர்களாக வருகிறார்கள். பெண்களின் அப்பா வி. கே. ராமசாமி. அவர் வேலைக்காரன் பி. டி. சம்பந்தம். பொருத்தத்துக்கு கேட்கவா வேண்டும்? வில்லன் வீரப்பாவே தான்.

சாயிராம், ஏழுமலை ஆகியோரும் கூட வருகிறார்கள். மொத்தம் எத்தனை நகைச்சுவை நடிகர்கள்? எண்ணித் தான் சொல்ல வேண்டும்!

### படப்பிடிப்பு

கலரில் ஹெலனின் நடனம் சுமார். பாட்டுகள் பரவாயில்லை. படப்பிடிப்பு மிக மிக அருமையாக இருந்ததைக் குறிப்பிட வேண்டும். கண்களை உறுத்தாமலும் அதே வேளையில் தெளிவு குன்றாமலும் முதலிலிருந்து கடைசி வரை உள்ள எல்லாக் காட்சிகளுமே படமாக்கப்பட்டிருந்தன. தமிழ்ப் படங்களைப் பொறுத்த வரையில் இது ஒரு சிறந்த சாதனை என்றே சொல்லலாம். நீலாவுக்கு நெறஞ்ச மனசு இப்போது மருதானை சென்ட்ரல் தியேட்டரில் திரையிடப்படுகிறது.

## சங்கப் பலகை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களோடும் அதிகமான கருத்துப் படையலோடும் காலந் தவறாமல் வெளிவந்து கொண்டிருக்க வேண்டும்.

ஆசிரியர் தம்மைப் பற்றிய தம்பட்டக் குறிப்புக்களைக் குறைத்துக் கொள்வது நலம்.

**வெற்றி மணி**
(ஆண்டு மலர்)

கௌரவ ஆசிரியர்: மு.சுப்பிரமணியம். அச்சுப் பதிப்பு: ஸ்ரீ முருகன், பூண்டுலோயா. விலை சதம் 50.

பொங்கலை ஒட்டி வெளிவந்த வெற்றி மணி ஆண்டு மலரின் இனிமை நிறைய இருக்கிறது. முருகையன், தில்லைச் சிவன் முதலான ஈழத்து இன் கவிஞர்களின் கவிதைப் பொங்கல், தேவன்—யாழ்ப்பாணம், கனக செந்திநாதன் முதலான முன்னணி எழுத்தாளர்களின் கதை கட்டுரைப் பொங்கல்—எல்லாமே தித்திப்பானவை தாம். தமிழகத்து அன்பர்கள் சிலரும் தமது எழுத்தோவியங்கள் மூலம் வெற்றி மணிக்கு சுவை கூட்டியிருக்கிறார்கள்.

சிறுவர்களுக்கான இதழ் வெற்றி மணி என்ற போதிலும் அதில் பெரியவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய விஷயங்கள் பல இருக்கின்றன.

அழகிய வர்ண முகப்புடன் தெளிவாகவும் சுத்தமாகவும் மலர் அச்சிடப்பட்டுள்ளது. பக்கங்கள் அறுபத்தாறு.

## கவிஞன் காணும்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் எடுத்துக்கொண்ட "தமயந்தியின் துயரையும்", "பொழுது புலர்ந்தது" என்பதையும் அறிவற்ற பாமர மக்களுக்கும் புரியும்படி கூறி விட்டார். இதுதான் கவிஞர் காணும் காட்சிக்கும் நாம் காணும் காட்சிக்கும் உள்ள வித்தியாசம். நாம் கண்டதும் கண நேரத்தில் மறந்து விடுகிறோம். அவர்கள் கற்பனைக்கு விருந்தளித்துக் சாப்பியத்திலும் புகுத்தி விடுகிறார்கள்.

—எஸ். சோமசுந்தரம்
கொம்மாதுறை.

**ஈழமணி**

ஆசிரியர்: தமிழ்ப்பித்தன். வெளியீடு: கி. பூ. வி. கட்டடங்கள், கடுகண்ணாவை றோட், கம்பளை. விலை சதம் 10.

இது மாணவர்களுக்கென்றே வெளியிடப்படும் ஓர் மாத இதழாகும். அதனால் மாணவர்களுக்குப் பிடித்தமான பல அம்சங்களையும் கதம்பமாக இதழில் சேர்த்திருக்கிறார்கள். முயற்சி பாராட்டத்தக்கது.

**நாடோடி**

ஆசிரியர்: இன்னண்ணூ, வெளியீடு: அக்கரல்ல, ஒப்பநாயக்கா. விலை சதம் 10.

நாடோடியும் சிறுவர்களுக்கான இலங்கைப் பத்திரிகைகளில் ஒன்றாகும். இதில் சிறுவர்களுக்கு விருப்பமான பல அம்சங்களோடு சிறுவர் புத்தி விருத்திப் போட்டி ஒன்றையும் நடத்தி வருகிறார்கள்.

—கே. கே. ஆர்.

# தியாகச் சின்னம்

பாணந்துறை. . . . .

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட புத்தர் விக்கிரகத்தில் தமது ஆத்திரத்தை தீர்த்துக்கொண்டார்கள்... நாகதீபம் அழிக்கப்பட்டதும் அது எட்டு வாரங்களில் புதுப்பித்துக் கட்டி முடிக்கப் பட்டதும் பௌத்த சரித்திரத்தில் என்றென்றும் இடம் பெற்றிருக்கும். நெருக்கடியான நிலைமை முடிந்ததும் அந்தக் கதையைச் சொல்லுகிறவர்கள் கதையின் கருப்பொருளை, முக்கியத்துவத்தை மறந்து விடுவார்கள். நாகவிகாரை சேதப் படுத்தப்பட்ட சம்பவம் மட்டும் முன் எச்சரிக்கையாக இரகசியமாக வைக்கப்படாதிருந்தாலோ இலங்கையில் உள்ள தமிழர்கள் அவ்வளவு பேரும் கூண்டோடு கைலாயத்துக்கு அனுப்பப்பட்டிருப்பார்கள். பட்டாளத்துத் துப்பாக்கிகள் அத்தனையும் இதைத் தடுத்திருக்க முடியாது"

எப்படி இருக்கிறது நாக விகாரைச் சம்பவம் சொல்லப்பட்ட விதம்? புத்த கோயிலும் விகாரையும் விதாச்சிக்கு முக்கியமேயன்றி இந்துக் கோயில் குருக்களின் உயிரல்ல.

(தொடரும்)

## திரும்பிப்பார்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமல்ல, ஏழை எளியவர்களுக்கு நல்லதைச் செய்தவனாகவும் ஆகின்றாய்.

'மக்களுக்கு செய்யும் தொண்டே ஆண்டவனுக்கு செய்யும் தொண்டு' என்பதை நீ உணர்ந்து பார்ப்பாயானால், அதன்படி நடப்பாயானால் கட்டாயம் உன் மனம் நிம்மதி பெறும்; மகிழ்ச்சி அடைவாய் என்பதில் ஐயமில்லை. ஆகையால் தான் அழைக்கின்றேன். ஒன்றித்து ஒற்றுமையுடன் பகுத்தறிவு பிரசாரம் செய்ய நம் தாய்மொழியாம் தமிழுக்கும் தமிழர்களுக்கும் தொண்டு செய்ய வருவாயா தம்பி?

உன் அன்புள்ள,
அண்ணன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமன்: அருமையான யோசனை......ஏ, யாரங்கே, மாயாவை அழைத்து வா!

குசலவன்: பிரபோ, வீரவர்மரும் விநோதினியும் நந்தவனத்தில் தான் சந்திக்கிறார்கள். விநோதினியின் வீட்டுக்கு வீரவர்மர் போவதாகத் தெரியவில்லை.

விக்ரமன்: பரவாயில்லை. முதலில் மாயா அங்கே போகட்டும். பின்னால் நிலைமைக்குத் தகுந்தாற்போல் திட்டத்தை மாற்றுவோம்.

(இதற்குள் மாயா வந்து வணங்குகிறாள்)

விக்ரமன்: மாயா, உனக்கு மிகவும் பொறுப்பான ஒரு வேலை கொடுக்கப் போகிறேன். நீ அதை நிறைவேற்றும் முறையில்தான் பாண்டிய நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

மாயா: தங்களின் கட்டளை அரசே!

விக்ரமன்: நீ என்ன செய்ய வேண்டும், எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி சேனாதிபதியும் மந்திரியாரும் உனக்கு விபரமாக சொல்லுவார்கள். உனக்குப் பக்கத்தில் எப்பொழுதும் மாறுவேடத்தில் உன் அண்ணன் குசலவன் இருப்பான். அவனுடைய கட்டளைப்படி அடிக்கடி நடந்துகொள்ள வேண்டும்......... சேனாதிபதி, எல்லாம் விபரமாய்ச் சொல்லி அனுப்பி வையுங்கள்.

சேனாதிபதி: உத்தரவு அரசே......... (தொடரும்)

## கலவரத்தில்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பணம் திரட்டி உதவ முன் வந்திருக்கிறது. ஆசிரிய சமூகத்தின் இந்த மேலான சேவையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

இப்படியான முயற்சிகள் இல்லாமல் கந்தப்புவின் குடும்பம் வறுமையில் வாடி வேதனைத் தீயில் உழலவிடப் படுமாயின் அந்த ஐந்து குழந்தைகளுமே பஞ்சபாண்டவராகி இலங்கையிலே பாரதப் போர் ஒன்றுக்கு நிலைக்களன் அமைக்கமாட்டார்கள் என்று எப்படி நம்ப முடியும்? வெம்பகை வேங்கையைவிட வலிமிக்கது வெஞ்சினம். அது தமிழர்களிடையே வளர்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தாமல் இருப்பது தமக்கு நல்லது என்பதை ஆட்சியாளர்கள் அறிந்திருப்பது இன்றைய நிலையில் அவசியமாகிறது.

—ஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு சதத்துக்கு இனிமையான சங்கீதம்
## ஜெகத்ஜோதியான வெளிச்சம் வேறு
# மண்ணெண்ணெய் ரேடியோவின் அற்புதம்




சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வேயர் ஸ்டோர்ஸ் புத்தம் புதிய கட்டடத்தின் எழில்மிகு முகப்புத் தோற்றம்

ரேடியோ வைத்திருக்க விரும்பும் அனைவருக்கும் அரியதோர் சந்தர்ப்பம். பட்டணக்காரராயிருந்தாலும் சரி, கிராமவாசியாக இருந்தாலும் சரி மின்சாரம் இல்லாத குறையால் ரேடியோ வைக்க முடியவில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. பாட்டரி ரேடியோ வாங்குவதானல் மாதாமாதம் பாட்டரிக்கு பணம் எண்ணிக் கொடுக்க எங்கேபோவது என்றும் ஏங்க வேண்டியதில்லை.

இருக்கவே இருக்கிறது மண்ணெண்ணெயில் இயங்கும் ரேடியோ. சீனவின் சிரிய உற்பத்தி. சக்தி நிறைந்த பீப்பிள்ஸ் ரேடியோ உலகத்தில் உள்ள வேறு எந்த ரேடியோவுக்கும் சளைத்தது அல்ல.

எந்த நிலையத்தையும் எளிதில் பிடிக்கலாம். வேண்டிய அளவுக்கு சத்தத்தை வைத்துக் கொள்ளலாம். தொனியின் தெளிவு எந்தக் காரணம்கொண்டும் கெட்டுப்போகாது. ஒலிபெருக்கி முதலானவற்றிற்கு இணைப்பு ஏற்படுத்த வசதி உண்டு. அழகான தோற்றத்தில் பலப்பல அளவில் வெவ்வேறு விலைகளில் பீப்பிள்ஸ் ரேடியோ கிடைக்கக்கூடியதாக இருக்கிறது.

பீப்பிள்ஸ் ரேடியோவில் பொருத்தப்பட்டுள்ள வால்வ்கள் சீன விஞ்ஞானிகளின் பல்லாண்டு ஆராய்ச்சிகளின் பயனக நுட்பமாகத் தயாரிக்கப்பட்டுப் பின்னர் தொழிற்சாலையில் வைத்து நன்கு பரிசோதிக்கப்பட்டவையாகும். அதனல் அவற்றின் சக்தியும் உழைப்புக்காலமும் அதிகமாகிறது.

மண்ணெண்ணெயில் இயங்கும் ரேடியோ மிகவும் சிக்கனமானது. பிரகாசமான வெளிச்சம் தரும் அழகிய விளக்கு எரிய அதேவேளையில் ரேடியோவும் இயங்குவதால் ரேடியோவுக்கு என்று தனியாக செலவு ஏதும் இல்லை. எரிக்கும் மண்ணெண்ணெய் செலவு மாத்திரந்தான். உதாரணமாக நாளாந்தம் 4 மணி நேரம் ரேடியோ பாவிக்கப்படுமானல் என்ன செலவு ஆகும் தெரியுமா? நாள் ஒன்றுக்கு ஆகக்கூடியது சதம் 7' மாதம் ரூபா 2. இவ்வளவுதான்.


## பீப்பிள்ஸ் ரேடியோவின் விலையும் குறைவு. ரூபா 310-க்கு 5 வால்வ், 3 ஒலி அலைகள், 5 அங்குல ஒலிபெருக்கி கொண்ட அழகான ரேடியோ (விளக்குடன்) வாங்கலாம்.



விளக்கோடு அல்லாமல் டிரை பாட்டரியில் மாத்திரம்பாவிக்கவும் பீப்பிள்ஸ் ரேடியோ உண்டு. அதன் விலை ரூபா 185 மட்டுமே

சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வேயர் ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு ஏ. வை. சாமுவேல் ஞானம். உழைப்பால் உயர்ந்த உத்தமர் என்பது படத்தில் பார்க்கும்போதே தெரிகிறதல்லவா? எளிய தோற்றம்; இனிய சுபாவம் கூர்த்த மதி; நிறைந்த நிர்வாகத் திறமை-

இந்த அதி அற்புத பிப்பிள்ஸ் (மண்ணெண்ணெய்) ரேடியோ பற்றி மேலும் விபரம் வேண்டுவோர் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். நேரில் வந்தும் தெரிந்து கொள்ளலாம்.



பீப்பிள்ஸ் ரேடியோ (விளக்குடன்) மண்ணெண்ணெயில் இயங்குவது

# பீப்பிள்ஸ ரேடியோ PEOPLES' RADIO

ஏகவிநியோகஸ்தர்கள்:

# சென்ற் அந்தனிஸ் ஹார்ட்வேயர் ஸ்டோர்ஸ்

516, ஸ்கின்னேர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு—10 போன்: 7499, 78133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டது கற்க.....

இந்தப் பகுதிக்கு நேயர்கள்கூட விநுக்களும் விடைகளும் எழுதி அனுப்பலாம். ஏற்றவை அவரவர் பெயர்களுடன் வெளியிடப்படும்.

ஆசிரியர்: சுதந்திரன்

1. 'அடிமையாகவும் இரேன், அடக்குவோனுகவும் இருக்கமாட்டேன். சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம், பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம், எல்லோரையும் எல்லாக்காலமும் ஏமாற்ற முடியாது' என்று கூறியவர் யார்?

2. இலங்கையின் கவர்ணர் ஒருவர் ஆபரணங்கள் அணிவோர்மீது வரி விதித்தார். இந்தப் புதுமை வரியை விதித்த அந்த கவர்ணர் யார்? அவர் சட்டத்துறையில் செய்த பணி யாது?

—ச. சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம்

3. பல பொருட்களை முதன் முதல் கண்டுபிடித்தவர்கள் என்ற பெருமை சீனர்களுக்கு உண்டு. அப்படி அவர்கள் உற்பத்தி செய்த முதற் பொருட்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

—முஹம்மது முஹ்ஸீன், கம்பளை

4. நம் நாட்டுப் பெண்கள் கறி சமைக்கையில் கடைசியாக எதை விட்டு இறக்குவார்கள்? புளியையா? உப்பையா?

—க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி

5. இந்துக்கள் கல்வித் தெய்வமாக அறிவுக் கடவுளாக கலைமகளை-சரஸ்வதியை வணங்குகின்றனர். கிரேக்கர்களின் கல்வித் தெய்வத்தின் பெயர் யாது?

................பண்டிதனுவான்

## கவிஞன் காணும் காட்சி

"தையல் துயர்க்குத் தரியாது
அஞ்சிறை காம்
கையோன் வயிறலைத்துக்
காரின்வாய் வெய்யோனை
வாவு பரித் தேரேறிவாவென்று
அழைப்பது போல்
கூவினவே கோழிக்குலம்"

கவிஞர்கள் கற்பனை உலகில் வசிப்பவர்கள். அவர்கள் காணும் பொருட்களை—கலை நுணுக்கத்தை—கற்பனை வளத்தை நாம் காண முடியாது. தாமும் நாள் தவருது கோழிகள் கூவுவதையும்; சூரியன் உதிப்பதையும் காண்கின்றோம். அதே காட்சியைக் கவிஞனும் காண்கிருன்; புறக் கண்ணுலல்ல? அகக் கண்ணுல்; அனதக்கா வியத்திலும் புகுத்தி விடுகிருன். இக் காட்சியைத்தான் சித்தரிக்கிறது மேலே உள்ள பாடல்.

ஆம்! கொடிய இருளில் தமயந்தியை விட்டுப் பிரிகிருன் நளன். துயில் எழுந்த தமயந்தியோ? கணவனைக் காணுது; கானகமெங்கும் தேடுகிருள், கடைசியில் களைப்பால் விழுந்து விடுகிருள். இந்த இடத்தில்தான் கவிஞன் உள்ளம் வேலை செய்கிறது. சோர்வினுல், விழுந்த தமயந்தியைத் துயில் எழுப்புவது யார்? "சூரியன்" என்று சுருக்கமாகப் பதில் கூற வில்லை கவிஞன். அல்லது பொழுது புலர்ந்தது. அதனுல் அவள் துயில் எழுந்தாள் என்று தட்டிக் கழித்து விடவில்லை. கவிஞன் அதற்குப் பதிலாக அவள் படும் துயரைப் புலப்படுத்தவும் விரும்பினுர். அதனுல் "அவள் படும் துயரைக் கண்டு பகுத்தறிவற்ற கோழிகளே? சூரியனை விரைவில் தேர் ஏறி வந்து அவள் துயரைத் தீர்க்கும்படி தங்கள் சிறகால் கை கொட்டி அழைத்தன" என்கிருர். இதன் மூலம் கவி

(12-ம் பக்கம் பார்க்க)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 4

பெயர்...............................................

பாடசாலை...........................................

விலாசம்.............................................

.......................................................

.......................................... ..........................................
பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்




# திரும்பிப்பார்!

(கே. எஸ். மணியம், கடாரம்)

அன்புள்ள தம்பி!

திரும்பிப் பார்! உன் பின்னுல் அல்ல தம்பி; வாழ்க்கை எனும் கரடுமுரடான மேடு பள்ளம் நிறைந்த பாதையைத் திரும்பிப் பார்க்கச் சொல்கின்றேன். ஒன்றும் தெரியவில்லையே என்று கூறுகிருயா? அப்படிச் சொல்லாதே தம்பி!

நீ படித்திருக்கிருய். நீ படித்ததைப் படிப்பாக மட்டும் கருதாமல் பயன் அளிக்கும் வழியில் ஈடுபடுத்தலாமல்லவா? ஆகையால்தான் உன் சிந்தனையைக் கிளறி விட்டு தூங்கிக்கொண்டிருக்கும் உன் மூளைக்கு வேலை கொடுக்கச் சொல்கின்றேன். உன் அறிவுக்கு வேலை கொடுத்துப் பகுத்தறிவு கண்கொண்டு பார்க்கச் சொல்கின்றேன். உலகைத் திருத்திய உத்தமர்களின் வாழ்க்கையெனும் பாதையை நோக்கச் சொல்கின்றேன்.

தம்பி! அதோ பார். அவர்தான் கிரேக்க நாட்டு அறிவுக் களஞ்சியம்! அவர் சொன்னுர் இவர் சொன்னுர் என்று சொல்லி ஆமாம் சாமி போடாமல் எது உன் பகுத்தறிவுக்குச் சரி என்று தெரிகிறதோ அதைச் செய் என்று கூறிச் சிந்திக்கும் தன்மையை வளர்த்தவர்-சாக்ரட்டீஸ். அதோ அவரைக் காண்பாய் தம்பி. யார் என்று புரியவில்லையா? அவர்தான் 'ஒருவன் உன் வலது கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் திருப்பிக் காட்டு' என்று கூறி அடிபட்டாலும் ஆத்திரம் எனும் கொடிய பேய்க்கு இடம் தராமல் பொறுமையைக் கடைப்பிடிக்கச் சொன்ன உத்தமப் பிதா—ஏசுநாதர். இவரைப் பாரேன் இவர்தான் சிந்தித்துச் சிந்தித்து 'ஆசியாவின் விளக்கு' என்று போற்றப்படும் புண்ணியவான் புத்தர். அடுத்தவர், அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தி. அவர், அடிமைத்தனத்தை ஒழித்தெறிந்த ஆப்ரஹாம் லிங்கன். தன் நலம் பேணுது நாட்டின் நலத்தையும், மக்கள் நலத்தையும் பேணிய பெரியவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நன்ருகப் பார்! பார்!!

தம்பி! பார்த்துக் கொண்டே மட்டும் இருந்து விடாதே. சிந்தி. சிந்தித்துப் பார். உன் சிந்தனுசக்தியை கிளறிவிட்டு, ஏன் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்? எதற்காகச் செய்ய வேண்டும்? யாருக்காகச் செய்ய வேண்டும்? என்ற கேள்விகளை விடை காணும் மட்டும் உன்னையே நீ கேட்டுப் பார். தோல்வி என்ற முதல் படியின் தவறி விழுந்தாலும் கடைசியில் உண்மையைக் காண்பாய்.

தம்பி, இப்போது விடை கண்டிருப்பாய் என்று எண்ணுகிறேன். பலர் இந்த வினுக்களுக்கு விடை கஷ்டமென்று சொல்கிருர்கள். உண்மையில் நீ சிந்தித்துப் பார்ப்பாயானுல் அதனுடைய விடையைக் கண்டு நீயே ஆச்சரியப்படுவாய். ஆமாம் தம்பி ஆமாம்; உலகத்திற்காக, நாட்டு மக்களின் நலத்திற்காக, மூட நம்பிக்கையில் மூழ்கிக்கிடக்காமல் முன்னுக்கு வருவதற்காக அம்மகான்கள் சுயநலம் [illegible] விடை சுலபமாகத் தோன்றுகிறதா? அதனுல்தான் சிந்திக்கச் சொன்னேன். ஆமாம். அப்படித்தான் இருக்கிறது. ஆனுல் அந்த நற்காரியங்களைச் செயல்படுத்துவது சுலபமான காரியமல்ல என்பதைத் தெரிந்து கொள். இருப்பினும் அவர்கள் அப்படிச் செய்ய காரணம்தான் யாது? அதுதான் அறியாமையால் மக்கள் படும் துன்பம். வெள்ளை மனம்படைத்த எளியோரை குள்ளநரி உள்ளம்படைத்த வலியோர் வாட்டிய கொடுமைகள், அவர்களை அப்படிச் செய்ய தூண்டியது. அதனுல் தான் இன்று நாடும், ஏடும் நானிலமும் மக்களும் அப்பெரியோர்களைப் போற்றுகின்றனர்.

நான் ஏன் இவர்களைப்பற்றிக் கூறுகின்றேன் என்று கேட்கின்ருயா? பழைய குப்பையைக் கிளறினுல் நாற்றம்தானே எடுக்கும் என்று சொல்கின்ருயா? ஆமாம் தம்பி; அது என்னமோ உண்மைதான். ஆனுல் அங்கு தானே இருக்கிறது மதிப்பிற்குரிய மாணிக்கங்கள். தம்பி, நான் இவர்களுடைய வாழ்க்கையைக் காட்டியது உன் வாழ்க்கையையும் நன்ருகச் சிறப்புடன் அமைத்துக் கொள்ளத்தான் அழைக்கின்றேன் உன்னையும் என் பாதையில். உன் வாழ்க்கை துன்பம் நிறைந்ததாக இருக்கலாம். பல கஷ்டங்களை அனுபவித்திருக்கலாம். அவற்றினுல் பாதிக்கப்பட்ட நீ மனமுடைந்துவிடாதே தம்பி. வாழ்க்கை வாழ்வதற்காகவே மனிதன் பிறக்கிருன். ஆகையால் வழுக்கி விழுந்த நீ உன் வாழ்க்கை எனும் பாதையை வளமாக நன்ருக அமைத்துக்கொள்வது உன் கையில்தான் இருக்கிறது என்பதை முதலில் அறிவாய்.

உன் உடைந்துபோன உள்ளம் ஆறுதல் பெற வேண்டுமானுல் பொதுநலத் தொண்டில் ஈடுபடு. 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பவற்றைக் கடைப்பிடி. அப்போது நீ உன் சுகதுக்கங்களை கட்டாயம் மறப்பாய். அது

(12-ம் பக்கம் பார்க்க)

## காலெது தலையெது?

[சோமலிங்கம்]

விறுக் குறிபோலே வெள்ளை(க்)
கழுத்தினை வளைத்துக் கொண்டு
குளத்திலே இரை எடுக்க(த்)
தவத்தினைச் செய்யும் நாராய்
உளத்தினுல் உன்னைப் போலே
பொறுமையே உருவதாக(ச்)
சளைத்த பேர் கொண்டாராகுல்
தாழ்வரோ அவர்கள் நாராய்!

பறக்கிற போது உந்தன்
பவளக் கூர்வாயும் முன்பு
நிறத்திலே சிவப்பதான
நீண்ட உன் காலைப் பின்பு
எடுத்து நீ பறப்பதாலே
எப்பக்கம் காலதென்று
திடுக்குற்று நின்றேன் நாராய்
செப்பினுய் உண்மை ஒன்று!

பாரினை ஆளுமிந்த(ப்)
பாராளுமன்றத்துள்ளோர்
நாரையின் உடலைப் போலே
நாட்டிலே நடிப்பதாலே
சாதியிற் சண்டை உண்டு
சமயத்திற் கலகமுண்டு
காலெது தலையதென்று
காணவே முடியா நாராய்

## கண்டது கற்கப் பண்டிதனுவான்

(விடைகள்)

1. இந்த மணிவாக்கியத்தைக் கூறிய மகான் அமெரிக்காவின் 16வது ஜனுதிபதியாக விளங்கியவரும் சிறந்த சீர்திருத்தவாதியுமாகிய ஆபிரஹாம் லிங்கன் ஆவார். இவருடைய 150வது பிறந்த வருடம் இவ்வாண்டு நடைபெறுகிறது.

2. ஆபரணம் அணிவோர்மீது வரி விதித்த கவர்ணரின் பெயர் பிரெட்ரிக் நோர்த். 1800ல் இலங்கையைப் பரிபாலித்தவர். இவர் எட்மண்ட் காரிங்டன் என்பவரைக் கொண்டு "இலங்கையின் சட்டத் தொகுதி" என்னும் நூலைத் தயாரித்தார்.

3. சீனர்கள் அநேகப் பொருட்களை முதன்முதலாக உற்பத்தி செய்திருக்கிருர்கள். அவற்றுள் சில பின்வருவன: அச்செழுத்துக்கள், காகிதம், சீன வெடி, பூச்சிப் பட்டு, அபின், வெண்களிப்பாண்டம்.

4. உப்புமல்ல புளியுமல்ல; இவற்றையெல்லாம் விட்டபின் கடைசியாக அடுப்பை விட்டுத்தான் இறக்குவார்கள்.

5. கிரேக்கர்களின் அறிவுக் கடவுளும் ஒரு பெண் தெய்வந்தான். அவள் பெயர் மினர்வா. மினர்வாதேவி அறிவுக் கடவுளாகவும் அதேசமயத்தில் யுத்த தேவதையாகவும் விளங்கினுள். இவள் ஜுபிட்டர் அதாவது வியாழ பகவானின் மகள். வியாழனுடைய மூளையிலிருந்து முழு உருவத்துடன் உதித்தவளாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இராஜேஸ்வரி கலாமன்றம்

இராஜேஸ்வரி கலா மன்றத்தின் சார்பில் சென்ற 14-1-59ல் தலைவர் திரு ஏ. எச். எம். ரபீக் தலைமையில் செல்விகள் லலிதாதேவி, இராமேஸ்வரி அருணாசலம் ஆகியோரின் தேவாரபாராயணத்துடன் தைத்திங்கள் விழா ஆரம்பமாயிற்று.

தலைவர் மன்றத்தின் இற்றைநாள் வளர்ச்சி பற்றிப் பேசினார். அதன் பின்னர் லலிதாதேவி, இராமேஸ்வரி அருணாசலம் ஆகியோரின் சங்கீத கச்சேரி நடைபெற்றது. தொடர்ந்து திரு த. சண்முகம், "உழவனுமோர் கலைஞன்" என்னும் பொருள் பற்றிப் பேசினார். வைத்தியநாத சர்மா வயலினுக்கு மிருதங்கப் பக்கவாத்தியம் அ. விஸ்வநாதன் வாசிக்க ஒரு இன்னிசை நடைபெற்றது. ஏ. சண்முகானந்தன் வாய்ப்பாட்டு பாடி சபையோரை மகிழ்வித்தார்.

## ஸ்ரீ ரா. கி. அபிவிருத்திச் சங்கம்

அட்டன் ஸ்ரீ ராமகிருஷ்ணா கலாசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற 14-1-59ல் சங்க பணிமனையில் திரு டி. பி. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர் திரு ஏ. கே. குழந்தைவேல் கடவுள் வணக்கப் பாடல்கள் பாடினார்.

"தொண்டன்" ஆசிரியர் திரு எஸ். எஸ். நாதன் பிரதான பேச்சாளராக கலந்து கொண்டார். கலாசாலை அபிவிருத்திக்கு கீழ்க்கண்டவர்களடங்கிய கமிட்டி ஒன்றும் நிறுவப்பட்டது:-

திருவாளர்கள்: டி. பி.ராமசாமி (தலைவர்) பி. சதாசிவம், எஸ். கே. குழந்தைவேல் (உபதலைவர்கள்) பி. எம். கிருஷ்ணசாமி (காரியதரிசி) எஸ். எஸ். நாதன் (உதவிக் காரியதரிசி) வி. கே. டி. பொன்னுசாமி (பொருளாளர்) செயல் கமிட்டி உறுப்பினர்கள் 9 பேர்கள்.

## இளங்கோ படிப்பகம்

'உழவர்கள் மத்தியில் நிலவி வரும் இல்லாமையை இல்லாமலாக்கவும், உழவர்களின் பெருமையை நாடு உணரச் செய்யவும், சர்வ கட்சியினரும் ஒன்று சேர்ந்து உழவர் வாரம் கொண்டாடப்பட வேண்டும்' என செக்கடித் தெரு 'இளங்கோ படிப்பக' சார்பில் கவிஞர் அ. தாழைப் பாண்டியன் தலைமையில் நடந்த பொங்கல் விழாவில் சிறப்புரையாளராக பங்குகொண்டு சிறப்புரையாற்றிய இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. இரா. அதிமணி தமது பேருரையில் கூறினார்.

திரு உ. சுப்பையா வரவேற்புரை கூற திருவாளர்கள்: மு. கருப்பையா, மணவைத்தம்பி, சுப. நாச்சியப்பன், எல். தருமதாஸ் இராமநாதன் ஆகியோரும் விளக்கவுரையாற்றினர்.

திரு சு. தியாகராசா நன்றி நவில பொங்கல் விழா இனிது முடிவுற்றது.

## பதுளை இ. தி. மு. கவில் பொங்கல் விழா

பதுளை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 13-1-59ல் பொங்கல் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சிறப்புச் சொற்பொழிவாளர்களாக திருவாளர்கள்: கே. இராமசாமி (பாரதி கல்லூரி தலைமை ஆசிரியர்) ஏ. இளஞ்செழியன், சாமுவேல் இரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

விழாவில் தோட்டத் தொழிலாளர்களுக்கென பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பேச்சுப் போட்டியில் காக்கொல்லை தோட்டம் திரு கே. சுந்தர், சவுதம் தோட்டம் திரு பிச்சமுத்து ஆகியோர் வெற்றி பெற்று வெள்ளிக் கிண்ணங்களை பரிசாகப் பெற்றனர். மற்றும் பலர் பேசிய பின்னர் விழா இனிது முடிவுற்றது.

## இளைஞர் முன்னேற்றக் கழகம்

இரத்தினபுரி இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சென்ற 14-1-59ல் பொங்கல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு கழகத் தலைவர் திரு த. கேசவன் தலைமைவகித்தார்.

உலகம் பலதுறைகளிலும் முன்னேற்றமடைந்து வரும் வேளையில் பெரும்பாலான இளைஞர்கள் தங்களது நேரத்தை வீணாக கழித்து வருவது நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கே பெரும் ஆபத்து என்பதை தலைவர் தமது முன்னுரையில் வலியுறுத்திக் கூறினார். கழகச் செயலாளர் திரு ப. முருகையா ஆண்டறிக்கையை வாசித்தார்.

பின் கீழ்க்கண்டவர்கள் பேச்சாளர்களாக கலந்து விழாவை சிறப்பித்தனர். திருவாளர்கள்: கு. இராமையா தேசிகர், க. சிவலிங்கம், அ. பிலிப் ஆசிரியர், ஜே. சோமசுந்தரம், எஸ். மணவைத்தம்பி, இரா. அண்ணாதாசன்.

## கொழும்பு கவின் கலைமன்றம்

கொழும்பு கவின் கலை மன்றத்தின் உறுப்பினர் கூட்டம் கடந்த 25-1-59ல் கொள்ளுப்பிட்டி அர்ச். அந்தோனியார் தமிழ் பாடசாலை மண்டபத்தில் திரு சி. ஆர். செல்லையா தலைமையில் நடைபெற்றது. அதுபோது நடப்பு ஆண்டிற்கு கீழ்க்கண்டவர்கள் உத்தியோகஸ்தர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

தலைவர்: திரு கே. கே. சுந்தரராஜா, செயலாளர்: திரு ஜெ. பி. ரூபட், துணைச் செயலாளர்: திரு க. லிங்கேசன், பொருளாளர்: திரு வே. இசக்கிமுத்து, துணைப்பொருளாளர்: திரு பெரி. மூக்கையா, விளம்பரச் செயலாளர்: திரு கே. ஜெகநாதன்.

அதன்பின் ஏற்கனவே நடிப்பதற்கு முடிவு செய்யப்பட்ட திரு ஜே. எஸ். ரவிந்திராவின் "ராணி நூர்ஜான்" நாடகத்திற்கு டைரக்டராக திரு. எம். டி. மோசஸ் அவர்களும் துணை டைரக்டராக திரு சி. ஈ. செல்லையாவும், மேடை அதிகாரியாக திரு டி. எஸ். சாமாத்தும், துணை மேடை அதிகாரியாக திரு ஏ. எம். ஜெகரியாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# மனச்சாட்சியின்...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நேர்மைப் பட்டம் கேட்டவனுக்கா இன்று திருட்டுப் பட்டம்?

காலையில் அவன் எழுந்திருக்கவில்லை. தனக்குத் தெரிந்த ஒரு டாக்டரை அழைத்து வந்தார் சின்னத்தம்பி. சாதாரண சாவல்ல. நஞ்சு குடித்து தற்கொலையென்று சாதாரண பரிசோதனையிலேயே புலனாகி விட்டது. எத்தனையோ கொலைகாரரை விடுவிக்க வாதாடிய அப்புக்காத்து சின்னத்தம்பிக்கு தானே குற்றவாளிக் கூண்டில் நிற்பதாகப் பட்டது. காதை விட்டெறிந்தார். விஷயத்தை அமுக்கினார். அறுபத்திமூன்று வயதுக்காரன் செத்ததற்கு ஒரு காரணம் கூறத் தெரியாமல் ஒரு டாக்டர் இருக்க முடியுமா? ஐந்து வருஷம் வைத்திய கல்லூரியில் படித்தவருக்கு இது தானா ஒரு பெரிய காரியம்?

தந்தியடித்து வேலாயுதத்தின் மகனை அழைத்தார். அவன் நல்ல நிலைவரத்தில் இருந்தான். ஊருக்கு பிரேதத்தை கொண்டு போக விரும்பினான். அருமையான மையப்பெட்டியொன்றில் உயிரற்ற வேலாயுதத்தை ரயிலேற்றி வைத்தார், "ஆகா! எவ்வளவு நல்ல மனுஷன்! இந்த நாட்களில் வேலைக்காரனுக்காக யாராவது இவ்வளவு செய்வார்களா?" என்று பலர் சொன்னார்கள்.

ஆனால் அவர் மனச்சாட்சி அவர் நெஞ்சைத் தின்றது. அந்த வைரத் தோடு அதைப் போல இன்னொன்று வாங்குவது பெரிய காரியமல்ல. அது எப்படிப் போயிருக்கும்? ஒரு வேளை கைதவறி குழாய்க்குள் விழுந்து விட்டதோ— யாருக்குத் தெரியும்? அந்தக் குழாய்—அவனுக்குப் பிடிக்காத குழாய்—நாளை நல்ல ஒரு ஆளைக் கொண்டு அந்தக் குழாயைத் துளாவிப் பார்க்க வேண்டும் என்று எண்ணினார். [illegible] கொன்றே விட்டதே!

## கைலாசம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

### காண வேண்டும்

யாத்திரிகர்களின் பசியைப் போக்க இனிக்கும் கனிகளைச் சொரிந்து நிற்கும் பழ மரங்கள், 'தனக்கென வாழாதே, உன் உடமையெல்லாம் பிறருக்கீந்து பர நலம் போற்றி மகிழ்வாயாக' என்று உபதேசம் செய்து, தென்றலில் அசைந்து குதூகலிக்கும். வானுற வோங்கி நெருங்கி நிறைந்த பெரும் மரக் காடுகள், இடையிடையே, சமநிலங்கள், பொய்கைகள், சோலைகள், இவையனைத்தும் இமயத்தை எழில் பெறச் செய்கின்றன. பாலின் சுவையை வாயாரக் கூறினும் கேட்போர் அனுபவித்தல் ஆகுமா? இமயந் தரு மின்பத்தைச் சொல்வதால், கண்டு களிக்கும் இன்பந் தோன்றுமா? கண்ணுதலோன் கருணையும், கைத்திறனும், நேரிற் காண்பாரே நன்கு அனுபவிப்பர். ஆத்மீக ஞானத்தை அடைவிக்கும் புண்ணியஸ்தலங்களுள் அமரநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி, கேதாரநாத், பத்ரிநாத், கைலாஸ் ஆகியவை இமயத்தின் சிறப்பை மிகுவிக்கின்றன.

சரி, இந்தனை உலகிலிருந்து விடுபட்டு நேரிலேயே காட்சிகளை இரசிப்போம்.

(தொடரும்)

# பணம் பேசினால்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்போது அவள் என்ன செய்வது? நான் என்ன செய்வது?

அதற்காக தங்கமும் பிள்ளைகளும், "எங்களுக்கும் வாழ உரிமை உண்டு; நாங்களும் இந்நாட்டு மன்னர்களே; நாங்கள் வாழ்ந்தே தீருவோம்" என்று கோஷித்துக்கொண்டு, ஊர்வலமாக வந்து, மகாநாடு நடாத்தி, தீர்மானங்களை நிறைவேற்றி வெறும் காகிதத்தில் எழுதி வைக்க முடியுமா? ஒன்று மட்டும் செய்தார்கள். காய்ந்த வயிரோடு அழுதார்கள், அழுதார்கள், அப்படி அழுதார்கள்.

இதையெல்லாம் பார்த்து எனக்குத் தாங்க முடியாத துயரம். நானாக எதையும் சுதந்திரமாக செய்வதாக இருந்தால் ஓட்டமாய் ஓடிப் போய் அவளுடைய வீட்டில் உட்கார்ந்துகொண்டு விடுவேன். ஆனால் நீங்கள் வகுத்துப்போட்ட சில சட்ட திட்டங்கள், ஒழுங்குகள் இருக்கின்றனவே.

### பஸ்ஸில் நடந்தது

நேற்றுப் பாருங்கள் பஸ் நிலையத்தில் ஒரு பெரிய மனிதர் நின்றார். அவரும் நீங்களுமே அவரைப் பெரிய மனிதர் என்று சொல்லுகிறீர்களே தவிர, அவர் எந்த வகையில் பெரிய மனிதர் என்று எனக்குப் புலனாகவில்லை. நீங்களாவது சொல்லுங்கள். அவருக்கு மாலை போட்டீர்களே, பொன்னாடை போர்த்தினீர்களே, எதற்கு? உங்களுக்கே தெரியாது. இல்லையா? ஆமாம், உங்களையும் குற்றம் சொல்லக்கூடாது. நீங்கள் தான் என்ன செய்வீர்கள் பாவங்கள்; எதையும் ஏன் எதற்கு என்று தெரிந்துகொண்டா செய்கிறீர்கள். ஆனால் அவருக்கு என்னைத்தேடிக்கொள்ளும் வல்லமை மட்டும் இருந்தது. நான் கிடைப்பேன் என்றால் அவர் தற்கொலை செய்துகொள்ளவும் தயாராக இருந்தார்.

### விழித்தேன்

அன்றைக்கு அவர் என்னை ஒரு கட்டாக கட்டித் தன் சட்டைப் பையில் வைத்திருந்தார். எனக்கென்னவோ அவரிடம் இருப்பது அவமானமாக இருந்தது. லேசாகத் தலையைத் தூக்கிப் பார்த்தேன். ஒரு கை என்னை அணைத்துக்கொண்டது.

கொலைக்காரனிடம் தப்பி காமுகனிடம் அகப்பட்ட கற்புக்கரசி மாதிரி நான் 'பக்கு பக்கு' என்று விழித்தேன். ஏனென்றால் இப்பொழுது நான் சென்றடைந்தது ஒரு ஜேப்படிக்காரனை.

அந்த ஜேப்படிக்காரனின் சட்டைப் பையைத் துளாவிப் பார்த்தேன். ஒரு கிழிசல் தட்டுப்பட்டது. உடலை வளைத்து நெளிந்து அதனூடாகக் கீழே குதித்துத் தெருவில் கிடந்தேன். பின்னால் வந்த தங்கத்தின் மூத்த மகன் என்னை எடுத்துக் கொண்டான்.

### நடந்த சம்பவம்

அப்புறம் என்ன? அந்தப் பெரிய மனிதரும் பொலிசாரும் அவனை நையப்புடைத்து சிறையில் தள்ளினர்கள். இதை அறிந்த தங்கம் மற்றப் பிள்ளைகளையும் கிணற்றில் தள்ளி தானும் விழுந்தாள் என்பதுதான் உண்மைக் கதை. ஆனால் உங்களுக்குக் கதைகளில் சோக முடிவு பிடிக்காதாமே. அதற்காக உங்களுடைய முகத்தையும் 'முறிக்க'க்கூடாதென்று கதையை இன்னுமொரு அடி நகர்த்திப் பின்வருமாறு முடிக்கிறேன்:

### நல்ல முடிவு

......தங்கமும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்ததைக் கண்ட எல்லாம் வல்ல இறைவன் இடபவாகனராக ஆகாயத்தில் எழுந்தருளி, என்ன செய்தார் தெரியுமா? கிணற்றுத் தண்ணீரையெல்லாம் கணப்பொழுதில் ஆவியாக மாற்றி ஆகாயத்தில் படிய வைத்துவிட்டு அந்தத் தண்ணீர் இருந்த அடித்தளத்தில் அசல் பஞ்சனை பரப்பிவிட்டார். புண்ணியவதிக்கும் பிள்ளைகளுக்கும் உடலில் தானும் ஊறு ஏற்படக் கூடாது என்ற கருணை அவருக்கு. பின்னர் தங்கத்தைப் பார்த்து, "என் தங்கமே! உனக்கு என்ன 'டிபிக்கல்டி' வந்தது? வேண்டிய வரத்தைக் கேள் அம்மா" என்று சொன்னார். நமது தங்கமான தங்கமும் "அப்பனே" என்று ஆரம்பித்து வேண்டியதெல்லாம் பெற்று நெடுங்காலம் சிரஞ்சீவியாக வாழ்ந்தாள். சுபம்!


உங்கள் அபாயகரமான விரோதி



பயோரியா

ஈறுகளில் இரத்தம் வடிதல்? வாய்ப் புண்? பல்லாட்டம்?

இந்த பயங்கர வியாதி உங்கள் பற்களை விழச் செய்வதுமன்றி, ஆரோக்கியத்தையும் கெடுத்து விடுகின்றது. தேகத்தில் ஏற்படும் வியாதிகளில் 85 சத விகிதத்திற்கு பயோரியா தான் காரணமென பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. ஆயினும் அநேகர் இந் நோயின் அறிகுறிகளை அலட்சியம் செய்து நாளாவட்டத்தில் கடுமையான நோய்க்குள்ளாகின்றனர். நவீன சாஸ்திரிய முறைப்படி தயாரிக்கப்பெற்றுள்ள பயோரிஸான் எந்த நிலைமையிலுள்ள பயோரியாவையும்! நீக்குவதில் கைகண்ட மருந்து பயோரிஸான். ஈறுகளில் இரத்தம் வடிதலை நிறுத்தி, சீழ் பிடிப்பதைத் தடுத்து, பற்களை ஆட்டமில்லாமல், உறுதியாக நிலைகொள்ளச் செய்கிறது பயோரிஸான்.

விலை ரூபா. 3/50

தபால்செலவு பிரத்தியேகம்.

இலங்கையில் சோல் ஏஜண்டுகள்:

பயனீர் பார்மஸி,

183, ஷாப்புத்தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான நான்காவது வாரம்! !



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மோடர்ன் (பதுளை) வெம்பிளி (கண்டி)

ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)

ஆகிய திரைகளில் காட்சியளிக்கிறது

# ★ பதிபக்தி ★


## ஜெமினி கணேசன், சிவாஜி கணேசன்,

சாவித்திரி, சந்திரபாபு, தங்கவேலு, பாலையா, நாகையா,

மற்றும் பலர் நடித்தது.

பின்னணி: டி. எம். சௌந்திரராஜன், ஏ. எம். ராஜா, ஜிக்கி, சுசீலா, வி. என். சுந்தரம்

கதை வசனம்:
எம். எஸ். சோலைமலை




டைரக்ஷன்:
A.பீம்சிங்


இப்பத்திரிகை கொழும்பு தட்டாதெரு 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். [illegible] அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1959 பெப்ரவரி மாதம் 1-ந் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org